வாரப் பதிப்பு விலை சதம் 25

தந்தி மைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

அன்றும் இன்றும் என்றும்
நீங்கள் விரும்பும்




மில்க் வைற்

நல சோப
புகழ்பெற்றது

புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1997 தை திங்கள் 22-ம் நாள் (4—2—1966) வெள்ளிக்கிழமை ஷவ்வால் 12 | இதழ் 37

# ஜீ.ஜீ. திட்டம் கைவிடப்பட்டது

## வட்டமேசை மாநாடு சாத்தியமில்லையென அறிவிப்பு

**வட்டமேசை மாநாடு ஒன்றைக் கூட்டுவதன் மூலமே மொழிப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று சில காலமாக பிரச்சாரம் செய்து வந்த யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இப்பொழுது அத்திட்டம் பயனற்ற ஒன்று என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். இந்த உண்மையை அவரே கடந்த 26-ந்திகதியன்று பாராளுமன்றத்தில் பகிரங்கமாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். அவசர காலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தியதன் மீது நடைபெற்ற விவாதத்தின்போது திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசுகையில் 'நான் வட்ட மேசை மாநாடு கூட்டவேண்டுமென்பதை ஆதரித்து நின்றேன். ஆனல் ஒரு வட்ட மேசை மாநாடு மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் எனது எண்ணத்தை எதிர்க்கட்சியினர் மாற்றிவிட்டார்கள்' என்று கூறியுள்ளார்.**

இலங்கையிலுள்ள அரசியற் கட்சிகள் அனைத்தையும் கொண்ட ஒரு வட்ட மேசை மாநாட்டை கூட்டி அதில் மொழிப் பிரச்சினை பற்றி விவாதித்துத் தீர்வுகாண வேண்டுமென்ற தமது நீண்ட காலத் திட்டத்தை திரு. பொன்னம்பலம் இப்பொழுது கைவிட்டுள்ளார் என்பது பாராளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரையிலிருந்து தெளிவாகியுள்ளது என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். அவரின் இந்த மனமாற்றத்தை அரசியல் வட்டாரம் வரவேற்பதாகத் தெரிகிறது.

தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளிடையே ஒரு பொதுப்படையான ஒற்றுமையைத் தானும் காண்பதற்கு தடையாக இருந்த வட்டமேசை மாநாட்டுத் திட்டம் கைவிடப் பட்டபடியால் எதிர்காலம் சிறப்பாக இருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்களில் கருத்து நிலவுகிறது.

### திரு. ஜீ. ஜீ. யின் பேச்சு

வட்ட மேசை மாநாடு பற்றி திரு. பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் கூறியதாவது;

'மொழிப் பிரச்சினைக்கு — இந்த அரசாங்கத்தைப் போலவே - தாங்களும் தீர்வு காண விருப்பம் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சியினரால் இச்சபையில் கூறப்பட்டது. தாங்கள் ஆட்சிக்கு வரும்பட்சத்தில், மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சிப்போம் என்று ஐ. தே. கட்சி தனது தேர்தல விஞ்ஞாபனத்தில் மக்களுக்குக் கூறியிருந்ததா? இல்லையா? கடந்த பாராளுமன்றப் பொதுத்தேர்தலின்போது மொழிப் பிரச்சினைக்குத் தீர்வு காண ஐ. தே. கட்சிக்கு மக்கள் பரிபூரண உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சி உறுப்பினர்: வட்ட மேசை மாநாடு என்னவாயிற்று?

திரு. பொன்னம்பலம்:

ஐ. தே. கட்சியும் நானும்தான், மொழிப் பிரச்சினையை கட்சி அரசியலுக்கு உட்படுத்தாமல், அதை எல்லோருக்கும் பொதுவான பிரச்சினையாகஎடுத்து முடிவு செய்ய வேண்டும் எனறு கூறினேம். பிரதமர் அப்படிச் செய்ய முடியாது போன நிலைமை ஏற்பட்டமைக்கு உள்ளபடியே வருத்தப்படுவார் எனநான் நம்புகிறேன். ஆனல், இச்சபையில் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்காவின் ஆறரை மணி நேர அதிசப் பிரசங்கித்தனமான பேச்சை — அதுவும் ஒரு பழைய அமைச்சர் என்ற முறையிலும் சுதந்திரக் கட்சியின் ஒரு முக்கிய தலைவர் என்ற முறையிலும் - ஒரே நாடு ஒரே மொழி என்பதே அவர்களின் மாற்றமுடியாத கொள்கை என்பதைக் கேட்ட பின்பு — நான் என் எண்ணத்தை மாற்றிக் கொண்டுவிட்டேன் இப்படிப்பட்ட இனவெறி இட்லரின் காலத்துடன் மறக்கப்பட்டுவிடும் என நான் எண்ணியிருந்தேன். திரு. பீலிக்ஸின் இந்தச் சொற்பொழிவைக் கேட்டபின்பு திரு பீலிக்ஸ் பண்டாரநாயக்கா போன்ற ஒரு மனிதருடன் ஒரு வட்ட மேசையில் அமரநான் தயாராயில்லையென்பதை எனது மக்களுக்குச் சொல்லத் தயாராக உள்ளேன்.

திருமதிபண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில் மொழிப் பிரச்சினையை ஒரு வட்ட மேசை மாநாட்டுக்குக் கொண்டுவருமாறு கேட்டிருந்தேன். பின்னர் திரு. பீலிக்சுடனும் இதுபற்றிப் பேசினேன். எந்த அடிப்

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் மொழிச் சட்டம் அமுலாகிறது

சென்ற மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி (விசேட) சட்ட விதிகள் இம்மாதம் 3-ம் திகதியிலிருந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைமுறைக்கு வரும் எனத் தெரிகிறது. பெப்ரவரி 4ம் நாள் சுதந்திரத்தினத்துக்கு முன்பு தமிழ்மொழி (விசேட) விதிகள் சட்டத்தை அமுலாக்க அரசாங்கம் அவா கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த பல ஆண்டுகளாகச் சுதந்திரதினத்தைக் கரிநாளாக அனுஷ்டித்து வந்த தமிழ்பேசும்மக்கள் இந்த ஆண்டு சுதந்திரநாளை 'இன ஐக்கியத் திருநாளாக' கொண்டாடுகிறார்கள். அதற்கு உற்சாகம் அளிக்கும் வகையில் சுதந்திரதினத்துக்கு முன்பே பெப்ரவரி 3ம் நாளிலிருந்தே தமிழ்மொழி விதிகளை அமுல் செய்ய தேசிய அரசாங்கம் ஆவல் கொண்டுள்ளதாக அறிவிப்படுகிறது.

தமிழ்மொழி(விசேட) விதிகள் சட்டம் நடைமுறைக்கு வந்தவுடன், வடக்கு-கிழக்கு மாநிலத்தில் தமிழ் நிர்வாக மொழியாகிவிடும்.

தமிழ்மொழிச் சட்ட அமுலுக்கு நீதி அமைச்சரே பொறுப்பாக இருப்பாரென்று தெரிகிறது. தமிழ் மொழிச்சட்ட அமலுக்கான வேலைகளைக் கவனிக்க அரசகரும மொழித் திணைக்களத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும் என சுதந்திரன் ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

### காரணம் என்ன?

ஐ. நா. சபைக்குச் சென்று வந்த யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்களுக்கு கடந்த 31-ம் திகதி இரவு ஒட்டேல் தப்பறபேனில் அளிக்கப்பட்ட பெரிய விருந்துபசாரத்திற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்தத் தமிழ் பிரதிநிதியும் செல்லவில்லையாம். குறிப்பாக உடுப்பிட்டிப் பிரதிநிதி, வவுனியாப் பிரதிநிதி ஆகிய இருவரும் சமூகம் கொடுக்காதது பற்றியே விருந்து மண்டபத்தில் பேச்சாக இருந்ததாம்.

இரு வாரங்களுக்கு முன்னர் சுதந்திரனில் வெளிவந்த செய்திக்கும், இவர்கள் இருவரும் சமூகம் கொடுக்காததற்கும் தொடர்பு உண்டா என்று விருந்துக்குச் சென்றவர்கள் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டனராம்.

## புதிய குடியேற்றத் திட்டம்

### படித்த இளைஞர்களுக்காக ஆரம்பமாகிறது

வேலையற்ற படித்த இளைஞர்களுக்கு விசுவமடுக் குளத்திட்டத்தின்கீழ் காணி வழங்கப்படவிருக்கிறது. இக்காணி பரந்தன் முல்லைத்தீவு வீதியில் 12ம் கட்டையில் உள்ளதாகும். இந்திட்டத்தின் கீழ் காணிபெறும்ஒவ்வொருவருக்கும் இரண்டுவருட காலத்திற்கு தினமும் ஒன்றரை ரூபா உதவிப்பணமாகவும், 500 ரூபாவரையிலான உதவிகளும் வழங்கப்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில்விசுவமடுக்குளத்திட்டத்தின் கீழ் மேட்டுநிலப் பயிர்ச் செய்கைக்கு வேலையற்ற இளைஞர்களுக்கு காணித் துண்டுகள் பங்கீடு செய்வதற்கான விண்ணப்பங்கள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படும். இக்காணி பரந்தன் முல்லைத்தீவு றோட்டில் 12ம் கட்டையில் உள்ளதாகும்

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடியேற்ற வாசிக்கும் 3 ஏக்கர் காணி வழங்கப்படும். இதில் 1 ஏக்கர் வீடுகட்டி நிரந்தர பயிர்கள் நாட்ட உபயோகிக்கப்பட வேண்டும். ஏனைய இரண்டு ஏக்கரில் நெல்லைத் தவிர்ந்த சிறுதானியங்கள் செய்யப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் நெற்பயிர் செய்யக்கூடாது. விவசாய பயிற்சியில் தேர்ச்சி பெற்ற மாணவர்கட்கு தெரிவில் முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டஒவ்வொருகுடியேற்றவாசிக்கும் கீழ்வரும் அரசாங்க உதவிகள் வழங்கப்படும்.

நாளொன்றுக்கு உதவிப் பணமாக ரூபா 1/50 வீதம் இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும்.

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



எஸ்.பொன்னுத்துரை

செந்தில் நாதனின் நடைகுணங்களைப் பற்றிக் கொஞ்சக் காலமாகவே நுணுக்கமாக விசாரித்துக் கொண்டுவந்த செல்லப்பாக்கிய ஆச்சி தன்னுடைய மகளான திருநிறைச் செல்வி அன்னலட்சுமியைத் திருமதி செந்தில்நாதனாக்கி வைக்க முன் வந்தாள். 'சாதி சனம்' என்டு பேச்செடுத்தவர்களுடைய நியாயங்களுக்கெல்லாம் செல்லப்பாக்கிய ஆச்சி மசிந்து கொடுக்கவில்லை. 'தகப்பன் ஏதோ குடிவெறியிலை தலை தெறிச்சுத் திரிஞ்சவன்தான். அவனுடைய நிணல்கூட இந்தப் பொடியனிலை படல்லை பொடியன் தங்கக் கம்பியல்லேோ?...கிட்டத்தட்ட முப்பது வயதாகப் போகுது. இந்தக் காலத்துப் பொடியங்கள் முளைக்கக்கு முந்தியே ஒரு பொட்டையைக் கிளப்பிக்கொண்டு ஓடிப்போறுங்கள்... இல்லை, அந்த பொடியனுக்கு இந்த உலகத்திலை ஒரு பெம்பிளையே கிடைக்காது. அதுக்கே வீங்கிக்கிடக்கிறுன்? இல்லைக் கேக்கிறன். அவனுக்கு ஒரு சிங்களத்தியோ சோனகத்தியோ கிடைக்கமாட்டாளே?... நாங்கள் உப்பிடி உப்பிடிக் கழிச்சு வைச்சாத்தான் எங்கடை புள்ளையள் போய் கூழ்ப்பானைக்குள் விழுங்கள்' என்று பல நியாயங்களைக் காட்டி, அவள் தன்னுடைய கட்சியை நிலை நாட்டி விட்டாள்.

செல்லப்பாக்கிய ஆச்சியின் கணவர் இளவயதில் இறந்துவிட, அவளே தன் மகள் அன்னலட்சுமியையும் மகன் நவரத்தினத்தையும் வளர்க்க நேர்ந்தது. 'தாலியறுத்தவளாக, குடும்பப் பொறுப்பைத் தலையிலே சுமந்து பிள்ளைகளுக்கு 'அம்மையும் அப்பனுமாக' இருந்து வளர்க்கும் பெண்களுக்கு இயல்பாகவே உண்டாகும் ஒருவகை ஆண்மைச் சுபாவம் செல்லப்பாக்கிய ஆச்சி இடத்திலும் உண்டு. எத்தனையோ விஷயங்களைத் தனியே நின்று சமாளித்த திறமை; நினைத்தவை நடக்காததினால் ஏற்படும் ஏமாற்றம், நினைத்தபடி ஒரு விஷயத்தை முடித்தால் ஏற்படும் பெருமிதம் ஆகியனவற்றை ஒரே மாதிரியாக ஏற்றுக் கொள்ளுஞ் சுபாவம்; விஷயங்களை வெகு எதார்த்தமாக நோக்கும் கிராமியப் புத்தி;-இவை செல்லப்பாக்கிய ஆச்சியை அனுபவம் மிக்க ஒரு பெரிய மனுஷியாக்கிவைத்துள்ளது.

அத்தகைய செல்லப்பாக்கிய ஆச்சி அவருடைய சுமைகளிற் சிலவற்றைத்தானே சுமக்க, கடந்த பத்து வருடங்களாக செந்தில்நாதன்-அன்னலட்சுமி தம்பதிகளுடைய வாழ்க்கை தேர்போல நடக்கின்றது. இதற்கிடையில் அன்னலட்சுமி பஞ்சாணும் குஞ்சுகளுமாக ஐந்து பிள்ளைகளைப் பெற்றுவிட்டாள். முதல் இரண்டும், நாலாம் காலும் பெண்கள் 'பெண் வளர்த்தியோ பீர்க்கு வளர்த்தியோ' என்று இதை செல்லப்பாக்கிய ஆச்சி அடிக்கடி ஞாபகப்படுத்தத் தவறியதில்லை.

இந்தக் குடும்பப் பொறுப்புக்கள் உத்தியோகத்தில் முன்னேற்றங் காண வேண்டும் என்ற வைராக்கியத்தை அவருடைய உள்ளத்திலே பாய்ச்சி விட்டது. முதல் நான்கு வருடங்களுக்கிடையிலேயே இரண்டும் அடுத்தடுத்துப் பெண்களாகப் பிறந்து விட்டதால், எழு மூச்சாக கிளாஸ்டு சோதனையை ஒரு கை பார்த்துவிடவேண்டுமென்று கங்கணங்கட்டினார். அந்தச் சோதினைமீது மூன்று வருடங்களாகப் படையெடுத்து, அவருடைய செட்டித்தனத்தாலும், செல்லப்பாக்கிய ஆச்சி செல்லச் சந்நிதியான், நல்லூரான், கதிர்காமத்தான் ஆகிய பிரசித்தி பெற்ற தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன்கள் வைத்த பெருபேறினாலும் சித்தியடைந்துவிட்டார். பல விதமான குழப்பங்களும், அபிப்பிராய பேதங்களும் அரசியல் வாதிகள் மத்தியிலும் எழுதுவினைஞர் மத்தியிலும் நிலவிய போதிலும், சிங்களத் தேர்ச்சிச் சோதனையையும் நிச்சலனமாக எடுத்து 'இங்கிறிமென்'டையுங் காப்பாற்றிக் கொண்டார். அவர் மேலிடத்திலிருந்து வரும் ஒவ்வொரு சுற்றிக்கைக்கும் மிகமிகக் 'கீழ்ப்படிந்து' உழைத்துவரும் அரசாங்க ஊழியராவர்.

அவர் எப்படி விசுவாசமான அரசாங்க ஊழியரோ, அதே மாதிரி விசுவாசமான குடும்பத் தலைவர்; விசுவாசமான கணவர்; விசுவாசமான மருமகன்.

வழக்கத்தில், அவர் மாதக் கணக்கில் கொழும்பைக் 'கட்டி'க் கொண்டு கிடப்பார். ஆனால், கொழும்பில் அவளோடை சேட்டை, இவளோடு தொடுப்பு என்ற கதைகள் அவரைப்பற்றி உலவியதில்லை. ஏழு வாய்களுக்கு ஊரிலும், ஒரு வாய்க்குக் கொழும்பிலுமாக



உழைப்பதென்றால் இலேசுப்பட்ட காரியமல்ல. அது அன்னலட்சுமிக்கும், அவள் தாய்க்கும் நன்ருக விளங்கும். அதேபோல, சும்மா ஊருக்கு வந்துபோறதென்டால் எவ்வளவு 'பிடிக்கும்' என்பதும் அவர்களுக்குத் தெரியும். இதனால், அவர்களும் அவரை மிகமிகக் கீழ்ப்படிவுள்ள ஊழியராக்க மிகவும் உதவினார்கள். இவ்விஷயத்தில் செல்லப்பாக்கிய ஆச்சியின் தொண்டு மகத்தானது

எந்தப் பிரச்சினையையும் தானே எதிர்நோக்கிச் சமாளித்துக் கொள்ளும் நெஞ்சுறுதி அவளுக்கு உண்டு. அவள் மருமகனுக்குக் கொடுத்த அந்தப் பழைய வீடும், வளவும்-'சும்மா' கிடக்கும் அந்தப் பனங்காணியும் பெரிய சீதனங்களல்ல. செல்லப்பாக்கிய ஆச்சியே பெரிய சீதனமாக அமைந்தாள். லேடி லோக்கர் நிதியிலிருந்து குறைந்த வட்டியிற் கடன் பெறலாமென்பதை அறிந்து கொண்ட அவள், 'அந்தக் கடனையும் இந்தக்கடனையும்' காட்டி மனுப்போடும்படி தூண்டினுள் செந்தில்நாதன் மனுப்போட்ட பின்னர் 'அவன்ரை காலையும் இவன்ரை காலையும்' பிடித்து, பல தடவைகள் கால்தேய, மாடிப்படிகள் தேய நடந்த பின்னர், கடனை எடுத்துவிட்டார். அந்தக் காசைப் 'பொத்திப்பிடிச்சாப்போலை' வைத்திருந்து, கிராமியச் சாதுர்யம்- சைம்பெண்மைக் கோலம் ஆகிய இரண்டு காய்களையும் வியாபாரப் பகடையில் உருட்டி, ரேட்டுக்கரையிலே கிடந்த நல்ல காணித்துண்டொன்றை 'நாறல் மீன்' விலைக்குவாங்கிய பெருமையும் செல்லப்பாக்கிய ஆச்சியைச் சாரும்.

சும்மா சிவனே என்று இருக்க அவளுடைய சுறுசுறுப்பு என்றுமே விட்டு வைத்ததில்லை. பின்னரும் மருமகனை நெருக்கிப்பிடித்து வீடு கட்டும் நிதி உதவித் திட்டத்தின் கீழ் 'லோன்' எடுக்க வழி வகுத்தாள். அதையும், 'அங்கினை இங்கினை' என்று மிச்சம் பிடிச்சதையும் வைத்துக்கொண்டு வீடு ஒன்றும் கட்டப்பட்டுவிட்டது. புதுமோடி வீடு. எதிர்பார்த்ததைவிடக் கொஞ்சம் அதிகமாகவே கையைக் கடித்துவிட்டது. இதைக்கூட அவளே எங்கேயோவெல்லாம் கடனைப்பட்டுச் சரிக்கட்டினுள். அதை இறுக்குவதற்கு இப்பொழுது வேறொரு கடன் கிடைத்து விட்டது. இந்தக் காசுடன், வாயெல்லாம் பல்லாக, கடனை இறுக்க ஓடுவாள் செல்லப்பாக்கிய ஆச்சி.

செந்தில்நாதன் மனைவி அன்னலட்சுமியைப் பற்றி நினைப்பதிலும் பார்க்க, மாமி செல்லப்பாக்கிய ஆச்சியைப் பற்றிய அதிக சந்தர்ப்பங்களில் நினைவு கூருவார். அவளைப் பற்றி, 'அர்ச்சுக் கிரிச்சுச்' சம்பாரிக்கத் தெரிஞ்சவ. அவ்வின்ரை புண்ணியத்திலைதான் இப்பவே ரெண்டு பொம்புளைப் புள்ளையளுக்கும் ரெண்டு வீடாச்சு. புதிசாக் கட்டின வீட்டைச் சும்மா வெளவால் தூங்கவே விட்டவ? எக்ஸைஸிலைவேலை செய்யிற ஒரு சிங்களவனைத் தேடிப்பிடித்து அவன்ரை குடும்பத்தைக் குடியேற வைத்தா மாதாமாதம் வாடகை தேர் போலை வருகுது. பெரிய சீட்டுக்குக் கட்டுற காசிலை அரைவாசிவிட்டு வாடகைதானே' என்றெல்லாம் நன்றியறிதலுடன் நினைத்துக் கொள்வார்.

ஒரு நிமிடமாவது காலை நீட்டி, ஆறி இருக்கும் சுபாவம் செல்லப்பாக்கிய ஆச்சியிடம் கிடையாது. மாடு-ஆடு-கோழி 'வளப்பு'களும் நடக்கின்றன. இவற்றில் கிடைப்பதை வைத்துக் கொண்டு, அன்றுடக் 'கறிப்புளிச் சிலவை'யும் பார்த்துக் கொண்டு, 'சின்னச் சீட்டு' ஒன்றும் பிடித்து வருகின்றுள். அந்தச் சீட்டுகளிற் கிடைக்கும் பணத்திலேதான், பிள்ளைகளின் காதுகளும் கழுத்துகளும் மின்னுகின்றன. செல்லப்பாக்கிய ஆச்சியின் நிருவாகத் திறமைக்கும், சிக்கனத்திற்கும் இன்னுமோர் உதாரணம் மட்டுந் தந்தாற் போதுமானது.

'கறிப்பாட்டிற்' காகச் சந்தியடியில் நின்று இருபத்தைந்து சதத்திற்கு இறால் மட்டும் வாங்கினுல், அன்று வீட்டிலே பெரு விருந்தாக இருக்கும். வஞ்சகமில்லாமல ஒவ்வொரு பிள்ளைக்கும் ஒவ்வொரு பொரித்த இருலாவது கிடைக்கும. வெங்காயம் வதக்கி, இருல் போட்டு, செல்லப்பாக்கிய ஆச்சி வைக்கிற வெந்தயக் குழம்பைத் தொட்டுக்கொண்டு ஒரு பானை சோறு சாப்பிடலாம். அதுவும் ஒரு கைராசிதான். உப்புப் புளியைச் சரியாகப் போடுவதற்கென்றே படைக்கப்பட்ட விரல்கள். பெரிய 'சபை சந்தி'க்குச் சமைக்கும்பொழுதுகூட, 'எணேய், செல்லப்பாக்கிய ஆச்சி! ஒருக்கா வந்து இதுக்கு உப்பைச் சரியாப் போட்டிட்டுப் போணை' என்று அயலட்டையில் அழைக்காதவர்களில்லை. ஆச்சி சமைக்கும் கறிகளின் சுவையுடன் பிரெஞ்சு சமையற்காரராலும் போட்டியிட முடியாது என்பது செந்தில்நாதன் அவர்களின் கெட்டியான நம்பிக்கையாகும். சும்மா இருல் மூச்சைகளைப் போட்டு உள்ளி, மிளகு 'தட்டி'ச் சேர்த்து ஆச்சி ஆக்கிற 'சொதி'யின் ருசி குறைவோ? 'முருங்கை இலைக்கறி வறை'யின் சுவைதான் குறைவோ? இவை இருந்தால பிள்ளைகள் 'வடிவா வயிறு முட்டச் சாப்பிட்டிட்டு எழும்புங்கள்' என்பது எல்லோருக்கும் தெரியும். இத்தகைய ஒரு நிதி உதவியாளர் கிடைத்தமை செந்தில்நாதனின் பாக்கியமே. இத்தனைக்கும் செல்லப்பாக்கிய ஆச்சி மருமகனை ஆட்டிப் படைக்கும் 'கொடுசூரி' அல்லள். அவள் மருமகனில் 'நல்ல வாரப்பாடு.' அவருக்கு அவள் கொடுக்கும் மரியாதை அண்டை அயலெல்லாந் தெரியும்.

(14ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் ஈழதிறைல் இலவசமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்!

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.




வீர. மகாலிங்கம்,
கிரேக்மோர்

கே: பொதுத் தேர்தலுக்கு முன் திரு. தொண்டமான் சிறிமா — சாத்திரிஒப்பந்தத்தை கிழித்தெறிவேன் என்று மலையக மக்களிடை பிரச்சாரம் செய்தாரே,

ப: அவர் கூறியதில் எதை யாவது இதுவரை சாதித்திருக்கிருரா?

ஃ

எஸ். குழந்தை வேல்,
பெரிய பாராவத்தை.

கே: படித்தவள் படித்தவனை விரும்பும் காலம் போய், இப்போது படித்தவள் பணம் இருந்தால் போதும், அவன் பட்டிக்காட்டானாக இருந்தாலும் சரி என்கிருளே; இது ஏன்?

ப: அவனுக்குப் படித்துக் கொடுக்கும் வாய்ப்பைப் பெறுவதற்காக!

ஃ

ஆர். மணியம்,
முன்னேஸ்வரம்

கே: குயுக்தியாரே, உங்களின் இலட்சியம் என்ன?

ப: மனிதனின் கேள்வி கேட்கும் ஆர்வத்தை வளர்க்கவேண்டுமென்பதே.

ஃ

குமார்,
யாழ்ப்பாணம்

கே: பொன்னம்பலம் கட்சியினர் மக்கள் சபையில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகக் கூறப்படும் மாவட்டசபை மசோதாவை ஆதரிப்பார்களா? எதிர்ப்பார்களா?

ப: ஆதரிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி கிடையாது.

ஃ

கே. திராவிடத்தம்பி,
உந்துகொடை

கே: காதலிப்பது குற்றமா? காதலிக்காமல் இருப்பது குற்றமா.விபரமாகக். கூறுவீரா!

ப: இரண்டும் குற்றமே! காதலிப்பது குற்றம் பெற்ருேரின் கண்ணேட்டத்தில். காதலிக்காமலிருப்பது குற்றம் தற்கால இளவட்டங்களின் போக்கின்படி.

ஃ

எம். எம். அபூபக்கர்,
மன்னர்

கே: இன்பத்தின் எல்லை எது?

ப: துன்பம்.

கே: ஏழையின் மனைவிக்கு மிஞ்சிய சொத்து எது?

ப: கணவன் விட்டுச் சென்ற வறுமை! அவளும் தன் இறுதிமூச்சுவரை அதனை எதிர்த்துப் போராட வேண்டியதுதான்.

கே: யுவதிகளைக் கண்டதும் காளையர் மிரளுவதேன்?

ப: யுவதிகள் பெரிதும் விரும்புவது சிகப்பு நிறமே. சிவப்பைக் கண்டு காளை மிரளுவது இயற்கையே.

ஃ

நா. கலாவதி,
யாழ்ப்பாணம்

கே: தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பெற்றுதருவது தமிழரசுக்கட்சியா? அல்லது பொ. கட்சியா?

ப: பேச்சில் பொ. கட்சி செயலில் தமிழரசுக் கட்சி

ஃ

க. பழனிவேல்,
அக்கரைப்பற்று

கே: உலகத்திலே அதிசயம் மிகுந்த நகரம் எது?

ப: கொழும்பு! உலகிலே அதிகமான குடிசைகள் இந் நகரில்தான் உண்டு. கைக்குண்டு உற்பத்தியும் கசிப்பு விறபனையும் உலகில் வேறு எந்த நகரங்களிலும் இடையா,

தம்பலவத்தை ரங்கன்,
மாந்தொட்டம்

கே: திரு. பொன்னம்பலம் ஐ. நா. சபை போய்வந்தது உலக அதிசயங்களில் ஒன்ருக பொ. கட்சியினர் கருதுவதேன்?

ப: ஐ. நா. வுக்குச்சென்ற இலங்கைத் தூதுகோஷ்டிக்கு முதன்முதலாகத் தமிழர் ஒருவர் தலைமை வகித்ததால்.

ஃ

மா. கயிலாயபில்ளை,
தம்பிலுவில்

கே: கடந்த 8ம் திகதி வேலை நிறுத்தம் செய்தவர்களை இன்றைய தேசிய அரசாங்கம் திரும்பவும் வேலைக்கு சேர்க்காவிட்டால் இவர்களின் கதி என்னவாகும்?

ப: குற்றத்துக்குரிய தண்டனையை பெற்றவர்களின் கதிதான் அவர்களுக்கும்.

ஃ

மு. சிவநாதன்,
கண்டி

கே: யு. என். பி. தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டது போல வட்டமேசை மகாநாடு அமைத்து மொழிப் பிரச்சினையை தீர்க்காதது ஏன்?

ப: ஒரு பிரச்சினையைத் தீர்க்க பல வழிகளுண்டு. அதில் ஒரு வழியைத் தேசிய அரசாங்கம் பின்பற்றியிருக்கிறது. தமிழ் மக்களுக்கு வேண்டியது உரிமை, வட்ட மேசையல்ல.

ஃ

டி. ஆர். பாலசரஸ்வதி,
நீர்கொழும்பு

கே: "நல்லபெண்" என்று பெயரெடுக்க நான் என்ன செய்யவேண்டும்?

ப: சில பல பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதைப் போல நடிக்கப்பழகிக் கொள்ள வேண்டும் இது இக் காலத்தில்! பண்டைய காலத்தில், வெளிச்சமாகவும், அசடாகவும், களைப்பின்றி வேலை செய்யக் கூடியவளாகவும் இருந்தாலே "நல்ல பெண்" என்ற பெயர் கிடைத்துவிடும்.

ஃ

எஸ். கணேசன்,
அனுராதபுரம்

கே: தேசிய அரசாங்கம் பதவி ஏற்றபிறகு வேலையின்மை குறைந்துவரும் அறிகுறிகள் தென்படுகின்றனவா?

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினுக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: ஆம், வேலைவசதிகளை வழங்க அரசாங்கம் சாத்தியமான சகல முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறது. அண்மையில் அடையாள வேலை நிறுத்தம் செய்தவர்களுக்குக் 'கல்தா' கொடுக்கப்படுவதால் இன்னும் இருபதனுயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆனல் ஆண்டு தோறும் ஜி. சி. ஈ. பரீட்சை எழுதும் சுமார் 200,000 பேர் பரீட்சை முடிந்ததும் வேலை தேட ஆரம்பிப்பதல்லவா பெரிய தலையிடியாக இருக்கிறது?

ஃ

வி. ஏகாம்பரம்,
கொழும்பு-13

கே: நாடெங்கிலும் நடத்திய பதுக்கல் வேட்டையில் பல லட்சக் கணக்கான பெறுமதியுள்ள அத்தியாவசியப் பொருட்கள் கைப்பற்றிய பிறகும் சாமான் விலைவாசிகள் குறைவதற்குப் பதிலாக கூடியிருக்கிறதே?

ப: அதிலிருந்து பதுக்கல் வேட்டை பயனற்ற வேலை என்பது தெரிகிறதல்லவா? வர்த்தகர்களின் முழு ஒத்துழைப்பும் பெறுமலன்றி வேட்டைகளால் மட்டும் விலை வாசிகளைக் குறைத்து விடமுடியாது.

ஃ

சி. இராகவன்,
கொழும்பு-5

கே: அடுத்த வீட்டில் இரவு வெகுநேரம் வரை கணவனும் மனைவியும் விளக்கை அணைக்காமல் பேசிக்கொண்டே இருக்கிருர்கள். காரணமென்ன?

ப: இருவருக்கும் கருத்து வேற்றுமை ஆரம்பமாகிவிட்டதுதான் காரணம்.

ஃ

டி. எம். கணபதி,
கண்டி

கே: எங்கள் வீட்டு வழியாகப் பாடசாலைக்குச் செல்லும் ஓர் இளம்பெண், ஒருகையால் தன் சடையைத் தூக்கிச் சுழட்டிக் கொண்டே போகிருளே ஏன்?

ப: நாய் எதற்காக வாலைத் தூக்கி ஆட்டுகிறதோ, அதற்காகவே இளம்பெண் சடையைத் தூக்கி ஆட்டுகிருள் அதுதான திடீரென ஏற்படும் குஷி!

ஃ

ஆர். ஆர். சநாசிவம்,
நாவலப்பிட்டி

கே: ஆடை விஷயத்தில் அக்கறை செலுத்துவது அவசியம் தானு?

ப: ஆம். ஆடை அலங்காரங்கள் பிறருக்காக (தனக்காகஅல்ல) செய்யப்படுவதால் அதில் அக்கறை அவசியமே. உணவு தனக்காக — ஆடை பிறருக்காக!

ஃ

டி. எம். மனோன்மணி,
பதுளை

கே: பாரதப் பிரதமர் பதவியைத் திருமதி இந்திரா ஏற்றிருக்கும் இவ்வேளையில், பாகிஸ்தானிலும், இலங்கையிலும் நடந்த கடந்த பொதுத் தேர்தலில் திருமதி பாத்திமாஜின்னுவும். திருமதி சிறிமாவும் வெற்றி பெற்றிருந்தால் எதிர்கால நிலைமை என்னவாகும்?

ப: "இந்திரா — பாத்திமா — சிறிமா அச்சு ஏற்பட்டு, தென் கிழக்காசியாவையே பொம்மனுட்டிகள் விழுங்கிவிடுவர். அல்லது, பெண்களின் குழாயடிச் சண்டை அரசாங்கச் சண்டையாக மாறி, எந்தப்பிரச்சினையும் தீராமல், எல்லாப் பிரச்சினைகளும் ஒரே குழறுபடியாகிவிடும்.

ஃ

எல். வி. மூர்த்தி,
மட்டக்களப்பு

கே: அதிகமாகச் சிகரெட் பிடித்தால் புற்றுநோய் உண்டாகும் என்கிருர்களே, உண்மையா?

ப: பெருமளவு உண்மைதான்! ஆகையால்தான் சிகரெட் என்பது ஒருபுறம் நெருப்பும், மற்ெருபுறம் ஒரு முட்டாளுடைய வாயும் இருக்கிற ஒருபொருள் என்று கூறினர் பேரறிஞர் ஜான்ஸன்.

ஃ

மலைமகன்,
தமிழுக்கொல்லை

கே: டாக்டர்பெரேராவின்கடந்தகால அரசியலுக்கும், தற்போதைய அரசியலுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குக.

ப: அன்று அவருக்கு அரிசி அரசியலாயிருந்தது. இன்று பாடை அரசியலாயிருக்கிறது.

ஃ

எம். ஏ. நஜீமுதீன்,
அக்கரைப்பற்று

கே: ஜி. ஸி. ஈ. சித்தியடைந்த சில மாணவர்களின் குணம், சித்தியடைவதற்கு முன்னிருந்த குணத்தைவிட வெகு தூரம் மாறிவிட்டது, இந்நிலை ஏனோ?

ப: வேலைதேடும் பட்டாளத்தில் தாங்களும் சேர்ந்துவிட்டோமே என்ற கவலைதான் காரணம்.

ஃ

கணேசன், கல்முனை

கே: பாடசாலை மாணவர்களுக்கு விவசாயம் ஒரு பாடமாகி விட்டதே ஏன்?

ப: பாடசாலைகளிலிருந்து வெளியேறியதும் வேலைதேடி கந்தோர்களின் படிகளில் ஏறி இறங்காமல், நேரடியாக வயலில் இறங்குவதற்காக.

## க வி ஞ ன்

— வே. குமாரசுவாமி —

சீருடைக் கனவை, சிந்தையின் தெளிவை
  சேர்த்திடும் சொற்களின் செழிப்பை,
பாருடை பழகை, கல்லுயிர் வளர்வை
  பாங்குடன் பொலிந்திடும் பொழிலை,
காருடை முகிலே, கடலிடை அலையை
  காந்திடும் கதிரவன் ஒளியை
பேருடைப் பொருளாய், பெருமைசேர்
  மொழியாய்
  சீருறச் செப்பலன் கவிஞன்.

தென்றலிசை விற் சிந்தையை விடுத்தும்
  திங்குயி லிசைசெவி மடுத்தும்
குன்றினிற் தவழ்ந்து குதித்திடு மருவி,
  கூத்திடும் மயில் ஒயில் கண்டும்
கொன்றிடும் அழகுக் குமரியர் பார்வை
  கொட்டிடும் உணர்வினை அளாதும்
நன்றென நயக்க நல்லெழிற் சொல்லால்
  நலமுறத் தீட்டிய ஒருவன்.

பழமையுட் தோய்ந்து பண்புடன் மலர்ந்து
  பாருள மட்டிலும் வாழச்
செழுமையுட்கலந்து, வழுவினைக் களைந்து
  சொற்ெருடர் சுவையுறச் சேர
அழகினை இன்ப அமுதினைப் பெருக்கி
  ஆழ்கடல் முத்தெடுப் பவன்போல்
பழகிய சொல்லாற் பாகெனக் கவிகள்
  படைப்பவன் கவிஞன் ஓர் இறைவன்

'மாய ஜோதி' ஊது பத்திகள்
"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?
★ அதன் சுகந்த நறுமணம்
★ அதன் நிலைத்து எரியும் தன்மை
★ நவீன தயாரிப்பு
★ அதன் நியாய விலை.
நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இன்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

கல்வியே கருந்தனம்

மனதிலுள்ள காரணங்களை
தனக்கே செய்துகொள்ள ஒரு சிறந்த வழி
கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது

தனக்கு தேவையான காரணங்கள் இருக்கின்றனவா என பார்த்துக் சொள்ளவும். அக் காரணங்களை நிவர்த்தி செய்து கொள்ளவும். உங்களது முழு விலாசம் எழுதி முத்திரை ஒட்டப்பெற்ற தரு கடித உறையை அனுப்பி எமது இலவசப் பிரசுரத்தை இன்றே தபாலில் பெறுங்கள்.

கவர்ன்மென்ட் ரெஜிஸ்டர்
மகா மந்திராச்சாரி
பி. எம். திசாநாயக்க,
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
கண்டி ரோட், கம்பளை. டெலிபோன்: 454.

# தமிழ் சோசலிச இயக்கமும் தமிழ் பேசும் மக்களும்

'தமிழ் சோசலிச இயக்கம்' என்ற பெயரில் ஒரு புதிய அரசியற் கட்சி இத்திங்கள் நாலாம் நாள் ஆரம்பிக்கப்படவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இவ்வியக்கத்தை ஆரம்பிக்க இருப்பவர்கள் பழைய சமசமாசக் கட்சியினரும், கம்யூனிஸ்டுக் கட்சியினரும் என்றும் தெரிகிறது.

இந்தஇயக்கத்தை ஆரம்பிப்பதன் அடிப்படை அந்தரங்க நோக்கம் என்ன என்பதும் இடபொழுது தெரிய வந்தள்ளது. சமசமாச, கம்யூனிசக் கட்சிகளின் தென்னிலங்கைத் தலைவர்களின் திட்டமே இப்புதிய 'தமிழ் சோசலிச இயக்கம்.'

தென்னிலங்கையில் தனிச் சிங்கள பௌத்த வகுப்புவாதத்தையும், வட-கீழ் இலங்கையில் தனித்தமிழ் கோஷத்தையும் தூண்டிவிட்டு ஆட்சியைக் கைப்பற்றுவதே இவர்களின் அந்தரங்க நோக்கம். அதற்குஏற்பவே தமிழ் சோசலிச இயக்கம் செயற்படும் என்று நம்ப முடிகிறது.

## கரு

சமத்துவமும், தேசியமும் பேசிய சமசமாசக் கட்சியும், கம்யூனிசக்கட்சியும் இன்றுவகுப்புவாதம் பேசுகின்றன. எந்தச் சுதந்திரக் கட்சியை வகுப்புவாதக் கட்சியென்று வாயாரத் திட்டினுர்களோ அவர்களின் தலைமையையேற்று இன்று அவர்களுக்கே வகுப்புவாதப் பாடம் போதிக்கிறுர்கள் சமசமாஜிஸ்டுகளும், கம்யூனிஸ்டுகளும்.

தீவிர சிங்கள வாதம் பேசிக்கொண்டு வட-கீழ் இலங்கைத் தமிழர்களின் ஆதரவைப் பெறமுடியாது என்பதை நன்கு அறிந்த தென்னிலங்கைத் தலைவர்கள், கடந்த மே தினத்தன்று தாங்கள் நடாத்திய 'தோசைவடை ஊர்வலத்தின்' போதே இத்திட்டத்தையும் உருவாக்கினுர்களாம்.

அன்று உருவான திட்டத்தின் அமைப்பே இன்று செயலாகவிருக்கும் 'தமிழ் சோசலிசஇயக்கம்.' ஏனைய அரசியற் கட்சிகளில் நின்றும் இது மாறுபட்ட முறையிலேயே செயற்படும் என்று தெரிகிறது. ஒரு அரசியற் கட்சியின் நிலையை அடைய விரும்பாமையினுலேயே 'இயக்கம்' என்று பெயர் சூட்டியுள்ளார்களாம்.

இப்பொழுது இடதுசாரிக் கட்சிகளின் ஆதிக்கத்தின்கீழ் உள்ளதொழிற் சங்கங்களைத் தொடர்ந்தும் அதே நிலையில் வைத்துக்கொள்வதே இவர்களின் அவசரமும், அவசியமுமான கடமையாகஇருக்கும். இப்பொழுது தென்னிலங்கையில் உள்ள தொழிற்சங்கங்களின் கிளைகளே வட இலங்கையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் சில மாற்றம் ஏற்படும் என்று தெரிகிறது.

## உருவம்

தென்னிலங்கையில் உள்ள தொழிற்சங்கங்களின் கிளைகள் என்ற நிலை மாறி, தனிச் சங்கங்களாக இவை இயங்கும். ஆனல், இப்பொழுது எந்த தொழிற்சங்கசம்மேளனத்தில் இணைந்திருக்கின்றனவோ, அதிலேயே தொடர்ந்தும் இருப்பார்கள். இதில் மாற்றம் ஏற்படமாட்டாது. உண்மை உருவம் இங்கு புலப்படுகிறது. தமிழ் சோசலிசம் பேசினுலும் பழைய தலைமையை அவர்கள் துண்டித்துக்கொள்ளத் தயாராக இல்லை.

இந்த இயக்கத்தின் கொள்கை பிரிவினையாக நிச்சயம் இருக்கமாட்டாது நாடு பூராவிலும் மொழிச்சமத்துவம் என்ற பழைய சமசமாசக்கொள்கையையே பின்பற்றுவார்கள் என்று நம்பலாம்.

## பிரச்சாரம்

தமிழரசுக் கட்சியை எதிர்த்துப் பிரச்சாரம் மேற்கொள்வதற்கும், பிரச்சாரம் மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெறுவதற்கும் நாடு பூராவும் சம அந்தஸ்த்து என்ற கொள்கையே கவர்ச்சிகரமாகஇருக்கும் என்றஇவர்கள் நம்புகிறார்கள். 'தமிழ் சோசலிச இயக்கம்' சமூகப் பிரச்சினைகளிலும், பொருளாதாரப் பிரச்சினைகளிலுமே கூடுதலாகக் கவனம் செலுத்தும் என்றும் தெரிகிறது.

கிழக்கிலங்கையிலும் அதையடுத்து மலைநாட்டிலும் இவ்வியக்கத்தின் பிரச்சாரம் கூடுதலாக இருக்குமாம். காரணம், கிழக்கிலங்கையில் தமிழரசுக்கட்சிக்கு முன்னையளவு

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

பலம் இல்லையென்று இவர்கள் நம்புவதுடன், கவர்ச்சியான பொருளாதாரத் திட்டம் ஒன்றை முன்வைப்பதன்மூலம் கிழக்கிலங்கையிலும், மலைநாட்டிலும் கூடுதலான ஆதரவைப்பெற முடியுமென நம்புவதே காரணமெனத் தெரிகிறது.

இத்தகைய முன் ஏற்பாடான திட்டங்களுடன் உருவாக்கப்படவிருக்கும் இந்த சோசலிச இயக்கம் எந்தளவு தூரம், தேசியத் தன்மை பொருந்தியதாக, மார்க்சிய-லெனிசிய தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் அமைப்பாகச் செயற்படப் போகிறது என்று பார்ப்போம்.

## முடியுமா?

இன்று வரை தேசியம், ஐக்கிய இலங்கை, இன மொழி கடந்த வர்க்க ஒற்றுமை என்று கூறியவர்கள் நாளை என்ன கூறப் போகிறுர்கள்? மொழிவழித் தொழிற்சங்க அமைப்பு முறை வகுப்புவாதம் என்றவர்கள், தங்கள் நிலை பற்றிக் கூறப்போகும் விளக்கம் தான் என்னே? தமிழரசுக் கட்சி, சுதந்திரக் கட்சி போன்ற கட்சிகளால் நாட்டில் ஐக்கியத்தையோ, சிறுபான்மையினர் பிரச்சினையையோ தீர்க்க முடியாது என்று வாதிட்டவர்கள், ஒரு தனி தமிழ் இயக்கத்தால் எப்படி தீர்க்க முடியுமென்று மக்களுக்கு எடுத்துக் கூறப் போகிறுர்கள்?

ஒரு மொழி பேசும் மக்களுக்காக ஒரு இயக்கம் அமைப்பது வகுப்புவாதம் என்று வாதிட்ட தமிழ் சமசமாஜிகளும், கம்யூனிஸ்டுகளும், இன்று தமிழ் சோசலிச இயக்கம்' என்ற பெயரில் ஒரு மொழி பேசும் மக்களுக்காக இயக்கம் காணுவது வகுப்புவாதம் அல்ல எனகிறுர்களா? அல்லது எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்த் தலைவர்கள் கூறியதை இன்று தான் இவர்கள் புரிந்து கொண்டார்களா?

## திறமை

தோழர் என். எம். பெரேராவை நம்புங்கள். அவர் என்றுமே துரோகம் செய்ய மாட்டார், மார்க்சிய - லெனினிச வாதிகள் என்றுமே இன ஒற்றுமையை விரும்புபவர்கள் என்று கூறியவர்கள் இன்று யாரை நம்பும்படி கூறப் போகிறார்கள்.

தோழர் என். எம். பெரேராவும் தமிழர்களின் விரோதியாக மாறலாம என்பதைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ்த் தலைவர்கள் கூறினுர்கள். இந்த உண்மையை உணர தமிழ் சமசமாஜிகளுக்கு இத்தனை ஆண்டுகள் பிடித்திருக்கிறது. இவர்களின் 'ஆதீத திறமையையும்' தூரதிருஷ்டியையும் 'எண்ணி வியப்பதா' விக்கி விக்கி அழுவதா?

## முகமூடி

தென்னிலங்கைத் தலைமையைத் துறக்கும் வண்ணம் பல மாதங்களுக்கு முன்னம் நாம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்த உண்மையை உணர இத்தனை மாதங்களாஇவர்களுக்குத்தேவைப்பட்டது. அங்ஙனம் பிரிய முற்பட்டிருப்பவர்கள், ஏற்கனவே தமிழ் பேசும் மக்களின் ஒரே இயக்கமாக உள்ள தமிழரசுக்கட்சியுடன் இணைந்து பணியாற்றலாம். இதையாரும் தடைப்படுத்தவில்லை. இதையே தமிழ்பேசும் மக்களும் விரும்புகிறுர்கள். தமிழரசுக்கட்சி இந்நாட்டில் உள்ள ஒரே சோசலிச இயக்கமாகச் செயற்படுவது இவர்களுக்குத் தெரியவில்லையா?

இந்த சமசமாஜிஸ்டுகளும், கம்யூஸ்டுகளும தமிழரசுக் கட்சியில் சேரவோ அல்லது தமிழ் பேசும் மக்களின் முன்னேற்றத்திற்காக உழைக்கவோ மாட்டார்கள். 'தமிழ் சோசலிச இயக்கமும்' அப்படியே. அது தமிழ் என்ற முகமூடிக்குள் இருந்து செயற்பட இருக்கும் ஒரு ஐந்தாம் படை இரட்டை டாக்டரின் இரகசியத் திட்டத்தில் உருவாகும் தமிழ் சோசலிய இயக்கத்திடம் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்கைவைத்தால் அது கானல் நீராகவே முடியும்.


# கீழ்ப்பணியாளரின் உயர்ச்சிக்காய (விசேட) பரீட்சை

மார்ச்சு 1966—பரீட்சார்த்திகளுக்கு பயிற்சிக்கோவை வினவிடை பிரதிகள்—தமிழ், சிங்களம், ஆங்கில மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன:-

விலை விபரம்:-

பாஷையும் கட்டுரையும், ரூ. 5.00

பொது அறிவும், உள்ளூர் அறிவும், பொது புத்தியும் ரூ. 5-00

பக்கக் கூட்டலும், நேர் கூட்டலும் உட்பட எண் கணிதம் ரூ. 5-00

**சர்வகலாசாலைப் போதன கழகம்,**

**540, மருதானை வீதி, கொழும்பு.** த. பெ. இல. 1079


## திரு. செல்வநாயகத்துக்குப் பின்...

# தமிழரசுக்கட்சியின் நிலை என்ன?

**தமிழரசுத் தந்தை பதில் கூறுகிறர்**



க. காசிபதி,
கொழும்பு-11

கே: சாஸ்திரி-சிறீமாவோ உடன்படிக்கை இலங்கை வாழ் இந்தியர்களின் நல உரிமைகளைப் பறிப்பதாகும். இதைத் தமிழரசு கட்சியும் ஒப்புக்கொண்டுள்ளது. எனவே மேற்படி உடன்படிக்கையை இலங்கைத் தேசிய அரசாங்கம் அமுல் நடத்தும் பட்சத்தில் தமிழரசுக் கட்சி யாது செய்ய உத்தேசித்துள்ளது.

ப: இலங்கையில் இருந்து வலோத்காரமாக ஒருவரையும் நாடுகடத்தப்படாது, அப்படி தேசிய அரசாங்கம் ஒருவரையும் நாடு கடத்தாது என நாங்கள் நம்புகிறோம்.

கே: தீண்டாமை ஒழிப்பதின் பொருட்டு இந்து மகாசபை, இந்து ஆலயங்களின் நிர்வாகத்தினர் ஆகிய இவர்களின மாநாடொன்றைக் கூட்டி அவர்களின் ஒத்துழைப்புடன் சகல ஆலயங்களையும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு திறந்துவிடுவதற்கான முயற்சியை மேற்கொள்ள தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுக்கலாமல்லவா?

ப: தீண்டாமை ஒழிப்பதற்கு தமிழரசுக் கட்சி காலத்திற்குக் காலம் வெவ்வேறு இயக்கங்களை நடாத்தி வந்திருக்கிறது. நீங்கள் கூறுவதும் ஒரு இயக்கந்தான். சரியாய் நீங்கள் கூறுவதை நடாத்துவதற்கு காலமும் நேரமும் வந்து பொருந்த வேண்டும்.

சி. பொ. சோமசேகரம்,
வவுனியா

கே: மாவட்ட சபைகள் அமைக்கப்பட்டபின் பாடசாலைகள் எப்பகுதியின் நிர்வாகத்தில் இயங்கும்.

ப: மாவட்ட சபைகளுக்கு எந்தந்தத் துறைகளில் ஆதிக்கம் இருக்க வேண்டும் என்று நானும் பிரதமமந்திரியாரும் கூடித் தீர்க்க வேண்டியது.

(12-ம் பக்கம் பார்க்க)

# வகுப்பு வாதிகள் மீது தீவிர நடவடிக்கை எடுக்கவும்

## இலங்கைப் பிரதமருக்கு தென்னகக் கட்சிகள் வேண்டுகோள்

இலங்கை எதிர்க்கட்சிகளின் வகுப்புவாதப் போக்கிற்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் வண்ணம் இலங்கை அரசாங்கத்திற்கு இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் சபை வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

சென்னையில் இரண்டு தினங்களாக சென்னை சட்டசபை எதிர்க் கட்சித் தலைவர் திரு இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகத்தின் பொதுச் சபைக் கூட்டத்தில் தமிழ் மொழி மசோதா மக்கள் பிரதிநிதிகள் சபையில் தாக்கல் செய்யப்பட்டன்று இலங்கையிலுள்ள எதிர்க் கட்சிகள் நடந்து கொண்ட முறையையிட்டு விசனம் தெரிவிக்கப்பட்டதுடன், தமிழ் மக்களுக்கு எதிராகத் தூண்டிவிடப்படும் வகுப்புவாதச் செயல்களில் முன்னாள் பிரதமராகப் பதவி வகித்த, பொறுப்பு வாய்ந்த திருமதி சிறீமாவோவும் பங்கு கொண்டிருப்பதையிட்டு வருத்தம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை எதிர்க் கட்சிகளின் வகுப்புவாதப் போக்கையிட்டு தி. மு. கழகப் பொதுச் சபை நிறைவேற்றிய தீர்மானத்தில் 'இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரளவு நீதி வழங்கப்படுவதை எதிர்த்து வகுப்புக் கலவரத்தைத் தூண்டுவதற்கு முயற்சித்த இலங்கை எதிர்க் கட்சிகள் மீது சனநாயக முறையில் கடுமையான நடவடிக்கை எடுக்கும் வண்ணம் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைக் கேட்டுக் கொள்கிறோம்' என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

### ம. பொ. சி.

இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் மொழி மசோதா சமர்ப்பிக்கப் பட்டதைத் தொடர்ந்து இலங்கையில் எதிர்க் கட்சியினரால் ஏற்படுத்தப் பட்ட வகுப்புக் கலவரத்தைக் கண்டித்து அண்மையில் திருச்சியை அடுத்த உறையூரில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் பேசியதாவது:-

மொழி உரிமைகளை இலங்கைத் தமிழர்களுக்கு அளிக்க முன்வந்தமைக்காக இலங்கைப் பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவை நான் பாராட்டுகிறேன்.

இலங்கையில் உள்ள சனத்தொகையினரில் மூன்றில் ஒரு பகுதியினர் தமிழர்கள். தமிழ் பெரும்பான்மையாகப் பேசப்படும் இரண்டு மாகாணங்களில் தமிழை ஆட்சி மொழியாக்கியதன் மூலம் திரு. டட்லி சேனநாயக்கா நியாயம் வழங்கியிருக்கிறார். ஆனால் தமிழ் இன்னும் முழு அளவில் ஆட்சி மொழியாக்கப் படாதது வருந்தத்தக்கது.

'பொதுவுடமை வாதிகளும் வகுப்பு வாதிகளுடன் சேர்ந்து கொண்டது கண்டிக்கப்பட வேண்டியதொன்றாகும்.' 'இலங்கையில் நடைபெற்ற சம்பவங்களுக்குக் கண்டனம் தெரிவித்து இந்திய அரசாங்கம் செய்தியொன்றை அனுப்புதல் வேண்டும்.'

இலங்கையிலுள்ள பொதுவுடமை வாதிகளைக் கண்டித்து இங்குள்ள (இந்தியாவிலுள்ள) இடதுசாரி வலதுசாரி பொதுவுடமை வாதிகள் அறிக்கையொன்றை வெளியிடும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எதிர்க் கட்சிகளின் வகுப்புவாதப் போக்குக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கும் வண்ணம் இலங்கைப் பிரதமரை இந்திய திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டிருக்கிறது. இலங்கையிலுள்ள இடதுசாரிக் கட்சிகளின் வகுப்புவாதப் போக்கை எதிர்த்து இந்திய இடதுசாரிக் கட்சிகள் கண்டன அறிக்கை வெளியிட வேண்டுமென தமிழரசுக்கழகத் தலைவர் ம. பொ. சி. கேட்டுள்ளார்.

# முடி நரைக்கிறதா?

## உங்கள் நோய்

பதிலளிப்பவர்: வைத்திய கலாநிதி நா. கந்தையா

சிவகுமார்,
பருத்தித்துறை

கே: அடிக்கடி தலையிடி வருகின்றது. வந்தால் அதிக நேரமிருக்கும் பின் வாந்தி ஏற்படுகிறது. கண் கூச்சமும் ஏற்படுகிறது. இதற்கு யாது செய்வது.

ப: தம்பி! இது மூளை உறை அழற்சி காரணமாக ஏற்பட்டிருக்கின்றது. கபம் தோஷமடைவதனால் இப்படியான சங்கடங்கள் ஏற்படும். இது இடீரெனவரும்; காய்ச்சலும் இருக்கும். வாந்தியுங்கூட. மலக்கட்டிருக்கும். தலைவலியும் வாந்தியும் பொறுக்கமுடியாதிருக்கலாம்.

இதற்கு, அதிவெளிச்சம் கூச்சம் தருமாதலால் நல்ல காற்றோட்டமுள்ள அறையில் மிதமான வெளிச்சத்தில் இருக்க வேண்டும். வெந்நீரால் காலையும் மாலையும் துடைப்பது நன்று. இலகு மலகாரியான மருந்து வகைகள் நன்று. மலபந்தம் இல்லாது தவிர்ப்பது மிகப் பிரதானம்.

இருந்தும் தக்கவோர் வைத்தியசாலைக்கு சென்று வைத்தியரின் நேரடிப் பார்வை சிறந்ததன்றோ!

செல்வி,
சாவகச்சேரி

கே: நான் புஷ்பவதியாகி எட்டு ஆண்டுகளாகின்றன. ஆனால் யௌவனத்தின் எழில் இல்லை. எனது மார்பகங்கள் புடைத்திலது. இதை மறைக்க பிறேஷியர் பாவிக்கின்றேன். தாய்க்குத் தானும் சொல்ல முடியாத நிலை. பெண்ணைப் படைத்தும் கடவுள் இந்நிலைக்கு ஆளாக்கி விட்டான். இதை நினைத்து நான் துக்கப்படாத நாளில்லை. மிகவும் மெலிந்து வருந்துகின்றேன். இந்நிலையில் எனக்கு மணம் வேறு பேசுகின்றார்கள். அந்தோ பரிதாபம். இதற்கு ஏதாவது பரிகாரம் உண்டா டாக்டர்?

ப: இக் கேள்வியை துணிந்து நீர் எழுதியமைக்காக நன்றி. உங்களைப் போன்ற ஆயிரம் ஆயிரம் நங்கை நல்லாள்கள் இப்படியான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் மேநாட்டு வைத்திய முறையில் தகுந்த ஊசி மருந்துகள் இருப்பதாக அறிகின்றேன். எனவே விஷயத்தை உமது அன்புத் தாயிடம் தெரிவித்து, தகுந்த வைத்தியரின் உதவியைப் பெற்று, உங்கள் அங்க அழகைப் பெற்று மணவாழ்வு வாழ்வதே சிறந்த சீரியமுறை.

ஏ. ஆர்.,
மயிலிட்டி

கே: என் உடல் எப்பொழுதும் கனன்று (சூடாக) கொண்டே இருக்கிறது. இதனால் நான் பெரிதும் கவலையடைகின்றேன். இந் நிலை மாறி குளிர்ச்சி பொருந்திய உடலைப் பெறவழி கூற முடியுமா? வயது 29.

ப: சிலருக்கு உடல் இயற்கையாக சூடுள்ளதாக இருக்கலாம். இதற்கு உணவு முறை பிரதானம். நம் நாட்டில் ஏராளமானோர் அரிசிச் சாப்பாட்டுக்காரராக இருக்கின்றார்கள். அவ்வரிசியோ முக்கால் பங்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாவது, அதில் தவிடு என்பதே கிடையாது.

அரிசிச் சத்துக்கு கறிவகைகள் மிகப் பிரதானம். அவை தகுந்த அளவு உயிருட்டி, புரதம், கொழுப்பு அவசியம் தேவை.

எனவே உங்கள் உணவு வகைகளில், பால், முட்டை, இறைச்சி, ஈரல், மீன்வகைகள், பழவகைகள் தாராளமாக இடம் பெறல் அவசியம். இவற்றுடன் ஓர் அடிசிற்கினியாளும் கிடைத்து விட்டால் குளிர்ந்த தண்பொழில் சூழ்ந்த இடம் போலாகுமன்றோ!

வி. சுப்பிரமணியம்,
வவுனியா

கே: .............................?

ப: நண்பர் ஏ. ஆர்., மயி

(9-ம் பக்கம் பார்க்க)



சேகர்: என்ன மச்சான் புதுமாதிரி கலண்டர் போட்ட புஷ் சேட் போட்டிருக்கிறாய்.

குமார்: என்ன மச்சான், செய்கிறது இந்த போயாதினம் வந்து ஒரே குழப்பமாய் இருக்கிறது இப்படியாவது கலண்டர் போட்ட சேட்டை மாட்டிக்கொண்டால் ஒவ்விஸ் நாட்கள் நினைவுவருமெல்லே......


# மினர்வா

## இப்பொழுது

இலகுவான தவணைக் கட்டண அடிப்படையில் உங்களுக்கு வழங்கப்படுகிறது.



★ நுலையான எழில், அற்புதமான கிரியாம்சை
★ அச்சொட்டான அமைப்பு,
★ 3 லாச்சு கொண்ட கபினெட்

கிடைக்குமிடங்கள்:

குருண்டிக் காட்சிச்சாலை
வை. எம். பி. ஏ. கட்டிடம், கோட்டை, கொழும்பு.

மெசர்ற். அந்தனீஸ் ஹாட்வெயர் ஸ்டோர்ஸ் லிமிட்.,
516, ஸ்கின்னர்ஸ் ரோட் தெற்கு, கொழும்பு.
தொலைபேசி: 4261, 4262, 4263.

# அவள்

நிமிடக் கதை

—அன்று திங்கட்கிழமை!

ஏறத்தாழப் பகல் ஒரு மணி ஒன்றரைமணிவரையில் இருக்கலாம். பரமலிங்கம், ஒரு பதிவுத் தபால் அனுப்புவதற்காக அப்பகுதித் தபாற் கந்தோரை அடைந்தான்.

ஏற்கனவே, தனது நண்பன் பாலசிங்கம் இருப்பதைக் கண்டு "என்ன, பாலா இங்கே... ஏதாவது?" என்றிழுத்தான். பதிலுக்குப் பாலசிங்கமும், "ஒரு பார்சல் அனுப்ப வேணும் அதற்காகத்தான்..." என்றான்.

இருவரும், இப்படி உரையாடிக் கொண்டிருக்கையில் தூரத்தில் நின்று கொண்டிருந்த இளம் கன்னியொருத்தி, தற்செயலாகத் திரும்பிய பரமலிங்கத்தின் பார்வையில்பட்டுவிட்டாள். நல்ல அழகு; பழுத்த மாம்பழம் போன்று கனிந்த கன்னங்கள்; வெடித்த கௌவைக் கனிபோல விரிந்த இரு இதழ்கள்; காற்றில் ஆடுவது போன்ற மெல்லிய துடியிடை; வெட்டி விரியும் மீன் விழிகள்... அப்பப்பா! இப்படி அவளின் அழகு, பரமுவை கற்பனையில் ஆழச் செய்து விட்டது.

நண்பன், பாலசிங்கத்தோடு கதையை யெல்லாம் உதறித்தள்ளிவிட்டு மெது மெதுவாக அக்கன்னியின் காந்தக் கவர்ச்சிக்குஇலக்காகி இழுபட்டு அவளருகுக்குச் சென்று உச்சியிலிருந்து, உள்ளங்கால் வரையும் நன்றாகக் கவனித்தான் பரமு.

அவள், கரங்களில் ஒரு கடிதம் இருக்கவே அதில் எழுதப் பட்டிருந்த முகவரியை நன்றாகக் கவனித்துக் கொண்டு, மீண்டும் நண்பனருகுக்கு வந்து பேச்சைத் தொடங்குகிறான்.

எதிர்பாராதவாறு, பாலசிங்கத்தின் கைகளிலிருந்த 'பார்சல்' பரமலிங்கத்தின் கைக்கு மாறவே அதில், எழுதப் பட்டிருந்த முகவரியை சாதுவாகக் கவனித்தான். என்ன ஆச்சரியம்...? சாதாரணமாக நோட்டம் விட்ட பரமலிங்கம், மீண்டும் அந்தப் 'பார்சலை' எடுத்து தன் கண்களுக்குக் கிட்ட உயர்த்தி நோட்டம் விட வேண்டியிருந்தது.

பரமலிங்கத்தின், மேலெல்லாம் என்றுமில்லாதவாறு வியர்த்துக் கொட்டியது. அக்கணமே, அவனுக்கு என்ன செய்ய வேண்டுமென்பதும் தோன்றவில்லை! வந்த வேலையைவிட்டு, திரும்பி வழியே, 'விறுவிறு' வென்று நடக்கத் தொடங்கிவிட்டான் அவன்.

பாலசிங்கமும், அதைப் பொருட்படுத்தவில்லை! அவன், அப்படி நடந்து கொள்ளக் காரணம் இதுதான். அவன், நன்றாக ரசித்து நோக்கிய இளநங்கையின் கரங்களிலிருந்த கடிதத்திலுள்ள முகவரியும் பாலசிங்கத்தின் கையிலிருந்த கடிதத்தின் முகவரியும் ஒன்றாகவிருந்தது. அவள் வேறுயாருமல்ல பாலசிங்கத்தின் சகோதரிதான்!

— 'பட்டணைந்து'

# பதுளை சமத்துவ சங்கம் கண்ட ஞானபண்டிதன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதற்கிணங்க, தோன்றியவர் 'பதுளை ஞானபண்டிதன்' அவர்கள்.

பதுளை சமத்துவசங்கத் தலைவர் உயர் திரு. வ. ஞானபண்டிதன் அவர்களை அறியாதார் ஈழநாட்டில் எவருமிருக்க முடியாது.

கதிர்காமத் திருமுருகன் தொண்டில் உண்மையோடு உழைத்தார் சிலரில், பதுளை வ. ஞானபண்டிதன் அவர்கள் தலைசிறந்தவர்.

தமிழ்ப் பெருங்குடி மக்களின் அறியாமையைப் போக்க, பிரசங்க வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்களின் மூலமும் 1920ம் ஆண்டிலிருந்து 8-2-54ல் இறையடி எய்து மட்டும் ஆற்றியுள்ள தொண்டு தமிழுலகம் உள்ளளவும், போற்றப்படும். என்பது மட்டும் நம்பிக்கை.

1922ல் தலைநகரில் உதயமான தேசபக்தன் என்ற பத்திரிகையை, நடத்துவதற்கு அதன் ஆசிரியர் திரு. கோ. நடேசஐயர் அவர்கட்கு எத்தகை தூரம் பக்கத் துணையாய் இருந்து உதவினார்கள் என்பதை எண்ணும்போது, திரு. ஞானபண்டிதன் அவர்களின் தமிழ்ப் பற்று சிறந்து விளங்கும். 1928ம் ஆண்டு காந்தி அடிகள் ராஜாஜியுடன் இலங்கைக்கு விஜயம் செய்த போது அவர்களை பதுளை நகருக்கு மிகுந்த பிரயாசையுடன் அழைத்துவந்து, மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசவைத்து, மலையக மக்களிடம் தேசிய விடுதலை வேட்கையையுண்டு பண்ணினார்.

1934ம் ஆண்டு பதுளையில், சமத்துவ சங்கத்தை ஆரம்பித்து மலைநாட்டு தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை முறையைச் சீர்திருத்த அரும்பாடு பட்டார்.

தனது முதல் மனைவி தேவி செல்லம்மாள் பிரிவாற்றுமைக்குப் பின்னர் அவர்களின் பெயரால், பதுளையில் தேவிசெல்லம்மாள் வாசிகசாலையொன்றை ஸ்தாபித்து அதற்கென தனியாக ஒரு கட்டிடமும் கட்டி எழுப்பி, மக்களின் அறிவு வளர்ச்சிக்காக ஈந்துள்ளார். இன்று அதே கட்டிடத்தில் சனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபனம் இருந்து வருகிறது.

டசல்வாவையில் காலஞ்சென்ற இராமலிங்கம் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட, சரஸ்வதி வித்தியாலயத்திற்கு, தேவிசெல்லம்மாள் வாசிகசாலையின் நன்கொடையாக, 2000 ரூபாய்பெறுமதியுள்ள புத்தகங்கள் வழங்கியுள்ளார். அதுபோல நாவலப்பிட்டியிலுள்ள இந்து வாலிபர் சங்கத்திற்கும் நன்கொடையளித்ததைபாராட்டாமல் இருக்க முடியாது.

1932ம் ஆண்டிலிருந்தே, கதிர்காமத்தின் விஷயத்தில் விசேட சிரத்தை காட்டி, கதிர்காம ஆலயநிருவாகத்தில் தமிழ் மக்களுக்கு சம உரிமை உண்டென்று கோடேறி பல வழக்குகளை தாக்கல் செய்து வெற்றி பெற்றுள்ளார்.

1934ம் ஆண்டு ஸ்தாபித்த பதுளை சமத்துவசங்கம் ஒவ்வொரு வருடமும் கதிர்காமத் திருவிழாக் காலங்களில் தொண்டர் படையை நிறுவி மக்களுக்குச் செய்துள்ள சேவைகளை எவரும் இதற்குள் மறந்திருக்கமாட்டார்கள்.

யாரையும் குழந்தைகளையும், பிரி... ஞானபண்டி... 8-2-54 இயற்கை எய்தி...

...நேரு, ஐ... திர... ராஜேந்திரப்பிரசாத், ராஜாஜி, முதலிய பெரியார்கள் இவரின் மறைவு

## எஸ். எஸ். நாதன்

தொண்டர் படையினர் தங்குவதற்கென ஞானமடம் என ஓர் மடத்தையும் கதிர்காமத்தில் ஸ்தாபித்துள்ளார். அம்மடம் இப்போது யாத்திரீகர்கட்கு தங்குமிடமாக இருந்து வருகிறது.

குறித்துஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்திருந்தார்கள்.

தன்னடக்கம், பேரன்பு, விருந்தினரை உபசரிக்கும் சிறந்த உபசரணை உள்ளதை

> பதுளை ஞானபண்டிதன் மலையக மக்களின் உயர்வுக்காக உழைத்தவர்களில் ஒருவர். நெறிக்கும், மொழிக்கும் பல வழிகளில் தொண்டாற்றியுள்ளார். அவரின் நினைவு நாளை (8-2-66)யொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. கட்டுரையாசிரியர் திரு. எஸ் எஸ். நாதன் திரு. ஞானபண்டிதன் தோற்றுவித்த பதுளை சமத்துவசங்கத்தின் செயலாளராக இருந்ததுடன், திரு. ஞானபண்டிதனுடன் நெருங்கிப் பழகியவருமாவர்.

உடனே சொல்லும் நல்ல குணம், உள்ளம் நிறைந்த பேரன்பு, இத்தனையும்கலந்த ஓர் உருவமே தலைவர் ஞானபண்டிதன் என்பது மிகைப்படுத்திய சொல் அல்ல.

சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஆகிய மும்மொழியிலும் பாண்டித்தியம் பெற்றிருந்ததோடு, மேடைகளில் ஆதாரப் பூர்வமாக பேசும் பேச்சுகளை கேட்டோர் தங்களின் தப்பான சில பல அபிப்பிராயங்களைக் கூட மாற்றிக் கொண்டுள்ளார்கள் என்பதை பார்த்திருக்கிறோம். அவர் ஒரு சிறந்த மேடைப் பிரசங்கிகளில் ஒருவர். இன்றுடன் அவர்களின் ஆவிபிரிந்து 12 ஆண்டுகள் ஆகின்றன.

இன்று அவரை நாம் ஞாபகத்தில் கொள்ளுவதோடு அவர் விட்டுச்சென்ற, பணியினை தொடர்ந்து செய்து சிறப்புறுவோமாக.

தனது 50 வருட ஆய்வின் பலனைப் பற்பல குறிப்புகள் எழுதித்தந்துள்ளதை அடிப்படையாக வைத்தே, நாம் கதிர்காமத் திருமுருகன் என்ற நூலை எழுதி பொதுமக்களின் பார்வைக்கு வெளியிட முடிந்தது.

திருக்கதிர்காமத்தில் ராமகிருஷ்ணமடம் கட்டி எழுப்பி இருக்கும் இடத்தை, குறைந்த விலைக்கு கொடுத்து தவியதோடு நன்கொடையாகவும் 6000 ரூபாய்களை வழங்கினார்.

இலங்கை இந்திய காங்கிரஸ் ஸ்தாபனத்தில் பல வருடங்கள் பதுளை ஜில்லாத்தலைவராகக் கடமை புரிந்தார். காங்கிரஸ் ஸ்தாபனத்தின் சில பல போக்குகள் தனது கொள்கைகட்குப் பிடிக்காததினால் அதிலிருந்து விலகிக் கொண்டார்.

1948ல் நடந்த இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் பதுளையில், சுயேச்சையாகப் போட்டியிட்டு தோல்வியே கண்டாராயினும், தனது சேவையில் நின்றும். பின்நோக்கவில்லை.

சமத்துவ சங்கத்தின் சேவையின் மூலம் அழியாப் புகழீட்டிய கன்னித்தமிழின் தனயன் வ. ஞானபண்டிதன் அவர்கள். 1885 ஆண்டு மே மாதம். 3-ம் திகதி பதுளையில் பிறந்தார்.

இவரின் தகப்பனார். கருவள்ளியப்பச் செட்டியார் அவர்களாவர்.

உடன் பிறந்தவர்கள். இரண்டு ஆண்களும், 3பெண்களும் மட்டுமே. இவரின் இளைய சகோதரி மட்டுமே இன்றும் உயிருடன் இருக்கிறார்.

முதல் மனைவி மூலம். 4. குழந்தைகளும், இரண்டாவது மனைவி மூலம். 4 குழந்தைகளும், இவருக்குண்டு.

தனது இரண்டாவது மனைவி இராசம்மாள் அம்மை

## அவன் நாமம் என்றும் வாழ்க

— பி ஆர். பெரியசாமி —

கோடானு கோடி மக்கள் பிறந்திட்டாலும்,
குவலயத்தில் புகழ் பெற்றுர் சிலரே உண்டு
நாடாள வந்தவரும் அஃதே போல் தான்
நலம் கூட்டும் அறிஞர்களும் சிலரே ஆவர்
மூடமதி பெற்றேரை திருத்த வேண்டி.
முன் வந்தோர் லட்சத்தில் ஒருவராவர்.
ஆடவராய் தோற்றத்தில் காணலாகும்
அறிவெங்கே உதிக்கிறதோ அவனே மேலோன்

வள்ளியப்பன் பெற்ற திருச் செல்வனாக
வந்த அன்பன் உயர் ஞான பண்டிதனும்
தெள்ளு தமிழ் அறிஞனாய் பெரியோர் போற்ற
சீர் திருத்த செம்மலாய் விளங்கியந் நாள்
உள்ளத்தில் மக்கள் எல்லாம் ஒன்றே என்ற
உயர் ஞான தத்துவத்தை உவந்து நல்க
நல்லவொரு சமத்துவ சங்கம் நாட்டி
நாடறிய ஊரறிய சேவை செய்தான்

அன்புடனே சமத்துவத்தின் சேவை செய்ய
அறிவுடைய தொண்டர் படை ஒன்று சேர்த்து
தென் கதிரைப் பதியினிலே, செல்வந் தன்னில்
தேயிலையின் தோட்டத்தில், ஊரில், நாட்டில்
பண்புடைய பக்தி நெறி ஞானம் எல்லாம்
பகுத்தறிவின் வழி நிற்றல் வேண்டும் என்று
நண்பரிடை வெற்றி போதித்து கண்டான்
ஞான பண்டிதன் ஆன்மா வாழ்க, நாளும்!

கதிர் காமத்திரு முருகன் வரலாற்றேட்டை
கலை ஞான கண் கொண்டு ஆய்ந்து பார்த்து
எதிர்கால மக்கள் எல்லாம் ஏர்க்கும் வண்ணம்
எழுதிடுவிரென்று பல குறிப்பை சேர்த்து
மதி வளர்க்கும் நாதன் அவர் கையில் தந்து
மாண்புடைய தொண்டு செய்வீரென்று
சொன்ன
அதிமதுரத் திரு ஞான பண்டிதனும்
அவன் நாமம் என்றென்றும் வாழ்க
வென்பாம்.

வியாபாரத்திற்கழகு
விளம்பரம் செய்தல்

# சிறிய அமைச்சரவையே சிறப்பாக செயல் புரியும்

திறமையான பணிக்கும், அரசியல் நிர்வாகம் பயிலவும், கட்சிப் போட்டிகளின் சடுமையைத் தடுக்கவும் பாராளுமன்றப்புனரமைப்பு எங்ஙனம் அவசியமோ, அங்ஙனமே, அமைச்சரவையும் புனரமைப்புச் செய்யவேண்டியது அவசியமாகும். இதனுல், இன்று நாம் அனுபவிக்கும் பொருளாதார நெருக்கடி போன்ற அவசரகால நிலைகளை அமைச்சரவை சமாளிக்கக்கூடியதாக இருக்கும். எச்சூழ்நிலைக்கும் இணக்கமாவதற்கும் எச்சூழ்நிலையையும் 'வளைந்துகொடுத்து'க் கையாளுவதும் அமைச்சரவைமுறையின் தனிச்சிறப்பாகும், ஜனுதிபதி ஆட்சிமுறையிலோ, சர்வாதிகார ஆட்சிமுறையிலோ, மக்கள் அதிகாரத்திலிருப்பவரைஏற்றுக்கொள்ளவேண்டும்; அவ்வதிகாரியை நிராகரிக்கும் உரிமை அவர்களுக்குக்கிடையாது. ஆனுல் அமைச்சரவை ஆட்சிமுறையில், தேவைக்கு ஏற்ப எவரும் பிரதமராக ஆக்கப்படலாம்; பதவியினின்றும் நீக்கவும்படலாம்.

## யுத்தகால முறைகள்

யுத்தகாலத் தேவையையொட்டி அஸ்குவித் பிரதமர் பதவியினின்றும் நீங்கி லோயிட் ஜோர்ஜ் பிரதமர் பதவிக்குவரலாம்; சேம்பர்லின் பிரதமர் பதவியினின்றும் நீங்க, சேர்ச்சில் பதவிக்கு வரலாம். அத்துடன், லோயிட் ஜோர்ஜ், சேர்ச்சில் ஆகியோர் செய்ததைப் போன்று அவசரகாலத் தேவைகளையொட்டித் திடீர் நடவடிக்கைகளைமேற்கொள்வதற்காக அமைச்சரவையை 'இறுகப்பிணைந்ததாக' திருத்தியமைப்பதும் சாத்தியமாகும். எமது தற்போதைய நிலையில் இன்றைக்கு நாட்டை அழுத்துகின்ற பொருளாதாரப் பிரச்சினைகளில் முழுக் கவனத்தையும் செலுத்தக் கூடிய ஓர் சிறிய அமைச்சரவையே எமக்கு வேண்டியதாகும். எடுத்துக்காட்டாக, லோயிட் ஜோர்ஜ் திறமைசாலிகளாக முதலில் ஐவரையும் பின்னர் அறுவரையும் கொண்ட ஓர் சிறிய அமைச்சரவையின் துணையுடனேயே (முதலாம் உலகப்) போரில் வெற்றியுறமுடிந்தது எடுத்துக்காட்டாக1939ம் ஆண்டு இரண்டாவது உலகயுத்தம் மூண்டவுடன் அன்றைய பிரதமர் நெவில் சேம்பர்லின் ஒன்பதின்மரைக் கொண்ட ஓர் தெரிவுசெய்யப்பட்ட அமைச்சர்களைக்கொண்ட 'உள்ளுறை' அமைச்சரவையை நிறுவினுர் சேர்ச்சில் அவர்கள் அமைச்சர்களின் தொகையை ஐந்தாகக் குறைத்தார். ஆயினும், பின்னர் அமைச்சர்தொகை ஐந்துதொட்டு பத்துவரையில் வேறுபட்டது.

## சிறிய அமைப்பே சிறப்பானது

சிக்கல் சூழ்ந்த காலங்களில், அமைச்சரவையின் அளவைக்குறைப்பதன் மூலமே திடமும் பயனும் விரைவும் மிக்க விவாதங்களும் தீவிரமான நடவடிக்கைகளும்சாத்தியமாகுமென்பது இதனுல் அறியமுடிகிறது. எந்த அவசர நிலைமையையொட்டியும் அமைச்சரவை உருவாக்கும் மசோதாக்களை மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளும் கடப்பாடு பாராளுமன்றத்திற்கு இருக்கிறது என்பது உண்மையேயாயினும், இதுசபையிலுள்ள அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலத்தாலும், ஓரளவுக்குக் குழுமுறையைக் கைக்கொள்வதனுலுமே முடிகிறது. எமது நாட்டில் நாம் அமைக்க முற்படுவதுபோல பதின்மூன்று பகினுன்கு அமைச்சர்களைக் கொண்ட ஓர் அமைச்சரவை, பயங்கரமான ஓர் பொருளாதார நெருக்கடிபோன்ற அவசரகாலத் தேவையைச்சமாளிப்பதற்கு இயக்க முடியாத ஓர் அமைப்பாகும். பிரச்சினைகள் எழும்போது அவ்வப்போது உடனுக்குடன் சமாளிப்பதற்கும், நீண்டகாலத் தேவைகளையும் குறுகியகாலத் தேவைகளையும் அடிப்படையாகக்கொண்டு திட்டமிடுவதற்கும் ஓர் சிறிய அமைச்ச

ஓர் மன்றத்தின் அவசியம் பற்றி குடியரசின் சனுதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் இந்நாட்டில் எமது நிலைக்கும்பொருத்துமாகையினுல், அவ்வறிக்கையிலிருந்து மேற்கோள் தருவது பயனுடையதாகும். 'தனிப்பட்ட திணைக்களங்கள்

தோர் மன்றத்தை அமைப்பதற்கு விதி வகுத்துள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் (இங்கிலாந்தில்), 1930ம் ஆண்டு, இராம்சே மக்டனுல்ட அவர்களுடைய அரசாங்கம், பிரான்சிலும், செர்மனியிலும் குறிப்பிட்ட மன்றங்கள் எத்தகைய தேவைகளைப் பூர்த்தி செய்தனவோ


**கலாநிதி அ. ஜெயரத்தினம் வில்சன்**

**அரசியல் விரிவுரையாளர்,**

**இலங்கைப் பல்கலைக் கழகம், பேராதனை.**


தேசிய பொருளியல் நட்புகளை கட்டுப்படுத்தவும் வளர்க்கவும் கூடியனவாக போதியளவுக்கு பொருளியற்றுறையுடன் உறவாடவில்லை என்பதாலும், ஒரு துறையின் பிரதிநிதித்துவத் தகுதியற்றவரும், அத்துறையில் நுண்ணறிவும் விசேடவித்தகமும் வாய்ந்தவரு

அதே தேவைகளுக்காக, பொருளியல் ஆலோசனை மன்றங்களை நிறுவியது. எமது நாட்டிலும் இத்தன்மையதோர் பொருளியல் மன்றம் அவசியமாகும். அத்தகைய மன்றத்திஞல் அமைச்சரவைக்கும், பாராளுமன்றத்திற்கும், அரசாங்கத் திணைக்களங்

யை அமைச்சரவை பெறக்கூடியதாக உள்ளது. இங்ஙனமாக, அரசாங்கக் கொள்கை உருவாக்கத்திற்கும் அமுலாக்கத்திற்குமிடையில் தொடர்பு ஏற்படமுடிகிறது இல்லையானல், டொனமூர் காலத்தில இருந்த நிலைபோன்று, அமைச்சர்கள் சட்ட சபையில் கண்டிக்கப்பட்டபோதெல்லாம் அவர்கள்(அமைச்சர்கள்) அதிகாரிகளைக் குறைகூறும் நிலை, இன்றும் ஏற்பட்டிருக்கலாம். ஆகவே, இன்றையபணி, இற்றை நிலையை ஒழுங்குபடுத்தி இந்திய வழக்கையொப்ப சீராக்குதலாகும்.

## இந்தியாவில்......

இந்தியாவில், அரசாங்கம் அரசாங்க சேவை ஆணைக்குழுவுடன் மாறுபடும் கட்டங்களில், ஆணைக்குழுவின் சிபாரிசுகளை ஏற்கமுடியாத காரணங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் வசதி அரசாங்கத்திற்கு உண்டு; அமைச்சுப் பொறுப்புணர்வும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுதந்திரத் தன்மையும் இணக்கமுறுவதற்கு இது திருப்திகரமான வழியாகும். இம்முறையை நாமும் இங்கு கடைப்பிடிக்க வேண்டும். தற்போது வரவு செலவுத் திட்டத்தின் போது, அரசாங்க சேவை ஆணைக் குழுவின் நிதியொதுக்கீடு பரிசீலனையின்போது, தவிர்ந்த ஏனைய சமயங்களில் ஆணைக்குழு பாராளுமன்றக் கண்டனத்தினின்றும் விதிவிலக்குப் பெற்றுள்ளது. ஆகவே, அமைச்சர்கள் தாம் விரும்பியவற்றை அரசாங்க சேவை ஆணைக் குழுவினைத் தமது செல்வாக்குக்குட்படுத்தி சாதிக்கக்கூடிய நிலையில் உள்ளனர்; அதே நேரத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு அனுபவிக்கும் கண்டன விதிவிலக்கின் அனுசரணையினுல், இவ்வமைச்சர்களும் பாராளுமன்றக் கண்டனத்திலிருந்து பாது

(10-ம் பக்கம் பார்க்க)

அரசியலமைப்பு மாற்றத்தின் அவசியம் பற்றிய இக் கட்டுரைத் தொடரின் முதல் மூன்று அத்தியாயங்களிலும், அரசியலமைப்பில் உள்ள பிரச்சினைகளை எடுததுவிளக்கிய கட்டுரையாசிரியர், இக் கட்டுரையில் நிர்வாக முறை மாற்றங்கள் பற்றி எடுத்துவிளக்கியுள்ளார். சிறிய அமைச்சரவையே காரியங்களைத் துரித வேகத்துடன் செயற்படுத்துமென்றும், பொருளாதார மன்றம் ஒன்று நிறுவப்பட்டு, அம்மன்றம் அவ்வப்போது அமைச்சரவைக்கு ஆலோசனை கூறவேண்டுமென்றும், சுதந்திரமான அரசாங்க சேவை ஆணைக் குழு பற்றியும், நிரந்தரச் செயலாளர்கள் பற்றியும் இக் கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது தமது கருத்துக்கு ஆதாரமாக பல நாடுகளில் நடைபெற்ற—நடைபெறுகின்ற—நிர்வாக முறைகள் பற்றியும் ஆசிரியர் விளககியுள்ளார்.

ரவையே சிறப்பான அமைப்பாகும்.

## பொருளியல் மன்றம்

தலையாயபணியான பொருளாதார நெருக்கடியைக் கையாளும் பணியில, அமைச்சரவைக்கு பொருளியல் வல்லுனர்களினதும், ஏனையோரினதும் தொழிற்றுறையாளரினதும் துணை அவசியமாகும். அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கும் பணிக்கு, திட்டமிடும் திணைக்களங்களும், மத்தியவங்கியும் இருப்பது உண்மையேயாயினும், அரசி

மானவர்களின் ஆலோசனை, அவ்வத்துறை சம்பந்தப்பட்ட வரையில் பயன்படுத்தப்படல் வேண்டுமென்பதாலும், செம்மையாகப் பிணைப்புறுத திட்டங்களை விடுத்து, ஒருமைப்பட்ட திட்டங்களை உருவாக்கவும், பொது மக்கள் கருத்துப் பரிவர்த்தனை செய்யவும் ஒரு அரங்காகப் பயன்படவும், திணைக்களங்களுக்கும், பாராளுமன்றத்திற்கும் ஏனைய அமைப்புகளுக்கும் தலையாய விளக்கத்தைத் தரவும்,' இத்தகையதோர் பொருளியல் மன்றம் அவசியமென அவ்வறிக்கை கூறுகிறது. இம் மன்றம்

களுக்கும் அரிய ஆலோசனைகளை வழங்க முடியும். இன்றைய நெருக்கடியை நீக்கி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் எத்தகைய பொருளியல் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் இது கருத்துத் தெரிவிக்கலாம்.

## நிர்வாகம்

அரசாங்கம் திறமையான முறையில் பணியாற்ற வேண்டுமாயின், மன நிறைவும் கூட்டுறவும் மிக்கதோர் அரசாங்க சேவையாளர் அமைப்பு வேண்டும். அரசியலமைப்புத் திட்டத்தின் படி, நியமனங்கள், வேலை

## அரசியலமைப்பு மாற்றத்தின் அவசியம்

யலமைப்புத் திட்டத்தில் கணிப்புப்பெற்றுள்ள 'வல்லுனர்களைக்கொண்ட பொருளியல் மன்றம்' பற்றிய குறிப்பை நாம் புறக்கணிக்கவியலாது. பிரெஞ்சு நாட்டின் மூன்ருவது குடியரசின் போது, 1925ம் ஆண்டு 'நாட்டின் பொருளாதார வாழ்வுப் பிரச்சினைகளை ஆராயவும், அவற்றிற்குத் தீர்வு காணவும், அரசாங்க அதிகாரபீடங்களினுல் அவற்றைச் செயற்படுத்தவும் ஓர் தேசிய பொருளியல்மன்றம் நிறுவப்பட்டது. அத்தகைய

ஓர் ஆலோசனை சபையாக இயங்கியது. நான்காம் ஐந்தாம் குடியரசுக்களும் இவ்வழக்கை தொடர்ந்து கைக்கொண்டன. உவைமர் குடியரசின்கீழும் இத்தகையதோர் மன்றம் அமைந்திருந்தது. '(நிர்வாக) நெருக்கத்தைக் குறைக்கவும், அரசாங்க அலுவலக அமைப்புகளை ஊக்குவிக்கவும், அரசாங்கத்திற்கும் சட்டசபைக் குழுக்களுக்கும் ஆலோசனைத் துணை புரியவும்...' இங்கு ஓர் பொருளியல் மன்றம்அமைக்கப் பெற்றது.

மாற்றங்கள், வேலை நீக்கம், ஒழுங்குக் கட்டுப்பாடு இவற்றைச் செய்வதற்கு ஓர் பாரபட்சமற்ற சுதந்திரமான தன்மையுடன் அரசாங்க சேவை ஆணைக் குழு அமைய வேண்டும். ஆனுல் அத்தகைய உணர்வுடன் ஆணைக்குழு பணியாற்றவில்லையெனவும், குறிப்பாக உயர்தர பதவி நியமனங்கள் சம்பந்தமாக அது பாரபட்சமின்றி நடக்கவில்லையென்பதையும் அன்றூட அனுபவங்கள் காட்டுகின்றன இந்த ஆணைக்குழு ஏகபோக சுதந்திரம் அனுபவிக்கத்தலைப்படின் அமைச்சரவைக்கும் துணைக் குழுவுக்குமிடையில் போட்டி வளரலாம் என்பதும் உண்மையே. அரசாங்கத்துடன் ஒத்துப் போவதற்கு ஆணைக் குழு தயாராயிருப்பதனுல், நமது நம்பிக்கைக்குரிய ஆணைக் குழு அதிகாரிகளின் சேவை

''பிரச்சினைகளை உடனுக்குடன் சமாளிப்பதற்கும், நீண்டகாலத் தேவைகளையும் குறுகிய காலத் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு திட்டமிடுவதற்கும், ஓர் சிறிய அமைச்சரவையே சிறப்பான அமைப்பாகும்''

## மன்றத்தின் பொறுப்பு

மேற்கு ஜெர்மனிய சமஷ்டிக் குடியரசும் அதன் அரசியலமைப்புத் திட்டத்தில் இத்தன்மைய


**ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம்**



இதனை தலைக்கு வைத்துவரின் தலைவலி, கண்வலி, காதுவலி, செவிடு, கண் பார்வை மட்டு, உச்சி, கண், கை, கால், தேக எரிச்சல், காதடைப்பு, பீனிசம் முதலியவைகளைக் குணப்படுத்தி தலைமயிரைக் கறுத்த நிறத்தோடு நீண்டு அடர்த்தியாக வளரச் செய்யும்.

புட்டில் 1க்கு ரூ. 3-50
தபால் செலவு 1-10 சதம்

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# சுதந்திரன்

SUTANTIRAN

1966 பெப்ரவரி மாதம் 4-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411   த. பெ. 1183


## சுதந்திரத்தினம்

இன்று சுதந்திரத் தினம்! இவ்வாண்டில் நாடெங்கும் இத்தினம் புதிய உத்வேகத்துடன் கொண்டாடப் படுகிறது. இக் கொண்டாட்டங்களில் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் அனைவரும் எத்தகைய சமய' இன, மொழி வேறுபாடுமின்றி கலந்து கொள்கின்றனர். தேசிய அரசாங்கம் சிருஷ்டித்துள்ள புதிய அரசியற் சூழ்நிலையால் ஏற்பட்ட நல்லெண்ணமும் இன உறவுமே இதற்குக் காரணம்.

இன்று நாட்டு மக்களிடையே ஐக்கிய உணர்ச்சி காணப்படுகிறது. சிங்களவர்—தமிழர் நல்லெண்ணம் மீண்டும் தோன்றியுள்ளது. இதனால் இரு இனங்களிடையே நிரந்தரமான ஒற்றுமை ஏற்பட வழி பிறந்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளில் முதற் தடவையாக தமிழ் பேசும் மக்கள் சுதந்திர தினத்தைச் சுதந்திரத் தினமாகக் கொண்டாடுகின்றனர். இதற்கு முன்பு அது அவர்களுக்குத் துக்க தினமாகவே இருந்தது. 1948ல் நாடு சுதந்திரம் பெற்றதாகக் கூறப்பட்டதெனினும், அதன் முழுப் பயனைச் சிறுபான்மையோர் அடைய முடியாதிருந்தது. அவர்கள் உரிமைகள் பறிக்கப்பட்ட இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்பட்டிருந்தனர். அந்த உரிமைகளை மீட்பதற்காகப் பெரும் போராட்டங்களையும் நடத்த வேண்டியதாயிற்று. எனவே அவர்களுக்குச் சுதந்திரம் சுதந்திரமாக அன்று இருக்கவில்லை.

தேசிய ஆட்சி ஏற்பட்ட பின்னர் நிலைமை மாறிவிட்டது. பிரதமமந்திரி உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில் உறுதியாக இருப்பதால், அரசாங்கத்தில் மட்டுமின்றி நாட்டிலும், ஓர் ஸ்திரத தன்மை ஏற்பட்டுள்ளது தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கபடுவதால், மக்களிடையே நல்லெண்ணம் தோன்றியுள்ளது. தமிழ் மொழிச் சட்ட விதிகளை நிறைவேற்றியதால் சிறுபான்மை மக்களின் அச்சம் அகன்றுள்ளது. இந்த ஆட்சியின் கீழ் இழந்த உரிமைகளை மீண்டும் பெற முடியும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கையே சிங்களவர் - தமிழர்களிடையே இன ஒற்றுமைக்குத் தூண்டுகோலாகியுள்ளது.

இக்காரணங்களை முன்னிட்டு இன்று தமிழ் பேசும் மக்களுக்கும் சுதந்திரத்தின் பலனை ஓரளவு அனுபவிக்கக்கூடிய நிலைமையும் வாய்ப்பும் தோன்றியுள்ளன ஆகவே அவர்கள் பெரும்பான்மை மக்களுடன் கைகோத்து கொண்டு சுதந்திர தினத்தைச் சுதந்திரமாகக் கொண்டாடுகின்றனர்,

சுதந்திர தினத்தை முன்னிட்டு தமிழரசுத்தந்தை விடுத்துள்ள ஓர் அறிக்கையில் சமநீதி அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் இத்தினத்தைக் கொண்டாட வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்.

மக்களின் ஒரு சாராருக்கு அநீதி இழைக்கப்படுமாயின், அங்கே சம நீதிக்கு இடமில்லை. தமிழ்ப் பேசும் மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுவார்களாயின், அவர்களுக்கும்—சிங்களம் பேசும் மக்களுக்குமிடையே சம நீதி, சம நிலை, சமத்துவம் ஏற்பட வழியில்லை இன்று அந்த நிலை மாறிக்கொண்டு வருவதால், சம நிலை அடிப்படையிலேயே நம் மக்கள் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது சரியே.

இதற்கு முந்திய சுதந்திரத் தினங்களைத் தமிழ் பேசும் மக்கள் கரிநாளாகக் கொண்டாடிய போது, அபகரிக்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மீட்கும் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். ஆனால் இன்று ஒற்றுமையை வளர்க்கும் பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமென்று தமிழரசுத் தந்தைவேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒற்றுமையில் இரு அம்சங்கள் உண்டு. ஒன்று தமது முகாமினுள் ஒற்றுமை-மற்றது தேசிய ஒற்றுமை. தமிழ் பேசும் மக்களின் மத்தியில் நிரந்தரமான ஒற்றுமை நிலவ வேண்டும். இந்த ஒற்றுமைதான் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்த அடிப்படையாக அமையும். பிறருடன் ஒற்றுமைப்பட வேண்டுமானால், முதலில் தம்மிடையே ஒற்றுமை இருக்கல் வேண்டும். எனவே தமிழ் பேசும் மக்கள் எந்தப் பிரச்சினையிலும் ஒன்றுபட்டு நிற்கும் ஒருமைப்பாட்டை வளர்த்துக் கொள்ள இன்று சங்கற்பம் பூண வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் சுதந்திரத்தினத்தைக் கொண்டாடுவதின் மூலம் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தையும் நட்பையும் பெற முடியும் என்பது இன்று உண்மையே. இதனால் இதுவரை மனமாறாதிருந்த சிங்கள மக்களுக்கும் மனமாற்றம் ஏற்படுமென்பதில் ஐயமில்லை. தேசிய அரசாங்கத்தின் பாரபட்சமற்ற நடவடிக்கையின் மூலம் சிறுபான்மையோருக்கு மனமாற்றம் ஏற்படும் போது, பெரும்பான்மையோருக்கும் மனமாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாதது இதனால் இரு சாராரிடையே அவநம்பிக்கை அகன்று பரஸ்பரம் நல்லுறவு வளர்ந்து உறுதியான அடிப்படையில் தேசிய ஐக்கியம் உருவாகும்.

நாட்டிலே ஐக்கியமும், நல்லுறவும் வளர்ந்துவரும் இவ்வேளையில் எதிர்க்கட்சிகளின் போக்கு பெரிதும் கண்டிக்கத்தக்கதாகும் தேசிய ஒருமைப்பாட்டைச் சிதைத்து, நாட்டின் பொருளாதாரத்தைக் குலைத்து, மக்களைப் படுகுழியில் தள்ளும் ஒரு நாசகரமான கொள்கையை எதிர்க்கட்சிகள் பின்பற்றி வருகின்றன. இதனால் எதிர்க்கட்சியினர் சிறுபான்மை மக்களின் பகைமையைத் தேடிக்கொண்டதுடன், சிங்களமக்களிடமிருந்த ஆதரவையும் இழந்துவருகின்றனர். இத்தகற்கொலைக் கொள்கை அவர்களை நிரந்தரமாக எதிர்க்கட்சியிலே வைத்திருப்பதற்கு மட்டுமே உதவமுடியும்.

தேசிய அரசாங்கத்துக்கும், பிரதமமந்திரிக்கும் தமிழ் பேசும்மக்கள் முழு ஒத்துழைப்பையும் அளிக்கவேண்டிய அவசியத்தை இப்பத்திரிகையில் பன்முறை வற்புறுத்தியுள்ளோம். குறிப்பாக தமிழ்பேசும் இனத்தின் நலனை முன்னிட்டும் பொதுவாக நாட்டுமக்களின் நலனை முன்னிட்டும் பிரதமமந்திரியின் கையைப் பலப்படுத்தவேண்டியது அவசியமாகும். பிரதமருக்கு அளிக்கும் ஆதரவு ஜனநாயகம் ஓங்கவளர உதவிசெய்வதாகும்—சிறுபான்மையோர் தங்களின் உரிமைகளைப் பெற்று ஏனைய மக்களுடன் சரிநிகர் சமானமாக இந்நாட்டில் வாழ்வதற்கு வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதாகும். எனவே அரசாங்கத்துக்கும் பிரதமருக்கும் எல்லா துறைகளிலும் பக்கபலமாக நிற்பது தமிழ்பேசும் மக்களின் இன்றையக் கடமையாகும்.

# திரு. ஜீ. ஜீ. மனமாற்றம்

## வட்டமேசை மாநாடு பயனற்றதென அறிவிப்பு

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒரு அதிசயமான நிகழ்ச்சிகடந்த 26ம் திகதி நடைபெற்றுள்ளது. 27ம் திகதிய தினசரி ஏடுகளைப் புரட்டியவர்கள் எல்லாம் மூக்கின்மேல் விரல் வைத்து அதிசயப்பட்டார்கள்.

இந்த ஆச்சரியப்படக்கூடிய அதிசயத்தை 26ம் திகதி, நேரில் கண்ணால் பார்த்து, காதால் கேட்டு தன்னையே நம்ப முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டவர் இந்த பத்திரிகையை எழுதும் உங்கள் நிருபர்.

கண்கள் இரண்டையும் நன்றாகத் துடைத்துவிட்டு, இப்பொழுது பேசிக்கொண்டு நிற்பவர் யாழ்ப்பாணத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரான சாட்சாத் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தானா என்பதை, பாராளுமன்ற பத்திரிகையாளர் கலரியிலிருந்து எட்டியெட்டிப் பார்த்தார் உங்கள் நிருபர். அது திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமேதான் என்பதை ஐயமறத் தெரிந்துகொண்ட போதிலும் சந்தேகம் நீங்கவில்லை.

பாராளுமன்றஉத்தியோகபூர்வமான 'கான்சாட்' பிரதியைப் படித்துப்பார்த்த பின்னரே சந்தேகம் நீங்கப் பெற்றது. இத்தகைய வரலாற்று முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சி வேறு ஒன்றுமல்ல. உயர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்கள் மக்கள் பிரதிநிதிகள் சபையில் வட்டமேசை மாநாடு பயனற்றது என்று கருத்தப்பட பேசியதே இந் நிகழ்ச்சியாகும்.

### திரு. ஜீ. ஜீ யின் பழைய பாதை

எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்கவேண்டுமானால் தான் மூக்கறுபட்டாலும் கவலையில்லையென்ற இலட்சியத்தைக்கொண்ட திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் முதற் தடவையாக தமது கொள்கை ஒன்று அமுல்நடத்த முடியாதது என்ற கருத்துப்பட பேசினால், அது வரலாற்று ஏடுகளில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதே. இதில் யாருக்கும் இரண்டுபட்ட கருத்துத் தேவையில்லை.

தனித் தமிழ்நாடு, சமஷ்டி அரசியலமைப்பு, ஐக்கிய இலங்கை, மீண்டும் தனித் தமிழ்நாடு என்று கூறிவந்த திரு. பொன்னம்பலம்கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக ஒரே நிலையாக நின்று மொழிப் பிரச்சினையைத் தீர்க்கவட்ட மேசை மாநாடு கூட்டவேண்டுமென்றார்.

வட்டமேசை மாநாடு மொழிப்பிரச்சினையைத் தீர்க்க உதவாது, மேலும் பல சிக்கல்களையே தோற்றுவிக்கும் என்று தமிழரசுக் கட்சியினர் எடுத்துக்கூறி வந்தார்கள். இதற்காக திரு. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சியினரை ஒவ்வொரு மேடையாகத் திட்டித் தீர்த்து வந்தார். தமிழ்மக்களின் பிரதிநிதிகளிடையே பொது அடிப்படையில் ஏற்பட்ட ஐக்கியமும்-திரு. பொன்னம்பலத்தின் வட்ட மேசை மாநாட்டு வாதத்தால்-உருவாக முடியாதுபோனது.

சுதந்திரன் அரசியல் நிருபர்

திரு. பொன்னம்பலம் அவர்கள் வட்ட மேசை மாநாட்டுத் திட்டத்தைப் பற்றித் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்ட போது, தமிழரசுத் தலைவர்கள் அது தேவையற்றது என்பதற்கு என்ன காரணங்களை முன் வைத்தார்களோ அதையே திரு. பொன்னம்பலம் அவர்களும் இன்றுகூறியுள்ளார்.

### காரணங்கள்

வட்டமேசை மாநாடு பிரச்சினையைத் தீர்க்க மாட்டாது என்பதற்கு தமிழரசுக் கட்சியினர் நாலு காரணங்களை மக்கள்முன் வைத்தனர்.

1. சிறிதளவேனும் அடிப்படை நோக்கத்தில் ஒன்றுபடாதவர்கள் ஒன்று கூடிப் பேசுவதால் பிரச்சனைக்குத் தீர்வுகாண முடியாது.

2. அங்ஙனம் ஒரு தீர்வைக் கண்டாலும், அது வட்ட மேசை மாநாட்டில் கலந்து கொண்ட கட்சிகள் அனைத்தும்—எழுதிய உடன்படிக்கையையே நிறைவேற்றத் தவறியவர்கள் - தொடர்ந்து கடைப்பிடிக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்.

3. வட்டமேசை மாநாடு வெற்றி பெறுவிட்டால் அடுத்த திட்டம் என்ன?

4. வட்டமேசை மாநாடு தோல்வியில் முடிந்தால் உடனடியாக முழு அளவில் போராட்டம் தொடங்க வேண்டும். (இதற்கு உலக நாடுகளில் நடைபெற்ற உதாரணங்கள் எடுத்துக் காட்டப்பட்டன.)

இந்தக் காரணங்கள் அனைத்தையும் திரு. பொன்னம்பலம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், ஒன்றை மனதார ஒற்றுள்ளார். அடிப்படையில் சிறிதளவேனும் ஒற்றுமையில்லாதவர்கள் வட்ட மேசை மாநாட்டில் ஒன்றுகூடுவதால் பயனில்லை என்பதே அதுவாகும். இந்தக் கருத்தையே திரு. பொன்னம்பலம் மாறுபட்ட முறையில், 'ஒரே மொழி, ஒரே இனம் என்று கூறும் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுடன் நான் வட்ட மேசை மாநாட்டில் இருக்கத் தயாராக இல்லை' என்று கூறியுள்ளார்.

இந்த உண்மையை இத்தனை ஆண்டுகள் கடந்த பின்னராவது திரு. பொன்னம்பலம் உணர்ந்திருப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். இதே போன்று ஏனைய பிரச்சனைகளிலும் திரு. பொன்னம்பலம் நடந்துகொள்வார் என்று எதிர்பார்ப்போமாக.

### வேடதாரிகள்

அரசாங்க திணைக்களங்களிலிருந்து தினம் தினம் பல முக்கிய தகவல்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் மாயமாக மறைந்து வருகின்றன என்று ஒரு செய்தி கூறுகிறது. கடந்த வாரமும் புகழ்பெற்ற 'கிரிதர ஆலை' சம்பந்தமான சில கடிதக் கோர்வைகள் காணமற் போய்விட்டதாம். இந்த மாயக் களவு பற்றி அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுத்துவருவதாகத் தெரிகிறது.

## திரை மறைவில் விரோத சக்திகள்

தேசிய அரசாங்கத்துக்கு விரோதமான நடவடிக்கைகள் அரசாங்கத் திணைக்களங்கள் ஒவ்வொன்றிலும் இரகசியமான முறையில் நடைபெற்று வருகிறது என்பதை நாம் ஆறுதிங்களுக்கு முன்னரே சுட்டிக்காட்டியிருந்தோம். அரசாங்கத்தின் திட்டங்களைச் சிதைப்பதுடன், ஒரு சிலரை தேசிய அரசாங்கத்துக்கு விரோதமான முறையில் பகிரங்கமாகவே எதிர்ப்புக்காட்டுவதற்குத் தூண்டக் கூடிய முறையிலும் சில அதிகாரிகள் நடந்துவந்திருக்கிறார்கள்.

அமைச்சர்களினதும், நிரந்தரச் செயலாளர்களினதும் உத்தரவுகளை பல அதிகாரிகள் நிறைவேற்றாது காலத்தைக் கடத்துகிறார்கள் என்பதையும் நாம் அன்று சுட்டிக் காட்டி இருந்தோம். அன்று நாம் சுட்டிக்காட்டிய சம்பவங்கள் இன்று அம்பலத்திற்கு வந்திருக்கின்றன. இவற்றையிட்டு பல விசாரணைகள் நடக்கப் போவதாக அரசாங்க வட்டாரங்களில் பேசப்படுகிறது.

### அம்பலத்திற்கு வந்தவை

இதுவரை அம்பலத்திற்கு வந்த சம்பவங்களுடன், அரசாங்க விரோத அதிகாரிகளையும் ஊழியர்களையும் அரசாங்கம் களை பிடுங்கிவிட்டதாக எண்ணினால் அது

(9-ம் பக்கம் பார்க்க)

# எதிர்க்கட்சிகளின் பரபரப்பு

## தடையை எதிர்நோக்கி புதிய முறையில் திட்டம்

எதிர்க்கட்சிகளாக உள்ள ஒரு சில கட்சிகள் தடை செய்யப்படலாம் என்று அக்கட்சிகளின் தலைமைப்பீடம் கருதுவதாகவும், அதற்கான சில ஏற்பாடுகளை அவர்கள் செய்துகொண்டிருப்பதாகவும் அரசியல் வட்டாரங்களில் வதந்தி அடிபடுகிறது. அண்மையில் ஓட்டல் தப்புறபேனில் நடைபெற்ற விருந்துபசாரம் ஒன்றில் இராசாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நிகழ்த்திய பேச்சு எதிர்க்கட்சிகளின் சுறுசுறுப்பை மேலும் தீவிரப்படுத்தியிருப்பதாகவும் இந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது. இடதுசாரிக் கட்சிகள் தாங்கள் இருபது ஆண்டுகள் பின் தள்ளப்பட்டு இரண்டாவது மாயுத்த கால நிலையில் இருப்பதாக எண்ணிச் செயற்படத் தொடங்கியுள்ளார்களாம்.

அவசரகால நிலை நீக்கப்பட்டுவிட்டாலும் எதிர்க்கட்சிகளைப் பொறுத்தவரையில் ஐ. தே. கட்சி ஆட்சி பீடத்தின் முக்கிய இடத்தில் இருக்கும் வரை அது அவசரகால நிலை போன்றதாகவே இருக்குமாம். மேலும் அவசரகால நிலைமையை நீக்குவதற்கு முன்னர் எதிர்க் கட்சிகளின் பொறுப்பற்ற கவர்ச்சிகரமான பிரச்சாரங்களுக்கு சிறிதும் இடமற்ற நிலையில் சட்டங்கள் இயற்றப்பட்டுவிடுமென்றும். இதனால் இடதுசாரிக் கட்சிகளுக்கு எந்தநேரமும் ஆபத்து நேரலாம் என்றும் அக்கட்சிகளின் சம்பந்தப்பட்ட தலைவர்கள் கருதுகிறார்களாம்.

கடந்த வாரம் மூதவை உறுப்பினர் திரு. வை. ஆர். பியசேனவைக் கௌரவிக்கும் முகமாக ஓட்டல் தப்புறபேனில் நடைபெற்ற விருந்துபசாரத்தில் இராசாங்க அமைச்சர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன நிகழ்த்திய உரை எதிர்க் கட்சித் தலைவர்களின் சிந்தனைக்கு மேலும் வேலை கொடுத்துள்ளதாம்.

இடதுசாரிக் கட்சிகளைப் பொறுத்த வரையில் எதிர்காலம் இரண்டாவது உலக யுத்தக் காலம் (1939—45) போன்றே இருக்கும் என்றும் இதனால் இக்கட்சிகளின் வளர்ச்சி சரியாக இருபது ஆண்டுகள் பின்தள்ளப்படும் என்றும் சம்பந்தப்பட்ட கட்சிகளின் உயர் வட்டாரத்தில் கருத்து நிலவுகிறதாம்.

அவசரகால நிலைமையின் போதோ அல்லது அதற்குப் பின்னரோ இக்கட்சிகளை ஏதாவது ஒரு வகையில் ஆத்திரமூட்டச் செய்து, அவர்கள் ஏதாவது நடவடிக்கையில் இறங்கியதும் அதைச் சாட்டாகக் கொண்டு கட்சியைத் தடை செய்துவிடலாம் என்றும் இக்கட்சிகளின் தலைமைப்பீடம் கருதுகிறதாம்.

இத்தகைய சூழ்நிலைகள் தோன்றும் போதெல்லாம் அவற்றைச் சமாளிப்பதற்கு ஏற்ற முறையில் இப்பொழுதே கட்சி சிறமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. கட்சிப் பிரமுகர்கள் எவரும் அரசாங்கத்திற்கு அறிமுகமானவர்கள் ஒரு பகுதியாகவும், ஏனையவர்கள் பிறிதொரு பகுதியாகவும் பிரிந்துநின்று செயல்படத் தொடங்கியுள்ளார்களாம்.

கட்சி சட்டரீதியாகச் செயற்படும் காலத்தில் இரகசிய இயக்கங்கள் எதிலும் இறங்கக் கூடாது என்ற வனினிசக் கொள்கையை ஒட்டியே கட்சிப் பிரமுகர்கள் என்று வெளியில் தெரியாதவர்களைக் கொண்ட இக்கட்சிகளின் இரகசிய இயக்கம் செயற்படாது இருக்கிறதாம்.

சம்பந்தப்பட்ட கட்சிகள் தடை செய்யப்பட்டாலும் சில சமயங்களில் அக்கட்சியின் தலைவர்கள் சுதந்திரமாக நடமாடக் கூடியதாக இருக்குமாம். என்றாலும் எதற்கும் தயாராக இரகசிய இயக்கத்தையும் தயாராக வைத்துக்கொள்வதே இவர்களின் திட்டமாம். இரகசிய இயக்கங்களை ஒழுங்குசெய்து நடத்துவது இக்கட்சிக்குப் புதியதல்ல என்பது குறிப்பிடத் தக்கதாகும். இரண்டாவது உலகயுத்த காலத்தின் போது அச்சமைய இரகசிய இயக்கங்களில் ஈடுபட்டவர்களில் பலர் இன்று கட்சியின் முன்னணித் தலைவர்களாக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### இரகசியப் பொலீசார் வேட்டை

இதற்கிடையில் கொழும்பைச் சுற்றியுள்ள இடங்களில் இரகசியமான முறையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன என்றும் இவற்றைப் பிடிப்பதற்கு இரகசியப் பொலீசார் சில தினங்களாகத் தீவிர முயற்சி எடுத்துவருகிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

## திரு. ஜீ. ஜீ.. ...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரிய ஏமாற்றமாக முடியும் பழைய கூட்டரசாங்க ஆதரவாளர்களைக் கண்டு பிடித்து விட்டோம் என்று அமைச்சர்கள் எண்ணி நிம்மதியடைய முற்பட்டால் அது மாபெரிய முட்டாள் தனமான நடவடிக்கையாகவே இருக்கும்.

கடந்த எட்டாம் திகதியன்று வேலைக்கு வராதவர்களும், வேலை நிறுத்தம் செய்யுமாறு தூண்டியவர்களுமே கூட்டரசாங்கக் கட்சிகளின் ஆதரவாளர்கள் என்று அரசாங்கம் முடிவு செய்தால் அது இமாலயத் தவறாகும். தேசிய அரசாங்கத்திற்கு நல்ல பிள்ளையாக நடித்துக் கொள்ளும் பல 'உத்திராட்சப் பூனை', போன்ற பொறுப்பு மிக்க அதிகாரிகள் பழைய அரசாங்கத்தின் தீவிர ஆதரவாளர்கள் என்பதை தேசிய அரசாங்கத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

கடந்த பல மாதங்களாக நிதியமைச்சருக்கு தீராத தலைவலியைக் கொடுத்த ஒரு மாபெரும் அதிகாரி தான் தேசிய அரசாங்கத்தின் ஆதரவாளர் என்றே கூறித்திரிகிறாராம். ஆனால், இவர் தேசிய அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு மாறாக என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பது அந்த அதிகாரியின் கீழ் கடமையாற்றுபவர்களைக் கேட்டால் கூறுவார்கள். இது போன்று பல அதிகாரிகள் தேசிய அரசாங்கத்தின் ஆதரவாளராக நடித்துக் கொண்டு திரைமறைவில் கூட்டரசாங்கக் கட்சிகளுடன் சேர்ந்து சதி வேலைகளில் இறங்கிவருகிறார்கள்.

இத்தகைய இரட்டை வேடதாரிகளைக் கண்டு பிடித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படாதவரையில் தேசிய அரசாங்கம் தனது திட்டங்களை வெற்றிகரமாக நடாத்த முடியாது என்பதை எச்சகைய சந்தேகமுமற்ற நிலையில் எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

## மூடி.......

[5ம் பக்கத் தொடர்ச்சி]

லிட்டி என்பவருக்கு அளித்துள்ள பதிலைப் பின்பற்றின் நன்மை கிடைக்கும்.

க. ஆசைரத்தினம்,
காரைதிவு

கே: எனது தங்கைக்கு வயது 7. அவளுக்கு நெற்றியிலும், முதுகிலும் மயிர் வளருகின்றது. இவை இல்லாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம்.

ப: இதற்கு பரிகாரம் அவசியமில்லை. சிறுபிள்ளைகளுக்கு இப்படியிருப்பது சகஜம். காலப் போக்கில் இவை இல்லாதொழிந்து போகும்.

## ஜீ ஜீ. திட்டம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையில் பேச்சுவார்த்தை நடத்துவது என்பதை அவர் ஒருபோதும் கூற விரும்பியதில்லை.

"நான் வட்டமேசை மாநாடு கூட்ட வேண்டும் என்பதை ஆதரித்து நின்றேன். ஆனால் ஒரு வட்டமேசை மாநாடுமூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண எனக்கிருந்த வாய்ப்பை எதிர்க் கட்சியினர் அபகரித்து விட்டார்கள்."

திரு. பொன்னம்பலத்தின் இப் பேச்சையிட்டு அரசியல் வட்டாரங்கள் ஒரு அணித்தரமான கருத்தைத் தெரிவித்துள்ளன. தமிழ் மொழிச் சட்டம்நிறைவேற்றப்பட்டபின்னர் வட்டமேசை மாநாடு அவசியமற்றதாகி விட்டது. இதைத் திரு ஜீ ஜீ உட்பட சகல அரசியற் கட்சிகளும் நன்கு உணர்ந்துள்ளனவாம்.

திரு. பொன்னம்பலம். தமது வட்ட மேசைத்திட்டம் காலத்தால் ஒவ்வாதது என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள முன்னர் அதற்கு ஒரு மாற்றுத் திட்டம் காண முற்பட்டார் வட்டமேசை கூட்டுவதற்கு இதுவரை தமிழரசாரே தடையென்று கூறியவர் தொடர்ந்தும் அப்படிக் கூறுவதை யாரும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதை உணர்ந்ததும் அக்குற்றச்சாட்டை, யாராவது ஒருவர் தலையில் கட்டியடிக்க முற்பட்டார். இதற்கு எதிர்க்கட்சியினரும், குறிப்பாக தோம்பே பிரதிநிதி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவும் கிடைத்துள்ளாரகளாம்.

## புதிய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விவசாய ஆயுதங்கள் ரூபா 50 க்கு வழங்கப்படும்.

காடுவெட்டி, எரித்து, துப்பரவு செய்ய ரூபா 30 வழங்கப்படும்.

பயிர் செய்கைக்காக ரூபா 60 வழங்கப்படும்.

75 ரூபா பெறுமதியான முட்கம்பிகள் கொடுக்கப்படும்.

இத்துடன் மேலதிகமாக ஒவ்வொரு குடியேற்ற வாசியும் தமது பங்கீட்டுத்துண்டில் கட்டை பிடுங்குவதற்கும், தற்காலிக குடிசை அமைப்பதற்கும் மற்றும் வீதிகள் அமைப்பதற்கும் ரூபாய் 660 ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

மேலும், ஒவ்வொரு குடியேற்ற வாசிகளின் பொதுச் செலவுக்காக அதாவது கூட்டுறவுப் பண்டகசாலை, வைத்தியசாலை, உப தபாற்கந்தோர், சந்தை முதலியன அமைப்பதற்கும் மற்றும் பொதுத் தேவைக்குமாகவும் தனது வீடுகட்டுவதற்கும் ரூபா 900 ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

பெப்ரவரி 15ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பம் அனுப்பவேண்டும். விண்ணப்பங்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.


'இலவசம்'! 'இலவசம்'!!

உத்தியோகத்தில் உயர்வு பெற, எதிரிகளை அடிபணியச் செய்ய, எதிர்பார்க்கும் இளைஞன்—இளம் பெண் மனதை வெல்ல, வயது வந்தோரின் விருப்பத்தைப் பெற முதலிய எப்பிரச்சினையும் எம்மால் நீக்க வேண்டுமா?

இன்றே கேளுங்கள்

பண்டார மந்திரச்சாரியார்
அன் கம்பெனி,
தலாவ (வழி) அநுராதபுரம்.

ஈழத்தில் தனிப்பெரும் சாதனையை ஏற்படுத்தி ஈடு இணையற்று விளங்குவது

கல்கி பீடி



சிறந்தது, சிக்கனமானது, சிந்தனையூட்டுவது

சோர்வு நீக்கி உற்சாகத்தை அளிப்பது
புகைக்க புகைக்க இன்பம் பயப்பது

786 கல்கி பீடிகளே

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்
சி. சின்னத்துரை அன் பிரதர்,
44, 3ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

தொழிற்சாலை: 79,79/1, பேசஞ்சர் வீதி,
கொழும்பு - 12.

**அன்றாடம் உழைத்து வயிறு வளர்க்கவேண்டிய நிலையிலுள்ள தோட்டத்து வேலனுக்கு, மகள் சுகமின்றிக் கிடக்கிறாள் என்பதும், மருந்து வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதும் நினைவிலுள்ளன. ஆனால்**

**உழைத்த உழைப்பின் பயன் வீணே அழிவது நினைவிலில்லை!**



# உழைப்பு

## கம்பளை க. செல்வரத்தினம்

ஆடி மாதத்து கடும் வெயில் உடம்பிலே கள் என அடித்துக் கொண்டிருந்தது. நெற்றியிலிருந்து வியர்வை சொட்டு சொட்டாக நிலத்திலே விழுந்துகொண்டிருந்தது. சட்டை அணியாத உடலிலே வியர்வைத் துளிகள் ஆங்காங்கே தங்கி முத்து முத்தாகவும், சில துளிகள் வழிந்தபடியும் இருந்தன. இவ்வளவு கடும் வெயிலையும் இலட்சியம் செய்யாமல் குனிந்த தலை நிமிராமல் தேயிலைகளுக் கூடே முளைத்திருந்த புற்களை வெட்டிக் கொண்டிருந்தான் வேலன். அவன் கை புல் வெட்டிக் கொண்டிருந்தாலும் அவன் மனம் வீட்டிலே தன் ஒன்பது வயது மகள் கடும் காய்ச்சலினால் பிதற்றிக் கொண்டு பாயிலே கிடந்த காட்சியிலே தான் இலயித்திருந்தது. கைகள் இரண்டும் சுரண்டியை இழுத்துக் கொண்டிருந்தன. அதனால் வெட்டப்பட்டு குப்புறச் சாயும் புற்களை அவனை அறியாமலேயே அவன் கை பொருக்கி எடுத்து இடுப்பிலே அசுற்காகத் தொங்கும் பையிலே போட்டுக் கொண்டிருந்தது.

அவன் கண்கள் தேயிலையின் அடியில் புற்கள் மறைந்திருக்கின்றனவா? என்று பார்த்துக்கொண்டிருந்தாலும், மூன்று நாட்களாக உணவின்றி சோர்ந்து, களையிழந்து படுக்கையிலே கிடக்கும தன் மகளின் முகமே தென்பட்டுக்கொண்டிருந்தது.

'வேலையை ஒழுங்காகச் செய், வெட்டிய புற்களை ஒன்று விடாமல் பொறுக்கி பையிலே போட்டுக் கொள். புற்களின் மேல் மண்ணைப் போட்டு மூடி மறைத்து வைத்து விடாதே, அப்படிச் செய்வதைக் கண்டால் இன்றைய சம்பளம் வெட்டப்படும்', என்ற கங்காணியின் அதட்டல் சொற்களும், சரக், சரக் கென்ற சுரண்டிகளின் ஒலியும் அவன் செவிகளில் விழுந்த கொண்டிருந்தாலும் 'இன்றைக்கு மறந்திடாமல் டாக்டரிடம் சென்று கொழந்தைச்கு மருந்து வாங்கி வந்துடுங்க அவ உடம்பு நெருப்பாக் கொதிக்குது எனக்குப் பயமா இருக்குது.' என்று என்று தன் மனைவி காலையிலே சொன்ன சொற்கள் தான் அவன் காதுகளில் பெரிய சத்தத்துடன் ஒலித்துக் கொண்டிருந்தது.

சரியாக நடுப்பகல் பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. தன் வலிமையை எவ்வளவு காட்ட முடியுமோ அவ்வளவையும் காட்ட எண்ணிய சூரியன் தன் ஆயுதமான கதிர்களை பூமியின் மீது பாய்ச்சிக் கொண்டிருந்தான். இந் நேரத்தில்தான் தொழிலாளர்கள் பகல் சாப்பாட்டிற்காக விட்டிற்குச் செல்ல அனுமதித்து அறிவித்த சங்கொலி கேட்டு நிமிர்ந்தான் வேலன். நெற்றியிலே வழிந்து கொண்டிருந்த வியர்வைத் துளிகளைக் கையால் வழித்து தேயிலையின்மேல் உதறிவிட்டு கங்காணியிடம் ஓடினான். கங்காணியும் வீட்டுக்குப் போக மலையை விட்டு பாதைக்கு இறங்கினார். 'ஐயா! கங்காணியாரே' என்ற சத்தத்தைக் கேட்டு திரும்பிய கங்காணி 'என்ன வேலா' என்றார்.

'என் மகளுக்கு ரெண்டு நாளா ஒடம்புக்குச் சரியில்லீங்க அதனாலே மருந்து வாங்க போகனும் அதுதான் உங்ககிட்ட சொல்லிவிட்டு போகலாமுனு வந்தேன்' என்றான் வேலன்.

'அதைப் பற்றி எனக்குத் தெரியாது போய் கணக்கப்பிள்ளையிடம் சொல்லிவிட்டுப் போ, பிந்தி வந்தால் அரைப் பேர்தான் போடச் சொல்வேன்.' என்றவாறே கங்காணி நடையைக் கட்டினார்.

ஒரு விதமாகக் கெஞ்சி கூத்தாடி கணக்கப்பிள்ளையிடமிருந்து அரை மணி நேரம் கூடுதலாக விடுமுறை வாங்கிக் கொண்ட வேலன் பின் சிறிதும் தாமதிக்காகமல் நேரே வைத்தியசாலைக்கு ஓடினான்.

தோட்ட வைத்தியசாலை பூட்டிக் கிடந்தது. எனவே பின் பக்கம் சென்று 'ஐயா! ஐயா!' என்று கூப்பிட்டான். சத்தத்தைக் கேட்டு வெளியே வந்த டாக்டர், 'என்ன வேண்டும்' என அதட்டினார்.

'என் மகளுக்கு ரெண்டு நாளா ஒரே காய்ச்சல் உடம்பு நெருப்பாக் கொதிக்குது. கண் முழிக்கவே இல்லே. அதுதான் மருந்து வாங்கிக் கிட்டு போகலாமுனு வந்தேனுங்க' என்றான் வேலன்.

பன்னிரண்டு மணிக்கு மேல் எனக்கும் லீவு நேரந்தான். காலை எட்டு மணி முதல் பன்னிரண்டு மணி வரைதான் மருந்து கொடுக்கும் நேரம். இப்போது தரமுடியாது. போ, நாளை காலையில் வா' என்றார் டாக்டர்.

'ஐயா, ஐயா மன்னித்துக்கொள்ளுங்க. அந்த நேரத்தில் வந்தால் என் ஒரு நாள் சம்பளம் அநியாயமாக இல்லாமல் போய்விடும் நான் ஏழைங்க. இப்ப சாப்பிடாம கூட ஓடி வந்தேனுங்க' என்றவாறே டாக்டரைப் பரிதாபமாக நோக்கினான். ஈற்றில் பல சாமி ஐயாக்கள் போட்டபின் ஒரு விதமாகக் கிடைத்த மருந்தை வாங்கிக் கொண்டு கொடுமையான வெயிலையும் பொருட்படுத்தாமல் வீட்டை நோக்கி ஓடினான். ஆனால் வீட்டினுள் நுழையும் போதே பெரிய தொனியுடன் காற்றிலே மிதந்து வந்த பூம்ம்ம் என்ற சங்கொலியும் காதிலே நுழைந்து விட்டது.

இடை வேளை முடிந்து விட்டது என்று அறிவிக்கும் சங்கின் சத்தம் கேட்ட பின் வேலனால் சாப்பிட முடியுமா? வாங்கி வந்த மருந்தைத் தான் குழந்தைக்கு ஊட்டிக் கொண்டிருக்க முடியுமா? அல்லது சிறிது நேரம் நிழலில் தங்கிதான் இளைப்பாற முடியுமா? ஒருக்காலும் முடியவே முடியாது. அப்படி இருந்தால் அன்றைய சம்பளமும் இல்லாமல்போவதுடன் காலையிலிருந்து பாடுபட்டு உழைத்த உழைப்பும் வீணாகிவிடும்.

எனவே வாங்கி வந்த மருந்தை கொடுக்கக் கூட போதிய நேரமில்லாமல் அவசர அவசரமாக குழந்தையின் வாயில் ஊற்றிவிட்டு வேலைக்கு ஓடினான்.

மாதங்கள் உருண்டோடின,

**எமது சிறுகதை**

காலம் மாறிற்று. வெயில் காலம் போய் மழை காலம் ஆரம்பமாகிவிட்டது. இரவும், பகலும் சோவென மழை பெய்து கொண்டிருந்தது இரவும் பகலும் உழைததாலோ அல்லது மழையினாலோ தெரியவில்லை வேலன் படுத்த படுக்கையாகி விட்டான்.

உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரை முரட்டுக் கம்பளியால் போர்த்து படுத்திருந்த வேலனை அவன் மனைவி மருதம்மாள் அணுகி' என்னாங்க ஒரேயடியா ஒன்றும் சாப்பிடாமே கிடக்கிறீங்க இந்தாங்க மருந்து இதையாச்சும் குடிங்க' என்றவாறே அசைத்து எழுப்பினாள்.

முனங்கியவாறே கண் விழித்த வேலன் 'ஏ புள்ளே இன்னைக்கு வேலைக்கு ஏன் போகலே' என்றான். வீட்டின் கூரையில் பலமாக விழுந்த மழைத் துளிகளின் சத்தத்தினால் அவனின் பேச்சு சரியாகக் கேட்கவில்லையானாலும் ஊகித்தறிந்த மருதம்மாள்' படுத்த படுக்கையாக நீங்க கிடக்கும் போது நான் எப்படிங்க வேலைக்குப் போக முடியும்' என்றாள் அவன் காதுக்கருகில்.

இதைக் கேட்ட வேலன் எழுந்தே உட்கார்ந்துவிட்டான், 'எனக்கு இப்போது ஒன்னுமில்லே புள்ளே நீ வேலைக்குப் போ, நானும் வேலைக்குப் போகாமே நீயும் வேலைக்குப் போகாமே இருந்தா நம்ம கதி என்னவாகும், இதை நினைச்சும் பார்க்காமே என்ன சொல்லிக்கிட்டு இருக்கே.'

'இல்லீங்க இன்னைக்கு வேலைக்குப் போகாட்டா என்னாங்க? ஒரு நாள் தானேங்க குடியா முழுகிடப் போவுது' இன்னைக்குச்சரி ஒழுங்கா மருந்து கொடுத்து சுடு கஞ்சியும் வைச்சு தரேன்' என்றாள் மருதம்மாள்.

'நீ இன்னைக்கு வேலைக்குப் போகாட்டா நானும் மருந்தும், கஞ்சியும் குடிக்கமாட்டேன். எனக்கு இப்போது எவ்வளவோ தேவலே' என்றான் வேலன்.

வேலன் சொன்னால் சொன்னபடி செய்து விடுவான் என்பதை அறிந்திருந்த மருதம்மாள் கம்பளியை மடித்து தலைக்குப் போட்டுக் கொண்டு கொழுந்து கூடையை தலையிலே மாட்டிக்கொண்டு கிளம்பிவிட்டாள் கொழுந்தெடுக்க.

வெயில் காலத்தில் இரத்தத்தை வியர்வையாக்கி சிந்துவதைப் போல் மழை காலத்தில் அட்டையினால் கடிக்கப்பட்டு இரத்தம் ஒழுக, குளிரினால் நடுங்கியபடி மாலை ஐந்து மணிக்குத் தன் மனைவி வீடு திரும்பும் வரை வெந்நீர் கூட இன்றி கிடந்த வேலன்' இன்று எத்தனை இராத்தல் கொழுந்து எடுத்தாய்' என்றுதான் ஆவலோடு கேட்டு வரவேற்றான்.

மாதங்கள் பல உருண்டோடின, வசந்த காலமும் ஆரம்பமாயிற்று.

'கமான் போடைஸ், கமான் ஸ்மித்' கமான் தாஸ்,' என்ற சத்தம் நுவரெலியா குதிரைப் பந்தய மைதானததில் நாலாபக்கமிருந்தும் ஒலித்துக்கொண்டிருந்தது. இச் சத்தங்கள் அவர்களின் செவிகளில் விழுந்ததோ, இல்லையோ தெரியவில்லை. ஆனால் குதிரைகளை வாயு வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தார்கள்.

இக் கூட்டத்தின் மத்தியில் ஓரிடத்தில் வேலன் நின்று கொண்டிருந்தான். ஒரு கையில் பந்தய புத்தகம் இருந்தது. வின்னுக்கும் பிளேசுக்கும், ரிபிலுக்கும், சுயிப்புக்கும் அவன் கையிலிருந்து பணம் குதிரையைப் போல் ஓடிக்கொண்டிருந்தது.

ஈற்றில் குதிரைப் பந்தயமும் முடிந்தது. வேலனின் கையில் ஐந்து ரூபா மட்டுமே எஞ்சியிருந்து வேலனை பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தது.

தோற்றுவிட்டதினால் உற்சாகமின்றி தளர்ந்த நடையுடன் பந்தய மைதானத்தைவிட்டு வெளியேறிய வேலன் தன் மன வருந்தத்தை போக்கிக் கொள்ள எண்ணி ஐந்து ரூபாவுக்கும் சாராயத்தைக் குடித்துவிட்டு உற்சாகத்தோடு வீட்டிற்கு விரைவாக நடையைக் கட்டினான்.

மறு நாள் வழக்கப்படியே விடியும் முன்பே எழுந்து வேலைக்குக் கிளம்பினான் வேலன் போகும் போது 'ஏ புள்ளே ஒம் மவளையும் இன்னையிலிருந்து கொழுந்து காட்டிற்கு, கூட்டிப் போய் கொழுந்தெடுக்கப் பழக்கு' என்றவாறே போனான். ஆமாங்க நானும் நெனச்சேன்' என்றவாறே தன் ஒன்பது வயது மகள் தலையில் ஒரு பழைய கூடையை மாட்டினாள். தாய் வீட்டை சாத்திவிட்டு நடையைக் கட்டினாள், மகளும் பின் தொடர்ந்தாள்.

இவ்வளவு நாளும் உழைத்த உழைப்பின் பயன் நேற்றைய குதிரைப் பந்தயத்தில் வீணானது ஒருவருக்குமே ஞாபகமில்லை.

---

# சிறிய அமைச்சரவையே....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

காக்கப்படுகின்றனர். இந் நிலைமை நீடிப்பது உசிதமல்ல.

## துடிப்புள்ளவர்கள் வேண்டும்

அமைச்சர்களுக்கு இன்றைய நிரந்தரக் காரியதரிசிகளைக் காட்டிலும் (இதற்கு விதிவிலக்கானவர்களும் உளர்) துணிவும் துடிப்பும் மிக்கவர்களின் சேவை கிடைக்க வேண்டும். நிரந்தரக் காரியதரிசிகள் பிரதமரின் ஆலோசனையின்பேரில் மாதேசாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சர்களுக்கு நல்ல ஆலோசனை வழங்கவும் நமது அமைச்சுகளிலுள்ள திணைக்களங்களின் அலுவல்களை இணைக்கவும் கூடிய உண்மையான திறமைசாலிகளை அமைச்சர்கள் பெறவேண்டுமென்ற நோக்குடனேயே இங்ஙனம் நியமிக்கப்படுகின்றனர். ஆயினும், (நிரந்தரக் காரியதரிசியை நியமித்த) அரசாங்கம் மாறினும் நிரந்தரக் காரியதரிசிகள் அனேகமாக மாற்றப்படுவதில்லை. மறுபுறத்தில், தம்முடன் பணியாற்றப் போகும் நிரந்தரக் காரியதரிசி யார் என்பதையிட்டு அமைச்சர்கள் அக்கறை காட்டுவதனால் நல்ல பலன் ஏற்படலாம்.

(முற்றும்)

# வள்ளலார் மறைவில் மாறுபட்ட கருத்துக்கு இடமில்லை

வள்ளலாரின் திருஅருட்பாவிற் காணப்படும் சமக சீர்த்திருத்த விதிகளை—முற்போக்குக் கருத்துக்களை அறியாமலும், அறிந்தவர்கள் அதனைச் செயல் முறையில் ஈடுபடுத்த அஞ்சியமையாலும் தக்க வரலாற்றுச் சான்றுகள்—நூல்கள் இல்லாமையாலும் இலங்கைத் தமிழ் மக்களிடையே வள்ளலார் பற்றிய வரலாறுகள் அறியப்படாதிருந்தன எனலாம். இப்போது 'சிலம்புச் செல்வர்' 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற நூலினை வெளியிட்டுத் தமிழினத்தின் மதிமயக்கு நீங்க வைத்துள்ளது தமிழ் கூறும் நல்லுலகப் பாக்கியமே. இந்த நூலினைத் துணை கொண்டே 'வள்ளலாரின் மறைவு இயற்கையின் பாற்பட்டதா' என்றும், இறந்தவர்களா எழுப்பினார் என்றும், மறைந்த திகதி சரிதானா என்றும், உடலுடன் மறைந்தாரா என்றும் ஐயப்பாடுற்று அதற்கு ஐயப்பாடான முடிபையும் காணுகின்றார் ஈழவேந்தன். இதிலிருந்து அவர் 'ஐயத் தெளிவு' காண விழைகின்றார் எனவே தோன்றுகிறது.

மறைமலை அடிகளாரின் டயறிக் குறிப்பொன்றை ஆதாரமாக வைத்துக் கொண்டு வள்ளலாரின் மறைவு சாதாரண மக்களுக்கேற்படும் மரணத்தைப் போலவே நடந்தது என முடிபு காண்கிறார் திரு. ஈழவேந்தன்.

## மாதக் கடைசி

எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவுடைமை ஆதலின் அவர் கோரும் விளக்கங்களைச் சிறிது ஆராய்வோம்.

திரு. ஈழவேந்தன் எடுத்துக் காட்டும் ஐயம் இதுதான் திரு. ம. பொ. சிவஞானக்கிராமணியார் அவர்கள் வரைந்த 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' நூலின் பக்கம் 457ல் வள்ளலாரின் மறைவையொட்டிக் கூறிய பின்வரும் கருத்துக்கள் என் நினைவிற்கு வந்தன...1874ம் ஆண்டில் ஜனவரி மாதக் கடைசியில் பேசத் தொடங்கி இனி நடக்கப் போகும் விஷயங்களை எச்சரிக்கையாகக் கொடுத்தார் ...... என்பதும் எனது முந்திய கட்டுரையிலே 30-1-1874ல் மேட்டுக்குப்பம் சித்திவளாகத்தில் தமது மாணுக்கரிடம் விடை பெற்று அருட்ஜோதியாக மறைந்ததாகக் கூறப்படுகின்றது என்பதும் சன்மார்க்க சங்க வெளியீட்டுடன் மாறுபடுவதாகவும் 'முன்னையது ஜனவரி மாதக் கடைசியில் பேசத் தொடங்கி என்றுகூறியிருக்க 30-1-1874ல் வள்ளலார் மறைந்தார் என்று கட்டுரை கூறுகின்றது', என்பதும் முதலில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது.

அவரது கட்டுரையில் 'ஆண்டவன் காப்பான்' என்ற பகுதியில் திரு. ம. பொ. சி. எழுதிய 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்ற நூலில் 3ம் பதிப்பு—400ம் பக்கத்தில் உள்ளவாறு:- 'அடிகள் ஆவியோடியைந்தயாக்கையுடன் மறைந்த அந்தப் புனித நேரம் 1874ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணியாகும்' என்பதையும் எழுதியிருக்கிறார்.

ஜனவரி கடைசி என்பது மாதக் கடைசி என்பதைக் குறிக்கிறதேயல்லாது திகதியைக் குறிப்பிடுகிறதாகாது. இன்றைய வழக்கிலும் மாதம் முடிவுறுமுன் 24, 25ம் திகதிகளிலே மாதக் கடைசி என்றே கூறுகிறோம். ஆனல் மாதத்தின் இறுதி நாளாகக் கருதுவதில்லை. இதனை மனத்திற் கொண்டு 'ஜனவரி மாதக் கடைசியில் பேசத் தொடங்கிய வள்ளலார் 30-1-1874ல் வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12மணிக்கு அருட் ஜோதியாக மறைந்தார் என்க. இத்தினத்தைக் கீழ்க்காணும் குறிப்புக்களும் உறுதி செய்கின்றன.

## சான்றுகள்

திரு. நா. இரா. ஊரன், சமயபுரம்-இவரால் தொகுத்து வள்ளலார் இந்து மத பாடசாலை வெளியீடு 'குருகுலம்' மாத இதழில் வெளியிட்டுள்ள இராமலிங்க அடிகள் வரலாற்றுக் காலக் குறிப்புக்களில் காணப்படுவது.

1. தில்லையை அடுத்த மருதூரில் பிறப்பு சுபானு—புரட்டாசி21, 5-10-1823.
2. அடிகளார் குடும்பம் மருதூரை விட்டுச் சென்னைக்குச் சென்றது:-1824.
3. ஒழிவிலொடுக்கம் பதிப்பிக்கப்பட்டது:- விரோதிகிருது, ஐப்பசி 1851.
4. மனுமுறை கண்ட வாசகம் வெளிவந்தது:- ஆனந்த-ஆனி, 1854.
5. தொண்ட மண்டல சதகம் பதிப்பிக்கப்பட்டது:- இராக்ஷச-மார்கழி 1855.
6. சின்மய தீபிகை பதிப்பிக்கப்பட்டது. பிங்கள-கார்த்திகை, 1857.
7. அடிகளார் வடலூரை யடுத்த கருங்குழியை உறைவிடமாகக் கொண்டது-1858.
8. சன்மார்க்க சங்கம் நிறுவியது:-1865,
9. அதுவரை பாடப்பெற்றிருந்த அடிகளாரின் பாடல்களை அவர்கள் மாணவர் தொழுவூர் வேலாயுத முதலியாரால் நான்கு திருமுறைகளாக வகுக்கப் பெற்று திரு அருட்பா என்ற பெயரில் நூலாக வந்தது. அக்ஷய-பிப்ரவரி, 1867

சக்தி அ. பாலையா

10. வடலூரில் சத்திய தருமச்சாலைத் தொடங்கியது:-பிரபவ-வைகாசி, 11. [23-5-1867]
11. கருங்குழியை அடுத்த மேட்டுக் குப்பத்தில் வசிக்கத் தொடங்கியது. 1870.
12. வடலூரில் சத்திய ஞான சபை அமைத்தது:-1871.
13. வடலூர் ஞான சபையில் முதற் பூச விழா: [25-1-1872]
14. மேட்டுக் குப்பம் சித்தி வளாகத்தில் வழிபாட்டு முறை தொடங்கியது:- 1873.
15. சன்மார்க்க அன்பர்களுக்கும் அந்தப் பக்கத்து மக்களுக்கும் செய்த பேருபதேசம்:- ஸ்ரீமுக ஐப்பசி 7. [22-10-1873]
16. மேட்டுக்குப்பம் சித்தி வளாகத்தில் மறைவுஸ்ரீமுக தை, 19. [30-1-1874] என்பதும்.

13-6-65, கல்கியில் திரு. ம. பொ. சிவஞானம் எழுதிய அருட்ஜோதி என்ற கட்டுரையொன்றில் '1874-ல் ஜனவரி 30-ல் மறைந்து போனர். உடலோடு மறைந்தாரென்பது வரலாறு' என்பதும்,

1965 'கல்கி' தீபாவளி மலர் 248/ஏ. பக்கத்தில் வடலூர்ப் பெருவெளியிலே என்ற தலைப்பில் 'பீ ஸ்ரீ. எழுதியுள்ள கட்டுரையில் '5-10-1823-ல் அதாவது சுபானு வருடம் புரட்டாசித் திங்களில் 21-ந் திகதி பிறந்தவர் 30-1-1874-ல் அதாவது ஸ்ரீமுக வருஷம் தைத் திங்கள் 19-ந் திகதி மறைந்துவிட்டார். தாம் வந்த காரியத்தை அவசரமாகவே முடித்துக்கொண்டு சிதம்பரத்துக்கு அருகில் தோன்றியவர் உத்தரசிதம்பரம் என்ற வடலூரில் திருவருட்பிரகாச வள்ளலாராகத் திகழ்ந்து கொண்டு யோகி, சாது, சித்தர், பத்தர், ஜீவன்முக்தர், பரமஞானி என்றெல்லாம் புகழ் பெற்று மறைந்தார் என்பதே ஓர் ஓர் அற்புதவரலாறுதான். தெய்வம் என்ற ஜோதியைக் கண்டவர்களில் ஒருவர் இவர்' என்பதும்,

வாழ்ப்பாணத்தைச் சார்ந்த திரு. கா. ஷண்முகம் அவர்கள் தொகுத்துள்ள திருமுறைப் பாமாலையில் சிடாபரராக-இருந்த இராமலிங்க அடிகள் வடலூருக்கு உத்தர ஞான சிதம்பரம் என்று பெயரிட்டார். பின்பு அவர் ஐந்து அவத்தைகளைக் கடந்து தத்துவ முழுதும் இச்சை வழி பணி கேட்பப் பிரணவமேதிருவுருவாகச்சகசவருள் பொழிய வடலூரை அடுத்த மேட்டுக் குப்பம் கிராமத்தில் சித்திவளாகத் திருமாளிகையில் ஸ்ரீமுக வருஷம் தை மாசம், சுக்கிரவாரம், புனர் பூச நட்சத்திரத்தில் சின்மாத்திர சகச சமாதியில் அசைவற நின்று தமது ஆன்மார்த்த சற்குருவை நயானித்து தாம் இருந்த அறையைப் பூட்டச் செய்து நித்தியானந்த பேறு பெற்றனர்' (வெளியீடு: திகதி 15-1-1955) என்பதும்,

ஜனவரி மாதக் கடைசி என்பதற்கும், 30-1-1874-ல் நிகழ்ந்தது என்பதைப் புலப்படுத்துகிறது: இதன் கண் தான் மாறுபட்டமோ, ஐன் மாறுபட்டமோ ஏற்படவில்லை என்பதும் உறுதியாகிறதல்லவா?

(வளரும்)

## கருத்துமேடை

### வள்ளலார் மறைவு [2]

## சங்கப் பலகை

### காப்பியச் சொற்பொழிவுகள்

தொகுப்பாசிரியர்:

எஸ். பொன்னுத்துரை.

வெளியீடு: அரசு வெளியீடு, 231 ஆதிருப்பள்ளித் தெரு, கொழும்பு-13

விலை ரூ. 3-50

பஞ்சதந்திரக் கதைகளில் முதலையுங் குரங்குமென்பதுமொரு கதையாகும். நீள் நதியின் மருங்கே வளர்ந்திருந்த கருநாவலின் பழச்சுவை அறிந்த முதலை. அக் கருநாவற் பழங்களை இடையறாது தின்று சுவைத்த குரங்கின் ஈரலைத் 'தன் துணைவிக்குக் கொடுக்க விழைகிறது. ஒரு நாவற் பழமே இத்துணை சுவையெனில், அவற்றை நித்தம் தின்று வாழும் மந்தியின் ஈரல் எத்துணை சுவையானது?

காவியங்கள் சுவையானவை; படிக்கப் படிக்கப் பல் சுவையளிப்பன. அக் காப்பியங்களைச் சுவைத்தவர்களது சுவையை நாம் சுவைக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தை 'காப்பியச் சொற்பொழிவுகள்' எனும் நூல் நமக்களிக்கின்றது.

மூல நூற்கள் குறித்து ஈண்டு விமர்சிக்க வேண்டியதில்லையெனினும், அந்நூல்களை நோக்கியவர்கள் எவ்வளவு தூரந்தாம் எடுத்துக்கொண்ட 'கடமை'யைச் செய்திருக்கிறார்கள் என்பதை ஆராய்தலவசியமாகிறது. இந்நூலின் கண் இடம் பெற்றுள்ள பத்துக் காப்பியங்களையும் சந்தேகமறக் கற்றுத் தேர்ந்தவர்களுக்காக கட்டுரைகள் (சொற்பொழிவுகள் தாம்) எழுதப்பட்டனவென்றால், எழுதியவர்களது கடமை வேறு. காப்பியங்கள் குறித்து நன்கறியாதவர்களுக்காக இவையெழுதப்பட்டன வெனில் எழுதியவர்களது கடமை வேறு. 'யாருக்காக இவை' எனும் நிலை பொறுத்தே, காப்பியங்களை நோக்க வேண்டிய கோணமையும்.

பதிப்பாசிரியரது பதிப்புரையிலிருந்து இக் 'காப்பியச் சொற்பொழிவுகள்' எனும் நூல், பழந்தமிழிலக்கியம் பற்றிய அறிவு இல்லாதவர்களுக்காகத் தொகுக்கப்பட்டதென வுணரப்படும். தொகுப்பாசிரியரது கட்டுரையினின்று, இந்நூல் காப்பியங்களைப் பற்றிய இரசனையையும் அறிவையும் பரப்புவதற்காகத் தொகுப்பட்டதென்றுணரப்படும். காப்பியங்கள் பற்றிய அறிவை, அவை பற்றித் தெரியாதவர்களுக்கே உணர்த்தலாம். ஆதலால், பின்னவரின் நோக்கமும் முன்னவர் நோக்கையே ஒக்கும். சிலப்பதிகாரம், மணிமேகலை குண்டலகேசி, வளையாபதி, சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம், சிறுப்புராணம், தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம் எனும் பத்துக் காப்பியங்கள் குறித்து (இவை பத்துங் காப்பியங்களோ வென்பது வேறு விடயம்) ஒன்பது தமிழறிஞர்கள் ஆற்றிய அல்லது எழுதிய சொற்கோலவைகள் இந்நூலிலிடம் பெற்றுள்ளன. இவை எவ்வளவு தூரம் பதிப்பாசிரியரதும் தொகுப்பாசிரியரதும் நோக்கத்தைப் பூர்த்தி செய்துள்ளன வென்பது கேள்விக்குரியதே.

காப்பியங்கள் குறித்து நாமறியாத பல செய்திகளை இக் கட்டுரைகளின்றும் அறிந்து மகிழலாமெனினும் குறைந்தது மூன்று கூடியது நான்கு கட்டுரைகள் தவிர்ந்த ஏனையவை, தாம் தாம் எடுத்துக்கொண்ட காப்பியங்களின் சில பாடல்களுக்கு நயம் காண்பனவாகவேயுள்ளனவன்றி, அக் காப்பியங்களை அவற்றையறியாது ஒருவன் அறிந்து, அவற்றைச் சுவைக்க ஆற்றுப் படுத்தும் பெற்றியனவாயில்லை. இதனை நன்குணர்ந்ததனாலேதான், தொகுப்பாசிரியர் முதலிற் கட்டுரையாசிரியர்களை அறிமுகப்படுத்திவிட்டு அவர்கள் எழுதிய கட்டுரைகள் எத்தகையனவெனத் தொட்டுக் காட்டிப் போந்தார் போலும்.

இந்நூலைப் படிக்கும் இலக்கிய அறிவு அதிகமற்ற ஒருவன், தமிழ்க் காப்பியங்கள் என்றால் என்ன, காப்பிய விலக்கணங்களெவை என்பன குறித்து மிகத் தெளிவாக அறிந்துகொள்ளத்தக்கவாறு, மிகத் தெளிவாக 'தமிழ்க்காப்பியங்கள்' என்ற நூன் முகக் கட்டுரையில், நல்ல தமிழில், எஸ். பொன்னுத்துரை எழுதியுள்ளார். இந் நூல் காப்பியவிலக்கணம் கூறும் சிறு நூல்' எனும் பொருந்தும். ஏனெனில், நூன்முகக் கட்டுரை மட்டுமன்றி ஏனைய ஒவ்வொரு கட்டுரைகளும் காப்பிய விலக்கணங்கள் குறித்து விரிவாகப் பேசியுள்ளன வென்க.

'சிலப்பதிகாரம்' குறித்து க. வேந்தனார் எழுதியுள்ள கட்டுரையில, சிலப்பதிகாரத்தைச் சிறந்த நூலென நிறுவ முயன்ற அன்னார், ஏனைய காப்பியங்களை வெறுப்போடு நோக்கியுள்ளமை இரங்கற்பாலது. ஏனைய காப்பியங்களைச் 'செயற்கைக் காப்பியம்' என்று கூறும் வேந்தனார், சிலப்பதிகாரத்தை 'இயற்கைக் காப்பியம்' என வரையறுக்கிறார். 'மக்களின் இன்பதுன்பச் சுவடுகள் பதிந்த அற்புத காவியம் சிலப்பதிகாரம்' என்பது அவர் வாதம்; அதாவது யதார்த்த விலக்கியம் என்கிறார் போலும். இத்தகைய வாதங்களில் முதற்கண்ணீடுபட்ட வேந்தனார், ஈற்றில் கண்ணகி, மாதவி ஆகியவிரு பாத்திரங்களைத் தொட்டுக் காட்டி விட்டு விடை பெறுகிறார். சிலப்பதிகாரத்தின் அடிநாதமே எவை என்பதை அவர் குறிப்பிடாது விட்டார். 'அரைசியல் பிழைத்தோர்க் கறங் கூற்றுவ தூஉம் உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்தூட்டு மென்பதூம்' சிலப்பதிகாரம் கூறும் கரு. அவற்றை விளக்காது போனமை பெருங் குறையாகும்.

(12-ம் பக்கம் பார்க்க)

# சங்கப் பலகை

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

மணிமேகலை குறித்து எழுதியுள்ள க. செ. நடராசா அவர்கள் மணிமேகலைக் கதை கூறி, ஆக்கியோன் யாரெனக் கூறிச் சென்று, நடுவில் எடுத்துக்கொண்ட பொருள் தவறி, சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் ஒப்பிட்டுச் சிலப்பதிகாரத்தின் சிறப்புக் கூறி, சிலப்பதிகாரம் பெருங் காப்பியமன்று வெனக் கூறிப் போந்துள்ளார். 'மணிமேகலை' இடை வழியிற் றவறிப் போகின்றது. பெரிய புராணம் பற்றித் தங்கம்மா அப்பாக் குட்டியவர்கள் தக்க வாறு எழுதியுள்ளார். எஃப். எக்ஸ் சி. நடராசா அவர்களின் கட்டுரையில் வீரமா முனிவர் பெற்றளவு முக்கியத்துவத்தை அவர் காவியம் பெறுது போய்விட்டது. எனினும், ஒரு வகைக் கவர்ச்சி (உரை நடையும், சொல்லும் முறையும்) விரவிக் கிடக்கின்றது. இரட்சணிய யாத்திரிகம் எனும் 'நூல்' குறித்து கே ஈ மதியாபரணம் எழுதியுள்ளார். க. வேந்தனுர், க. செ. நடராசா, தங்கம்மா அப்பாக் குட்டி, எஃப். எக்ஸ். சி நடராசா, கே. ஈ. மதியாபரணம் ஆகியோர் தம் கட்டுரைகளினின்றும் அவர்களது இலக்கிய வறிவையும், ஆழ்ந்த புலமையையும் அறிந்து கொள்கின்றோம்; ஆனல், அவற்றை இலக்கியப் பரிச்சயமற்றவர்களுக்குத் தக்கவாறு கூறி இலக்கிய இரசனையை ஏற்படுத்த முடியாதிருப்பதையுங் காண்கின்றோம்.

'காப்பியச் சொற் பொழிவுகள்' எனுமிந் நூலில் மிகச் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க கட்டுரை ஜே. எம். எம். அப்துல் காதிர் அவர்கள் எழுதியுள்ள 'சீறு புராணம்' பற்றியதாகுமெனத் துணியலாம். மிகத் தெளிவாகச் சீறுப்புராணத்தையே மூலத்திற் படித்துச் சுவைத்த இரசனை ஏற்படுவதோடு, அக் காப்பியத்தைப் படிக்கவுந் தூண்டுதலைத் தருகிறது. தக்கதோர் ஆசிரியரின் திறமையிதுதான்.

குண்டலகேசி- வளையாபதி ஆகிய காப்பியங்களைக் குறித்த ச. தனஞ்செயராசசிங்கத்தின் கட்டுரை, சீவக சிந்தாமணி பற்றிய சு. வே. யின் கட்டுரை, கம்பராமாயணம் குறித்த க. சச்சிதானந்தனின் கட்டுரை ஆதியன தாம எடுத்துக் கொண்ட நோக்கத்தை நிறைவேற்றியுள்ளன. குண்டலகேசி, வளையாபதி எனும் காப்பியங்களை அழிந்துபோனவை; அழிந்த அக்காப்பியங்களை ஆங்காங்கு சிதறிக் கிடந்த எலும்புகளை ஒன்று சேர்த்து முழு வுருவமாக நமக்குக் கூறியிருக்கும் ச. தனஞ்செயராசசிங்கத்தின் திறமை போற்றற்குரியது. தெளிவு, சுழிவற்ற வாக்கியங்கள் இறுக்கமாகப் புணர்ந்தமைந்து வாசிப்பவர்களை இடர்ப்பட வைக்கினும், இல்லாத மூல காவியங்கள் குறித்து இருக்கின்ற மூல காவியத்தைப் படித்துணர்வதிலும், சிறப்பாக அறிய வைக்கின்றது.

சு. வே. யின் சீவகசிந்தாமணி பற்றிய கட்டுரை தக்கதொரு கட்டுரையே. சீவக சிந்தாமணி யெனுங் காவியத்தை அணுகுவதற்குத் தக்க வழி கூறச் செல்கின்றது. க. சச்சிதானந்தன் கம்பராமாயணம் குறித்து வரைந்துள்ள கட்டுரை படிப்பவர்களுக்குச் சுவை பயக்கின்றது; ஆசிரியர் கம்பராமாயணத்தைத் தமது வசன் வமைப்பின் மூலம் நம்முன நாடகமாக நடாத்திக் காட்டுகிறுர்.

இறுதியாக—இந் நூல் சாதித்ததென்ன?

'பெருங் காப்பியங்கள் பத்தை' அறிமுகஞ் செய்து வைத்துள்ள, ஈழத் தமிழறிஞர் தம் காப்பியக் கருத்துகளை நமக்கறிய வைத்திருக்கிறது. ஈழத்திலக்கிய வுலகில் நம்மை ஒருபடி மேலுயர்த்தியும் வைக்கிறது. அத்தோடு காப்பியப் பெருங் கடல்களுள் நுழையும் புதியவர்களுக்குத் தெப்பங்களாக இக்கட்டுரைகள் அமைகின்றன.

—அவ்வகையில் 'அரசு' வெளியீட்டினர் பாராட்டுதற் குரியவர்கள்.

—செங்கை ஆழியான்'

## 'சிரித்திரன்'

முகவரி:
101/4 சென். பெனடிக்ற் வீதி
கொட்டாஞ்சேனை
விலை: 33 சதம்.

நகைச்சுவைச் சித்திரத் திங்கள் ஏடான 'சிரித்திரனி'ன் சனவரி இதழ் நமது பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 'நாகரீகப் பொங்கலை' அட்டைப்படமாகக் கொண்டுள்ள இந்த இதழில் மூன்று முழுப்பக்க நகைச் சுவைத் சித்திரங்களும், பதினைந்துக்கு மேற்பட்ட சித்திரத் துணுக்குகளும் இடம் பெற்றுள்ளன. நகைச் சுவைக் கட்டுரைகள், கதைகளும் வேறு இடம் பெற்றுள்ளன. கலப்பைக்கு மிஸ்டர் டாமோடிறன் கொடுக்கும் விளக்கம் ஒவ்வொருவரையும் வயிறு புண்ணுகும் வரை சிரிக்க வைக்கும்.

## தமிழரசுக் கட்சியின்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் அப்படி இன்னும் கூடிப் பேசவில்லை.

ஃ

சிறில் அன்செலம்,
கொழும்பு-14

கே: தங்கள் மறைவிற்குப் பின் தமிழரசுக் கட்சி ஒரு கட்சியாக இயங்காதென்று பலர் அபிப்பிராயப்படுகின்றுர்கள்.' தங்கள் பதில்...!

ப- நான் என்னைப் பற்றி அவ்வளவு பெருமையாய் நினைத்திருக்கவில்லை. வன்னியசிங்கம் முதலியோர் மறைந்த பின்பும் கட்சி இயங்கியே வந்துள்ளது. அது போலவே எனது மறைவிற்கும் பின்பும் கட்சி தொடர்ந்து இயங்கும். இயங்குவது மட்டுமல்ல ஓங்கி வளர்ந்து வரும். என்பதும் என் நம்பிக்கை

## இவ்வாரச் செய்தி தெரியுமா?

### சனவரி 23 ஞாயிற்றுக்கிழமை

ஆசிரியர் பற்றுக் குறையாலும், குடியுரிமைப் பிரச்சினையாலும் வெள்ளவாய, மொனராகலை, கம்பாயம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டன.

'திருகோணமலை நகர சபையின் நிதி நிலைமை நன்ருக இல்லாததினல், மாநகரசபை அந்தஸ்துக்கு உயர்த்த முடியாது' என உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வம் திருமலையிற் கூறினர்

காங்கேசன்துறைப் பட்டின சபையின் நிர்வாகத்தை முழுக்க முழுகக தமிழில் நடாத்தும்படி, அதன தலைவரும தமிழரசுப் பிரமுகருமான திரு. மு. திடவீரசிங்கம் உததரவட்டுள்ளார்.

சனவரி 8ம் திகதி வேலைக்கு வராதிருந்த ஆசிரியர்களின் பெயர்ப் பட்டியலை, வித்தியாதிபதி திரு. ஈ. எச். அல்லிஸ் கோரியிருக்கிறுர்.

கனடா இவ்வாண்டு இலங்கைக்கு 2கோடி ரூபா கடனுதவியாக வழங்க இருக்கிறது.

டாஷ்கெண்ட் பிரகடனப்படி, இந்தியாவும், பாகிஸ்தானும், யுத்தக் கைதிகளை இன்று பரஸ்பரம் பரிமாறிக் கொண்டன.

அந்தந்தத் தொகுதி உறுப்பினர்களின் அனுமதியின்றி மற்ற உறுப்பினர்கள் இடமாற்ற நியமனப் பொது விடயங்களில் தலையிடக் கூடாதென்று சுற்றறிக்கை அனுப்ப இருப்பதாக தமிழரசுப் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் கூறியிருக்கிறுர்.

### சனவரி 24 திங்கட்கிழமை

புறக்கோட்டைப் பகுதியிலுள்ள சில வர்த்தகர்களிடம் இருந்து நேற்று முன் தினம் 'கள்ளப் பணமாக' ரூபா 5 லட்சம் வருமான வரி உத்தியோகத்தர்களால் கண்டு பிடிக்கப்பட்டது.

அ. வி சங்கத்தின் உப தலைவர் திரு. ஏ. டி. கவிசேனு தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

ஊரடங்குச் சட்டம் இவ்வாரத்துடன் நீக்கப்படலாம் எனவும், அவசரகால நிலைமை நீடிக்குமெனவும் ஒரு செய்தி கூறியது: இன்று முஸ்லிம்களின் ரம்ழான் பெருநாள்.

### சனவரி 25 செவ்வாய்க்கிழமை

காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் மொழி புறக்கணிப்பு பற்றி வர்த்தக அமைச்சருக்கு தமிழரசுத் தந்தை எழுதியுள்ள கடிதத்தில், கூட்டுத் தாபனம் தமிழ் பேசும் மக்களுடன் தமிழ் மொழியில், தொடர்பு கொள்ள ஏற்ற நடவடிக்கையை உடன் எடுக்குப்படி கேட்டுள்ளார்.

இவ்வாண்டு நடைபெற்ற தாதிமார் பரீட்சைக்கு 1034 தமிழ் மாணவிகள் தோற்றியுள்ளனர். இவர்களில் 525 பேர் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படுவர்.

வெலிமடையிலுள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலையொன்று ஆசிரியர், மாணவர் பற்றுக்குறை காரணமாக மூடப்படும் நிலையிலுள்ளது.

இலங்கையில் சென்ற ஆண்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளதாக பொலீசாரின் அறிக்கையொன்று கூறிற்று.

திருமதி இந்திராவின் 16 பேர் கொண்ட மந்திரி சபை இன்று பதவியேற்றது. திட்ட மந்திரியாக திரு. அசோக் மேத்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்திய ஜெட் விமானம் ஒன்று அல்ப்ஸ் மலைப் பிராந்தியத்தில் மலையொன்றில் மோதி சுக்கு நூருகியது. அதில் பிரயாணம் செய்த இந்திய அணுசக்தி நிலையத் தலைவரான உலகின் தலைசிறந்த அறிவர் டாக்டர் பாபா உட்பட 117 பேர் மாண்டனர்.

### சனவரி 26 புதன்கிழமை

பொலீஸ் மாஅதிகாரி திரு. எஸ். ஏ திசாநாயக்காவும், கொழும்பு மாவட்ட பொலீஸ் சுபரின்டெண்ட் திரு. வான்டுவஸ்றும் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வகுப்புவாதத்தையும் இனவெறியையும் தூண்டுவோர்மீது கடும் நடவடிக்கை எடுக்க சட்டங்களியற்ற அரசாங்க பாராளுமன்றக் குழு முடிவு செய்தது.

அவசரகால நிலை பற்றிய விவாதத்துக்கு 7 மணித்தியாலம் ஒதுக்குவதென்று நேற்றுப் பாராளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இன்று 16வது இந்தியக் குடியரசு தினம்.

### சனவரி 27 வியாழக்கிழமை

பாராளுமன்றம் நேற்று அவசரகால நிலையை ஆராய்ந்தது. அவசரகால நிலைமையை ரத்து செய்யக் கோரிய எதிர்க் கட்சித் தீர்மானம் 40 அதிகப்படியான வாக்குகளால் தோல்வி அடைந்தது.

சபாநாயகர் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர எதிர்க் கட்சியினர் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறுர்கள்.

பாராளுமன்றத்தில், யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. பொன்னம்பலம் பேசுகையில் 'ஒரு மொழி மட்டுமே வேண்டும் என்னும் எதிர்க் கட்சியாளருடன் 'வட்ட மேசை மாநாடு' நடாத்துவது பயன் தராது' என்று கூறியிருக்கிறுர்.

### சனவரி 28 வெள்ளிக்கிழமை


தமிழ்ப் பாடசாலைகளுக்கு சிங்களப் படிவங்கள் அனுப்புவதை உடனடியாக நிறுத்தும்படி கிளிநொச்சிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம் கல்வி அமைச்சரைக் கேட்டிருக்கிறுர்.

மன்னர் கடலில் மீன் பிடிக்கச் சென்று இராமேஸ்வரத்தில் சிக்கியுள்ள ஐந்து மீனவர்களை இக் கரைக்கு கொண்டுவரும் முயற்சியில் பருத்தித்துறை பா.உ. திரு. க. துரைரத்தினம் ஈடுபட்டுள்ளார்.

சனவரி 8ம் நாள் நடைபெற்ற சம்பவங்களை ஆராய மூவர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பதில் பொலீஸ் மா அதிகாரியாக திரு. ஜோன் அட்டியகலை நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி ஸ்பெஷல் புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், நிறமைசாலிகளும் தங்கள் ஊதியத்திற்கேற்ப, சிறந்த புகை பிடிக்க யானை பீடியையே புகைக்கிறார்கள். பூரண திருப்திக்கு யானை பீடி ஸ்பெஷலே புகையுங்கள்.

யானை பீடி ஸ்பெஷல்

தயாரிப்பாளர்களும் விநியோகஸ்தர்களும்:

யானை பீடி கம்பெனி,

62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு-12.
தொலைபேசி : 7651

# பல லட்ச ரூபா நஷ்டம்

## யுத்த பிரச்சாரப் படங்கள் தயாரித்ததன் விளைவு

தென்னகத்திலும், வட இந்தியாவிலும், யுத்தப் பிரச்சாரப் படத்தைத் தயாரித்து வந்த தயாரிப்பாளர்கள் பலர் இன்று தலையில் கை வைத்தபடி இருக்கின்றனராம். இதற்குக் காரணம் தாஷ்கண்ட் ஒப்பந்தத்தின்படி இப்போது பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் சமாதான சூழ்நிலை ஏற்பட்டு விட்டபடியால், இதுவரை யுத்தப்பிரச்சாரப்படத்துக்காக செய்த பல லட்சக்கணக்கான ரூபாய்கள், வீணாகிவிட்டதே என்று தெரிகிறது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தை தொடர்ந்து இந்திய அரசு பல வழிகளிலும் யுத்தப்பிரச்சாரத்தில் ஈடுபடும்படி மக்களைக் கேட்டுக் கொண்டது. அரசினரின் வேண்டுகோளை ஏற்று தென் இந்தியாவிலும் வடஇந்தியாவிலும் பலதயாரிப்பாளர்கள் யுத்தப் பிரச்சாரப் படத்தை எடுக்கத் தொடங்கினர். ஏறக்குறைய படங்களில் முக்கால் பங்கு எடுக்கப்பட்டு விட்டதாம். இந்த வேளையில் டாஷ்கண்ட் சமாதானப்பிரகடனம் ஏற்பட்டு விட்டதால்மேற்படி தயாரிப்பாளர்கள், செய்வதறியாது மனம் தளர்ந்து போயிருக்கிறார்களாம்.

பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து பல்லாயிரக்கணக்கான அடிகளை எடுத்து முடித்து விட்ட பின்னர், ஏற்பட்ட நிலைமை அவர்களை சதிகலங்கச் செய்துவிட்டதாம். 'நெஞ்சிருக்கும்வரை' என்ற யுத்தப் பிரச்சாரப் படத்தை தயாரித்து வந்த ஸ்ரீதர், இப்போது கதையை முழுக்க மாற்றியமைத்து தயாரித்து வருகிறாராம். கண்ணதாசனும், கோபாலகிருஷ்ணனும் தங்கள் யுத்தப் படங்களை என்ன செய்வதென்று ஆலோசனை செய்து வருகிறார்கள்.

### பத்மஸ்ரீ பானுமதி



இம்மாதம் 26ந் திகதியன்று இந்தியக் குடியரசின் 17வது ஆண்டு நிறைவையொட்டி பல துறைகளிலும் சிறந்து விளங்குபவர்களுக்கு சனாதிபதி டாக்டர் ராதாக்கிருஷ்ணன் அவர்களால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டது. வாசகர்கள் அறிந்ததே நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், நடிப்பரசி பானுமதியும் விருதுகள் அளிக்கப்பட்டுகௌரவிக்கப்பட்டார்கள். இருவருக்கும் 'பத்மஸ்ரீ' என்ற விருதுகள் வழங்கப்பட்டது.

### 35 ஆண்டுகளில், 2428 படங்கள்

கடந்த 1931ம் ஆண்டிலிருந்து 1965ம் ஆண்டு முடிய தென்னகத்தில் 2428 திரைப் படங்கள் வெளிவந்துள்ளன. பட்டியல் இதோ:-

தமிழ்—1194
தெலுங்கு—722
கன்னடம்—209
மலையாளம்—164
இந்தி—94
வங்காளம்—1
சிங்களம்—43
ஆங்கிலம்—1



சிம்மக் குரலோன் சிவாஜி கணேசன் சினம் பொங்க சின எதிரிகளைத் தூள் தூளாக்குகிறார். இக்காட்சியை பிலோமி என்டர்டெயின்மென்ற்ஸ் திரைகளில் 2-வது மாதமாக வெற்றிக் கொடி நாட்டும் 'இரத்தத் திலகத்'தில் காணலாம்.

## நாட்டுத் தொண்டு கலைஞனுக்கு அவசியம்

### சிம்லாவில் எம். ஜி. ஆர்.

'கலைஞன் என்பவன் வெறும் மேனாமினுக்கியாக இருக்கக்கூடாது. தனக்குக் கிடைக்கின்ற புகழுக்கும், செல்வத்திற்கும்' செல்வாக்கிற்கும் சாதாரண பொதுமக்களே காரணம் என்பதை ஒருகலைஞன் எப்போதும் மறந்துவிடக் கூடாது ஒவ்வொரு கலைஞனும் நாட்டுக்காகவும், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகவும் தன்னாலியன்ற முறையில், கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் உதவ வேண்டும்.

இவ்வாறு மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன், சிம்லா நகரில் நாட்டுப் பாதுகாப்பு நிதிக்காக நடைபெற்ற ஒரு கலை விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஏ. வி. எம். தயாரித்து இப்பொழுது தமிழகமெங்கும் வெற்றிக்கொடிநாட்டி ஓடிக்



கொண்டிருக்கும் 'அன்பே வா' என்னும் படத்தில் வரும் சில காட்சிகளில் நடிப்பதற்காக இயற்கை அழகு சொழிக்கும் சிம்லா' நகரத்துக்கு எம். ஜி. ஆர். சென்றிருந்தார். சரோஜாதேவியும் சென்றிருந்தார். சென்ற இடத்திலும் நாட்டின் பாதுகாப்பை மறக்காத மக்கள் திலகம், பாதுகாப்பு நிதிக்காக ஒரு கலைநிகழ்ச்சியை தானே ஒழுங்கு செய்து நடத்தினர். இந்தக் கலை விழா நிகழ்ச்சிகளில் எம். ஜி. ஆர். பேசிய பேச்சு ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டது. அப்பொழுது எம். ஜி. ஆர். கூறியதாவது:-

'ஒவ்வொரு கலைஞனும் நாட்டுப் பாதுகாப்புக்கு தன்னாலியன்ற ஆகக்கூடிய சேவையைச் செய்ய வேண்டும். நாடு இருந்தாற்த்தான் கலை, கலாச்சாரம் பாதுகாக்கப்படும். என்னைப்பொறுத்தளவில் என்னாலியன்றவரை முடிந்த உதவிகளைச் செய்திருக்கிறேன். இன்னும் செய்யக் காத்திருக்கிறேன். என்னுடைய உயிர், உடல், பொருள் மூன்றையும் நாட்டுக்காகத்தர என்றும் தயாராகவுள்ளேன். என்னை பொது வாழ்வுக்கு இழுத்து நாட்டுத் தொண்டு செய்ய வைத்தவர் எனது தலைவர் அறிஞர் அண்ணா அவர்களே!'

### மல்யுத்தம்



அன்பேவா படத்தில் வரும் சில கவர்ச்சிகரமான காதல் காட்சிகள் இங்கு படமாக்கப்பட்டன. இந்தப்படத்தில் எம். ஜி. ஆர் அவர்களும் உலகப் பிரசித்தி பெற்ற மல்யுத்த வீரரான 'சிட்டிங் புல்' என்பவரும் மோதும் மல்யுத்தக் காட்சியு வருகிறது' நடுவராக நாகேஷ் விளங்குகிறாராம்.

### தோட்டக்காரன் மகனாக எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆரை வைத்து, பத்மினி பிக்சர்ஸ் திரு. பி. ஆர். பந்துலு தயாரித்து வரும் 'நாடோடி' படம் வளர்ந்து வருகிறது. இதில் எம். ஜி. ஆர் ஒரு ஏழைத் தோட்டக்காரன் மகனாக வருகிறார். பாரதி என்னும் புதுமுக நடிகை நடிக்கும் இப்படத்தில் சரோஜாதேவி, நம்பியார், பேபி சகிலா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

வங்கக் கதையொன்றின் தழுவலான இந்தத் திரைக் கதைக்குரிய வசனத்தை ஆர். கே. சண்முகம் எழுத, பாடல்களை கண்ணதாசன் எழுதுகிறார்.

### 'சித்திரா பௌர்ணமி'

பிரபல இயக்குனர்களான, கிருஷ்ணன் — பஞ்சு ஆகியோரின் டைரக்‌ஷனில், வேல் முருகன் பிலிம்சாரின் 'சித்திரா பௌர்ணமி' வேகமாக வளர்ந்து வருகிறது. இதில் எஸ். எஸ். ராஜேந்திரன் ஒரு வாடகைக் காரோட்டியாக தோன்றுகிறார். விஜயகுமாரி ஒரு பாடகியாகத் தோன்றும் இப்படத்தில் நாகேஷ் மனோரமா ஆகியோரும் நடிக்கின்றனர். சமீபத்தில் 'தோடி' ராகத்தில் சுசிலா பாடிய பாடலொன்று இதற்காக பதிவாக்கப்பட்டது.

### நாரதராகிறார் சிவாஜி

'திருவிளையாடல்' படத்தைத் தயாரித்து வெளியிட்ட ஸ்ரீவிஜய லட்சுமி பிக்சர்சார் இப்போது 'சரஸ்வதி சபதம்' என்ற புராணக் கதையை தயாரிக்க தொடங்கியிருக்கிறார்கள். இதில், சிவாஜி கணேசன் நாரதராகவும் சரசுவதியாக சாவித்திரியும் பார்வதியாக பத்மினியும், லட்சுமியாக தேவிகாவும், வீரனாக ஜெமினி கணேசனும் தோன்றுகிறார்கள். அரசியாக கே. ஆர். விஜயா வருகிறார். கலரில் தயாராகும் இப்படத்தின் டைரக்‌ஷனை திரு. ஏ. பி. நாகராஜனே கவனிக்கிறார். சாரதா படப் பிடிப்பு நிலையத்தில் படப்பிடிப்பு நடைபெறுகிறது.

### உங்களுக்குத் தெரியுமா?

- நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்குப் பின்னணி பாடுபவர்களில் லதா மங்கேஷ்கரைத் தான் அதிகம் பிடிக்கும். சிவாஜி கணேசன் எந்த வேலையாக இருந்தாலும், லதா மங்கேஷ்கரின் பாட்டென்றால் அதிலே லயித்து விடுவார். லதாவின் பாட்டென்றால் சிவாஜிக்கு உயிர். அதே போல சிவாஜியின் நடிப்பு, லதாவுக்கு கற்கண்டு.

★ மக்கள் திலகம் எம். ஜி. ஆர். படப்பிடிப்பு இடைவேளைகளில் பொழுது போகாது விட்டால், நண்பர்களுடன் சீட்டாட உட்கார்ந்து விடுவார். பணம் வைத்து அல்ல; எம். ஜி. ஆர். இருக்கும் போது அது நடைபெறுதல்லவா?

★ ஜெமினி கணேசன், சாவித்திரி தங்கள் ஆண் குழந்தைக்கு என்ன பெயர் வைத்திருக்கிறார்கள் தெரியுமா? 'சதீஷ் குமார்.'

★ சிவாஜி கணேசனின் தயாரைப் பற்றி எல்லோருக்கும் தெரியும்; ஆனால் தந்தை யார் என்று தெரியுமா? தஞ்சையை அடுத்த சூரக் கோட்டையில் வசிக்கும் சின்னையா மன்றாயர் தான் சிவாஜியின் தந்தை. சூரக் கோட்டையில் உள்ள சிவாஜியின் பண்ணையை மேற்பார்வை செய்கிறார் அவர்.

பெப்ரவரியில்

## தேசியக் கலை விழா

இலங்கை வாழ் தமிழ்—சிங்கள—முஸ்லீம் மக்களிடையே நெருங்கிய ஒற்றுமையை ஏற்படுத்தவும்—தேசிய உணர்வை உண்டாக்கவும் இலங்கைத் தேசிய கலைச் சங்கத்தினர் பெரிய அளவில் ஒரு கலை விழாவை இலங்கையில் நடத்த ஏற்பாடு செய்துவருகிறார்கள் என்றும், இவ்விழா பெப்ரவரியில் நடைபெறலாம் என்றும் தெரிகிறது.

மேற்படிதேசியக்கலைவிழாவில் கலை, இலக்கியம், கைத்தொழில், வீரம், விளையாட்டு முதலிய பல் துறைகளிலும் சிறந்து விளங்குபவர்களைப் பாராட்டி கௌரவிக்கப் படுவார்களாம்.

தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பின்பு ஏற்பட்டுள்ள தேசிய ஒற்றுமையை வளர்ப்பதே இவ்விழாவின் நோக்கம் என்று கருதப்படுகிறது.

இவ்விழாவின் போஷகர்களாக தேசிய அமைச்சர் திரு. வி. ஏ சுகததாச, உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம், வீடமைப்பு அமைச்சர் ஜனாப் எம். எச் முகமெட் ஆகியோர் விளங்குகிறார்கள் என்று தெரிகிறது.

பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் இவ்விழாவின்போது சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படுமாம்.

### 'கிழக்கு வெளுத்ததடி'

'கிழக்கு வெளுத்ததடி, கீழ் வானம் சிவந்ததடி கதிரவன் வரவுகண்டு கமலமும் மலர்ந்ததடி! எங்கள் குடும்பம் ஏரெத்து நடந்ததடி' இன்று வந்த தென்றலுக்கு இதய மெல்லாம் திறந்ததடி' என்று சுசிலாவும் சௌந்தரராசனும் பாடும் பாட்டு, 'அவன் பித்தனா' என்ற படத்துக்காக, சாரதா ஸ்டுடியோவில் பதிவு செய்யப்பட்டது.

இப்படத்தில் எஸ். எஸ். ஆர், விஜயகுமாரி இருவரும் பிரதமபாகத்தில்நடித்துவருகிறார்கள்.

### 'கட்டுங்கள் திறக்கப்படும்'

நகைச்சுவை நடிகர் சந்திரபாவு தயாரித்து வரும் 'கட்டுங்கள் திறக்கப்படும்' என்ற படம் முடியும் தறுவாயிலுள்ளது.

சந்திரபாவு, சாவித்திரி, கே. ஆர். விஜயா ஆகியோர் நடிக்கும் இப்படத்தின் கதையை சந்திரபாபுவே எழுதியுள்ளார்.

பெப்ரவரியில் இப்படம் திரையிடப்படும் எனத் தெரிகிறது.

# "எனக்குக் கேட்பதெல்லாம் கழுதைக் கனைப்புகள் தான்"

## பாராளுமன்றத்தில் சில சுவையான நிகழ்ச்சிகள்

**தமிழ் மொழி மசோதா விவாதத்தின் போது மக்கள் பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற சில சுவையான சம்பவங்களை நமது சபை நிருபர் கடந்த வாரம் திரட்டித் தந்திருந்தார். அதன் தொடர்ச்சியாக மேலும் சில சுவையான சம்பவங்கள் இங்கு இடம் பெறுகின்றன-**

பாராளுமன்றத்தில் சனவரி 8ம் நாள் தமிழ் மொழி மசோதாவை முன்மொழிந்து இராசாங்க அமைச்சர் பேசிக் கொண்டிருக்கிறார். 1963ம் ஆண்டு, களுத்துறையில் நடைபெற்ற ஐ. தே. கட்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட கட்சி விஞ்ஞாபனத்தை நிறைவேற்ற அரசாங்கத்துக்குப் பூரண அதிகாரமுண்டென அவர் குறிப்பிடும் போது, குறுக்கே பல குரல்கள் எழுகின்றன.

ஜே. ஆர்:- தயவு செய்து அமைதியாயிருங்கள், இல்லாவிடில் மீண்டும் உங்களைத் தாக்குவேன்.

கெனமன்:- உங்கள் தேர்தல் விஞ்ஞாபனம் வேறு மாதிரி அமைந்திருந்தது.

ஜே. ஆர்:- இல்லை, இது தான்.

கெனமன்!- இது தேர்தல் விஞ்ஞாபனமல்ல; இது உங்கள் கட்சி விஞ்ஞாபனம்.

ஜே. ஆர்:- நீர் எப்படி எமது கட்சி உறுப்பினராக முடியும்? எமது கட்சி சனநாயகக் கட்சி.

டட்லி:- ஆம். அவர் உறுப்பினரே.

கெனமன்! நான் இரண்டு தஸ்தாவேஜுகள் வைத்திருக்கிறேன்,

என். எம். பெரேரா:- நீங்கள் இருவரும் ஒரு கட்சியில் இருந்துள்ளீர்கள். நீர் அதை மறந்து விட்டீர்.

டட்லி: அவர் எங்கள் கட்சியில் இருந்தார்.

கெனமன்:- ஐ. தே. கட்சியிலல்ல.

டட்லி:- இல்லை, முன்பு வாலிபர் காங்கிரசில்.

திரு. கெனமன் உட்காருகிறார்.

ஜனவரி 10ந் திகதி இரவு 7 மணி பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணையை திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு எடுத்தியம்புகிறார். அப்போது அரசாங்கக் கட்சியிலிருந்தும், எதிர்க் கட்சியிலிருந்தும் பலர் ஒரே நேரத்தில் பேச எழுகிறார்கள். தமிழரசுத் தந்தை செல்வாவும், யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. பொன்னம்பலமும் ஒரே நேரத்தில் எழுகிறார்கள். செல்வா ஏதோ சொல்ல முற்படுகிறார். இதை, சபாநாயகரும், பேச முற்பட்ட மற்றைய உறுப்பினர்களும், அவதானிக்கிறார்கள். செல்வாவுக்குப் பேச சந்தர்ப்பமளித்து, பேச எழுந்த உறுப்பினர்கள் எல்லோரும் அமர்ந்து விடுகிறார்கள். ஆனால் பொன்னம்பலம் மட்டும் அமர மறுத்து விட்டு பேசத் தொடங்குகிறார்.

பொன்னம்பலம்!- நான் பேச விரும்புகிறேன் ஐயா.

சபாநாயகர்:- காங்கேசன் துறை உறுப்பினர் பேசட்டும் நீங்கள் பின்பு பேசலாம்.

பொன்னம்பலம் வலுக்கட்டாயத்தின் பேரில் மனமின்றி உட்காருகிறார்.

செல்வா:- நேற்று இந்தச் சபையில் குறிப்பிடப்பட்ட தஸ்தாவேஜு பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

[எதிர்க் கட்சி உறுப்பினர்களும், ஆளுங் கட்சி உறுப்பினர்களும், செல்வா தங்கள் தங்களுக்கே சாதகமாக சொல்லப் போகிறார் எனக் காதைத் தீட்டிக் கொள்கின்றனர். 'நேர்மைக்கு ஒருவர்' என்கிறது ஒரு குரல்; 'உண்மையைத் தவிர வேறு எதுவுமே பேசாதவர் செல்வா' இன்னொரு குரல் இப்படி ஒலிக்கிறது இரண்டு பக்கங்களிலிருந்தும்.]

ஜனவரி 11ம் திகதி பிற்பகல். எதிர்க் கட்சிகளுக்குப் பதிலளித்துப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா பேசிக் கொண்டிருக்கிறார்.

டட்லி: இது எல்லாம் எதிர்க் கட்சித் தலைவிக்குத் தெரியாது.

சிறிமாவோ:- யார் அந்த மறுத்தது?

ஒரு உறுப்பினர்! அவர் அப்போது அடுப்படியில் இருந்தார். (இச் சந்தர்ப்பத்தில் எதிர்க் கட்சித் தலைவி அருகிலிருந்த உறுப்பினருடன் ஏதோ குசுகுசு என்று பேசிக் கொண்டிருக்கிறார்.

சிறிமாவோ:- நான் என் பக்கத்தவருடன் பேசுகிறேன். நீங்கள் ஏன் அதிர்ச்சியடைய வேண்டும்?

டட்லி:- நீங்கள் ஏன் அதிர்ச்சியடைகிறீர்கள்? உண்மையில் நீங்கள் இங்கே இருக்கின்றபொழுதும், நான் அதிர்ச்சியடையவில்லை. இப்பொழுது வயது முதிர்ந்தவனாகி விட்டேன், எதைக் கண்டும் நான் அதிர்ச்சியடையப் போவதில்லை.

சிறிமாவோ:- மிகவும் சாதுரியமான பேச்சு.

டட்லி:- இருக்கலாம்; நான் முட்டாள் அல்லவே!

ஜனவரி 10ம் நாள். பாராளுமன்றத்தில், திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசிக் கொண்டிருக்கிறார். முன்பு தாங்கள் ஆட்சியிலிருந்தபோது புத்த பிக்குகளை எவ்வாறு நடத்தினர்கள் என்பதைக் குறிப்பிடுகிறார்.

பீலிக்ஸ்:- இதே, அமரவன்ச, மீட்டியகொட, குணரத்தின, சிலவன்ச......

ஒரு குரல்:- புத்தரக்கித...

பீலிக்ஸ்:- ஆம், இவர்கள் எல்லாம் ரோஸ்மட் பிளேசில் கூடிய போது நாங்கள் பாதுகாப்பு அளித்தோம்.

பிலிப் குணவர்தனு:- கோட்டேயிலிருந்து வந்த ஆண் கழுதை.

ஸ்டான்லி திலகரத்தின:- நீர் ஒரு கழுதை

உதவி சபாநாயகர்:- கோட்டே உறுப்பினர் அப்படிப் பேசுவதை நிறுத்தும்.

ஜனவரி 10ம் திகதி. திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா பேசிக் கொண்டிருக்கிறார்.

பீலிக்ஸ்:- சிங்கள தமிழ் தேசிய ஒற்றுமை ஒருபோதும் ஏற்படாது என தமிழரசுக் கட்சி எம்மிடம் ஒருமுறை கூறியதுண்டு.

தமிழரசு உறுப்பினர்கள்:- ஒருபோதும் இல்லை.

அமிர்தலிங்கம்!- ஆதாரப்படுத்தும்.

பீலிக்ஸ்:- உமக்கு ஆதாரம் வேண்டுமா?

அமிர்தலிங்கம்: ஆம்.

பீலிக்ஸ்:- திரு. இராசமாணிக்கம.........(பல குறுக்கீடுகள்) சில விநாடியில உங்களுக்கு விபரம் தருகிறேன்.

அரசாங்க உறுப்பினர்கள்:- உறுதிப்படுத்தும் அல்லது வாபஸ்பெறும்.

டாக்டர் நாகநாதன்:- (சபாநாயகரிடம) ஒரு ஒழுங்குப் பிரச்சினை; ஐயா!

உப சபாநாயகர்:- சரி, கேட்போம்.

நாகநாதன்:- நேற்றுஎதிர்க் கட்சியின முக்கிய பேச்சாளர் ஒரு தஸ்தாவேஜை இன்று சமர்ப்பிப்பதாகக் கூறினர். (பல குறுக்கீடுகள்)

உறுப்பினர்கள்:- அந்த மனிதரைக் காணவில்லை.

அமிர்தலிங்கம்:- அவர் இன்று சபைக்குத் திரும்பக் கூட இல்லை.

உறுப்பினர்:- அவர் தலைமறைவாகி விட்டார்.

உப சபாநாயகர்:- நல்லூர்ப் பிரதிநிதியின் ஒழுங்குப் பிரச்சினை தேவையற்றது.

உப சபாநாயகர்:- ஒரு பக்கம் கழுதைகளைப் பற்றியும் மற்றப் பக்கம் ஆண் கழுதைகளைப பற்றியும் பேசப்படுகிறது. எனக்கு கேட்பதெல்லாம் கழுதைக் கனைப்புத் தான்.

பீலிக்ஸ்:- இப்பொழுது ஐயா, நான ஹன்சாட் வைத்திருக்கிறேன்.

இராசமாணிக்கம்:- அதில் இல்லாததை வாசிக்க வேண்டாம்.

பீலிக்ஸ்:- நான் ஹன்சாட்டிலிருந்து சில விநாடியில் கண்டு பிடித்து விடுவேன்.

அமிர்தலிங்கம்:- அவர் இன்னும கண்டு பிடிக்கக்கூடவில்லையா?

---

# சடங்கு

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில், செந்தில்நாதனும் அந்த மரியாதைக்கு முற்றிலுந் தகுதியானவர். அவர் மிகமிகப் பண்பாளர். பார்ப்பதற்கு நாற்பத்தைந்து வயது தோற்றமிருந்தாலும், வாஸ்தவத்தில் இன்னமும் நாற்பது வயதைத் தாண்டவில்லை. அவருக்கு எப்பொழுது நாற்பது வயதுகள் நிறைவுறும் என்ற சங்கதியும் செல்லப்பாக்கிய ஆச்சிக்கே தெரியும். இந்த வயதிலேயே செந்தில்நாதன் 'அவர்' என்ற மரியாதைப் பன்மையைச் சம்பாதித்துக் கொண்டமைக்கு அவருடைய நன்னடத்தையே முற்றிய ஏதுவாகும். என்னென்னமோ கூத்துகள் எல்லாம் நடைபெறுவதாகச் சொல்லப்படும் கொழும்பு மாநகரிலே மிகமிக ஒழுக்கமான வாழ்க்கை நடத்தும் ஒரேயொருவர் தன்னுடைய கணவனே என்பது அன்னலட்சுமியின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அவரும் அந்த நம்பிக்கையை, மனமறிந்து என்றுமே பொய்யாக்கியதில்லை.

பொல்கொட வாவியிலிருக்கும் 'சான் மிச்சேல்' தீவிற்கு, சந்தோர் உத்தியோகத்தவர்களுடன் ஒரு தடவை 'பிக்னிக்' சென்றபொழுது செந்தில்நாதனைக் கண்டவர்கள், அவரைப் பற்றி விகற்பமாக நினைக்கலாம். அந்தச் சம்பவம் அன்னலட்சுமியின் காதுகளுக்கு எட்டக்கூடாது என்பதற்காக அவர் கையெடுத்துக் கும்பிடாத கோயிலேயில்லை.

அவராகக் காசு செலவு செய்து தவறணை—பார்—ஹோட்டேல்களின் படியேறிக் குடித்துப் பழக்கமில்லாதவர். யாராவது ஏதாவது உதவி செய்து விட்டால், நன்றிக்கடனை உடன் தீர்த்து விட வேண்டுமென்ற நத்தில், அவர்களுக்கு வாய்க்கும்பொழுது— நேற்று ஹொட்டேல் மெற்றபோலில் நடந்ததைப் போல—காசை எண்ணிப் பார்க்காமல் செலவு செய்து குடித்திருக்கிறார். இதுகூட நேற்றையுடன், அவருடைய பத்துவருடம் என்கிற நீண்ட குடும்ப வாழ்க்கையில், ஒற்றைக் கைவிரல்களில் எண்ணிவிடத்தக்க சந்தர்ப்பங்களிலேயே நடந்திருக்கின்றது. முகம் முறிக்கக் கூடாதவர்கள் வற்புறுத்தி எடுக்கச் சொன்னால். 'அருக்காணி' காட்டி, கண்ணுக்கு விடுறுப் போலை எப்பவோ பாவிப்பார்.' ஆனால் கந்தோர் ஊழியர்கள் அவ்வப்போது நடத்தும் 'பார்டி'களிலே தாராளமாக குடித்துத் தீர்த்து விடுவார். இதுவும் குடிக்க வேண்டுமென்ற ஆசையினாலல்ல. 'நாமும் சமமாக தானே காசு போட்டிட்டம். மற்றவங்கள் குடிச்சு வெறிக்க, நாம சும்மா இருந்தால், நம்ம காசுதானே வீணாய் நட்டம்' என்ற வெளிக்கு விவகாரத்திலே பிசினக அந்தப் பழக்கம் ஒட்டிக் கொண்டது.

அன்று, 'சான்மிச்சேல்' தீவில், இந்தப் பழக்கத்தினாற்றான் குடித்து விட்டார். அப்பொழுது அவருக்கும் கொஞ்சம நிதானம் தவறியிருந்தாலும், பின்னர் அந்தச் சம்பவத்தை இரை மீட்டிப் பார்த்திருக்கின்றார். கந்தோரிலை வேலை செய்யிற ரெண்டு பறங்கிப் பெட்டையளும்... அவளவையளுக்கு பியர் என்டால் பெண்களின்ரை குடிவகைதானே?... பியரை நல்லாக் குடிச்சுப் போட்டு, பாட்டும் பாடி, 'குண்டி நெளிச்சு' கூத்தாடினவை...எங்கடை ஊர்ச் சின்ன மேளங்களைப் போலையோ? மனசாரச் சொல்லவேணும், அப்படி நெளிக்கேக்கை வம்புத்தனமா இருந்தாலும், வடிவாத்தான் இருந்தது...... பொழுதைச் சந்தோஷமாக் கழிக்க வந்த இடத்திலை, சரியாக இருக்கிறதை விட்டிட்டு, உம்மணாம் மூஞ்சியளாக இருக்கிறது வடிவோ?... எங்கடை கந்தோருக்கு புதிசா வந்திருக்கிற யாழ்ப்பாணப் பொடியள் உதுகளுக்குப் புதிசு. அவை பாத்திப் பாத்தி நடக்கேக்கை ளையே வைங்கிப் போச்சுது சப்பாத்துக் கால் வெட்டிப் போச்சுதெண்டு... அவங்கள் ஒதுங்கி இருந்தட்டாங்கள், உதத யாழ்ப்பாணியன் உப்பிடித்தான; தாங்கள் தங் தங்கடை பாட்டிலே; ஒருத்தரோடையும் சேரமாட்டாங்கள் எண்டு எல்லாருக்குந் தானே தெரியும்...' இத்தகைய எண்ணங்களில் உத்த கரிசனையிலேதான் பறங்கிப் பெண்களுடன் அன்று கூத்தாடினர். அதைக் கண்ணுற்ற கண்ட சிலர் விகற்பமாக நினைத்திருக்கலாமே தவிர, அவருடைய மனதிலே எவ்வித விகார எண்ணமும் இருந்ததில்லை. கொடுத்த காசும் அனுபவிக்கும் பொருள்களின் பெறுமானமும் சரியாகவுள்ளதா என்று கணக்குப் பார்ப்பது அவருடைய இயல்பான சுபாவமாகும். இதை வைத்துக் கொண்டு அவர் பார்டிகளில் மிதமிஞ்சிக் குடிக்கிறார் என்று குற்றஞ் சாட்டி விட இயலாது. அவரைக் குடிக்கக் கூடாது என்று செல்லப்பாக்கிய ஆச்சிகூடச் சொன்னதில்லை. அவளுடைய சிபார்சின் பெயரில், குட்டிற்கு நல்லது என்பதற்காக, சில வேளைகளில் வீட்டிலேயே பனங்கள்ளுப் 'பாவி'த்திருக்கின்றார். குடியாற் பணம கரையும் என்ற ஒரேயொரு காரணத்திற்காகத்தான் அவர் அந்தப் பழக்கத்தை வாலாயப்படுத்திக்கொள்ளவில்லை.

அவர் முற்றுந் துறந்த ஞானியல்லர். பாலெழுச்சி ஊற்றுக்கள் அடைத்துப் போன கட்டையுமல்ல. ஒரு கணத்தில் அன்னலெட்சுமி மீது ஏற்பட்ட ஆவேச விருப்பக் காரணமாகத்தான் இந்த யாழ்ப்பாணப் பிரயாணத்தை மேற்கொண்டிருக்கின்றார். அன்னலட்சுமி என்ற தெய், தூரத்தில்—யாழ்ப்பாணத்தில்—இருக்கும்பொழுது, அவருடைய பாலெழுச்சிச் சுடர் மங்கி அவிந்துவிடுகிறது என்றதியதில்லை. அவருடைய மனம் சில வேளைகளிற் இறுவன் குரங்காக, தசைப்பிடுங்கல் என்ற வாலிப்பான கொம்பர்களிலே தாவும். இந்த விவகாரத்தில், மனக்குரங்கின் ஆட்டப்படிவிட்டு, ஆக்கிக் கட்டிப் பூசி மினிக்கித் திரியிற கொழும்புத் தேவடியாளுக்குப் பின்னல் மேய்ந்து விட்டு, கை மாற்றுகச் சரக்குப் பறித்துக் கொண்டு; 'சுண்டங்காய் காற் பணம், சுமைகூலி முக்காற் பணம்' என்ற வகையில் டொக்டர்களுடைய படிக்கட்டுகள் தேய அலைந்து திரிந்த சிலரை அவர் அறிவார். இறுவன் குரங்காக அவர் மனம் மாறும் பொழுது, அவர்களை நினைத்துப் பார்த்து தன்னுடைய கற்பு நோன்பினை வெற்றிகரமாக இயற்றிக் கொண்டிருக்கின்றார். காரணம் எதுவாக இருந்தாலும், விசுவாசமான கணவரைப் பெற்ற பாக்கியவதி அன்னலட்சுமி.

தன்னையே காதலித்து, தன்மயமாகவே சிந்திப்பவர்களுக்குக் கிடைக்கும் ஒருவகைச் சொகுசும் செந்தில்நாதனுக்கு இயல்பாக அமைந்துள்ளது. எந்தப் பெரிய கூட்டத்திலுந் தன்னந்தனியாக இருந்து, அந்தத் தனிமை அனுபவிக்கும் சுகந்தான் அது.

'மாகோவில் மட்டக்களப்புச் சனங்களும் வந்து மொசுப்போடுங்கள்' என்ற எண்ணத்தில், குருணகல் தாண்டியதும் இடியப்பச் சரையைக் காலி செய்த அவர், அந்தத் தனிமைச் சுகத்திலே திளைத்து, மூலை ஆசனத்தின் ராஜபோகததை அனுபவித்தவாறே, பூனை உறக்கங் காட்டிப் பாதிப் பயணத்தை முடித்து, அநுராதபுரத்திற் கண் விழித்தார்.

(வளரும்)

பலருக்கு விஷயத்தைப் பரவவிட்டாற் பரபரப்பு உண்டாகிவிடுமே என்ற காரணத்தினால் சகலவற்றையும் மறைவாகவே செய்து முடிக்கத் திட்டமிட்டால, ஸ்டெலின் முதலில் டோக்கியோவிற்கு வெகு அருகில் வசித்த தனது மாமா 'சாம்' மின் வீட்டிற்குச் சென்று அவரது மகனை,

ஜோர்ஜ்சை அழைத்து விஷயம் முழுவதையும் இரகசியமாகக் கூறினான். ஜோர்ஜின் குணம், ஸ்டெலினுக்கு நன்றாகத் தெரியும் ஆயிரம் டாலர் பணம் தருகிறேன் என்றாலும், இரகசியம் என்று ஒருவர் கூறுவதை வெளிவிடமாட்டான். ஜோர்ஜ், ஸ்டெலினின் கதையைக் கேட்டு விட்டுப் புன்முறுவலுடன் சொன்னான்,—'உனக்கு ஸ்கூட்டர் தருவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை! ஆனால் நீ சொன்னதை நான் நம்பவேண்டுமா? ஸ்கூட்டரை எடுத்துப்போ! ஆனால் இப்படி வண்டவாளத்தைத் தண்டவாளம் ஏற்றாதே, அப்பனே!'

ஸ்டெலினுக்கு மனதில் ஆத்திரம் உண்டாகியது. எனினும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், 'நீ நம்பமாட்டாய் என்று எனக்குத் தெரியும்; ஏன், எனது மாமாவும்கூட-உனது அப்பாவும்கூட-நம்பமாட்டார் என்று எனக்குத் தெரியும்! ஆனால் இது உண்மை; அமெரிக்காவிலே அரிசோனாப் பாலைவனத்திலே பறக்கும் தட்டு இறங்கியதாக ஜோர்ஜ் ஆடம்ஸ்கி என்பவர் ஆதாரத்துடன் பத்திரிகைகளில் வெளியிட்டாரே! நீ எனது வீட்டிற்கு வந்து அந்த மனிதனைப் பார்த்தால் பிறகு இப்படிப் பேசமாட்டாய்! வேண்டுமானால் என்னுடனே பொலீஸ் ஸ்டேசனுக்கு வந்துவிட்டு வீட்டிற்கு வந்து பாரேன்!' என்று கூறினான்.

இருவரும் ஒருவரையொருவர் உணர்ந்த நண்பர்கள். ஸ்டெலின் பொய் பேசுவதில்லையென்பது ஜோர்ஜிற்குத் தெரியும்! 'இவ்வளவு வற்புறுத்துகின்ற காரணத்தினால் இதில் உண்மையிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்தான், ஜோர்ஜ்.

சில நிமிடங்களில் அந்த இரண்டு நண்பர்களையும் சுமந்தவாறு ஸ்கூட்டர்




முழு நீள அறிவியல் விசித்திரக் கதை

# மண்ணிற்கு மேலே...

ஒன்று வேகமாகப் புறப்பட்டது. தான் தாமதிக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் தன் தந்தைக்கு ஆபத்தை நெருங்கச் செய்யும் என்பதை ஸ்டெலின் உணர்ந்திருந்ததால் ஸ்கூட்டரை வெகுவேகமாகச் செலுத்தினான் சுமார் அரைமணி நேரத்தில் அது, டோக்கியோ நகரின் தலைமைப் பொலீஸ் நிலையத்தினுள் நுழைந்தது. ஸ்கூட்டரை நிறுத்திவிட்டு இருவரும் இன்ஸ்பெக்டரின்

## அரியாலையூர் த. இந்திரலிங்கம்

அறையை நோக்கி நடந்தனர். இன்ஸ்பெக்டர், கையிற் குறுந்தடியைச் சுழற்றிய வண்ணம் சாய்வு நாற்காலியிற் சாய்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். அவரது உத்தியோக பூர்வமான நாற்காலியில் ஒரு புதிய அதிகாரி உட்கார்ந்து பலகுறிப்புகளைப் 'பைல்' பண்ணிக்கொண்டிருந்தார். வேகமாக வந்த ஸ்டெலினையும், ஜோர்ஜையும் கண்ட இன்ஸ்பெக்டர், 'யாருடைய உத்தரவுடன் உள்ளே வருகிறீர்கள்;' என்று சீறினார். அவருடைய பேச்சில் எவ்வளவு சீற்றம் இருந்ததோ அவ்வளவு பணிவுடன் பேசினான், ஸ்டெலின் 'மிக்க முக்கியமான விஷயம், சார்! இருவருடைய உயிர்போகிற விஷயம்!'

ஸ்டெலினின் பணிவு இன்ஸ்பெக்டரின் முறுக்கைக் குறைக்கவில்லை. சாய்வுநாற்காலியிலிருந்து எழுந்தவாறே, 'போகப் போகிறீர்களா? இல்லையா? இரண்டு உயிர் போகிறதைப் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள்... நாங்கள் பூவுலக மக்கள் எல்லோருடைய உயிரும்போகப் போகிறதேயென்று எண்ணி மண்டையைக் குழப்புகிறோம்! உங்களுடைய விஷயத்தை யாராவது சப்-இன்ஸ்பெக்டரிடம் போய் அழுங்கள்! 'என்றார். அவருடைய பேச்சு முழுவதும் ஸ்டெலினிற்கு விளங்கவில்லை. ஸ்டெலின் உடனே விஷயத்தைப் 'பட்'டென்று உடைத்துச் சொன்னான்:—'இல்லைசார்! இதுவும் தேச மக்களின் விஷயம்தான்! பறக்கும் தட்டு ஒன்று எங்கள் வயலில் இறங்கிவிட்டது! அதனுள்ளிருந்த மனிதனைப் பிடித்து வைத்திருக்கிறோம்...'

இதைக் கூறிய மறுகணமே இன்ஸ்பெக்டரின் முறுக்குக் குறைந்து நாற்காலியிற் சாய்ந்தார். பக்கத்திலிருந்த மற்ற அதிகாரியும், இன்ஸ்பெக்டரும் ஒரே குரலில் மிக ஆவலுடன் 'பறக்கும் தட்டு இறங்கியதா? உண்மையாகவா? 'என்று கேட்டனர்' 'உண்மை இல்லாத விஷயத்துக்காகவா இவ்வளவு தூரம் ஓடிவருகிறோம்? முழுதும் உண்மை சார்' என்று சற்றுத் துணிச்சலுடன் கூறினான் ஸ்டெலின். அவனுக்குஇன்ஸ்பெக்டரின் போக்குப் பிடிக்கவில்லை. எனவே அந்தப்புதிய அதிகாரியை நோக்கிய வண்ணமே இதைச் சொன்னான். அதைக் கண்ட இன்ஸ்பெக்டருக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. இவை யாவற்றையும் கண்ட அப்புதிய அதிகாரி இன்ஸ்பெக்டரை நோக்கி, 'மிஸ்டர், உங்களில் உள்ள தவறு இதுதான்! உங்களுக்குச் சிக்கலான வழக்கு வந்திருக்கும் சமயங்களில், புது வழக்குக் கொண்டுவருபவர்களை, அவர்களது வழக்கு என்னவென்று விசாரிக்காமலேயே தள்ளி விடுகிறீர்கள்! ஆனால் சில சமயங்களிலே புதிதாக வரும்வழக்குகளும், உங்கள் சிக்கலுக்குக் காரணமாக இருக்கும் வழக்கின் சிக்கலைத் தீர்க்கலாமல்லவா! அதை மறந்து விடாதீர்கள்' என்று சற்றுக் கண்டிப்பாகக் கூறினார். இன்ஸ்பெக்டரின் முகத்தில் அசடு சாடி, சாடியாக வழிந்தது. சிறுவர்களுக்குமுன் புத்திமதி கேட்கும் போது அவருக்கு மகிழ்ச்சியாகவா இருக்கும்?

புதிய அதிகாரி இரண்டு நாற்காலிகளை இழுத்துப் போட்டு இருவரையும் உட்காரும் வண்ணம் கூறினார். அந்த உயர்தர அதிகாரிமுன் உட்கார அவர்களுக்குக் கூச்சமாக இருந்தது எனினும இவரது பண்பு இருவர்க்கும் மிகப்பிடித்தது. இருவரும் உட்கார்ந்தவுடன், 'விஷயம் முழுவதையும் தெளிவாக ஒருவர் கூறுங்கள்... எதையும் மறைக்கவோ, நீட்டவோ வேண்டாம்!... உள்ளது உள்ளபடி வரவேண்டும்!' என்றார்.

இன்ஸ்பெக்டர் இப்பொழுது அமைதியாக, ஆசிரியன் முன்னால் அமர்ந்திருக்கும் மாணவனைப் போல இருந்தார். அவரது கைகளில் ஒன்று ஒரு பென்சிலையும், மறுகை வெண்மையான தாளையும் வைத்துக் கொண்டிருந்தது. உயர்தர அதிகாரியின் ஏற்பாடுதான் அது!

ஸ்டெலின் நடந்தது முழுவதையும் தெளிவாகக் கூறினான். அந்த அதிகாரி ஆங்கிலேயராக இருக்கவேண்டும். ஏனெனில் ஸ்டெலின் ஜப்பானிய மொழியிற் கூறிக்கொண்டிருக்கும் போது சில சொற்களுக்கு ஆங்கில மொழியில் விளக்கம் கேட்டார். ஸ்டெலின் முழுவதையும் கூறிமுடித்தபின், அவ்வதிகாரி இன்ஸ்பெக்டரை மிகக் கடுமையாக நோக்கி, 'இந்தப் பையனது குறிப்பு உமது வழக்குக்கு எவ்வளவு உதவப்போகிறது என்பதை அறிந்திரா?' என்றார் அப்பொழுது சாடி சாடியாக வழிந்த அசடு இப்பொழுது குடம் குடமாக வழிந்தது. அவரது பேச்சைக் கேட்ட ஸ்டெலின் ஒருவித யூகத்துடன், 'நீங்களும் இதுபற்றிய வழக்கிற்றான் ஈடுபட்டுள்ளீர்கள்?' என்று கேட்டான். உயர்தர அதிகாரி அவனை விசித்திரமாகப் பார்த்தார். பின்னர், 'தம்பி! இது சாதாரணவழக்கல்ல! இந்த உலகத்திற்கே நேரப்போகும் இன்னலைத் தடுக்க வேண்டிய வழக்கு!.. தம்பி! நீ ஒரு அரசாங்க இரகசியத்தையே யூகித்து அறிந்துவிட்டாய்... ஆனால் நீயும் இதை அறிய வேண்டியவன்தான்... ஏனெனில் நீயும் இதற் சம்பந்தப்பட்டு விட்டாய்...ஆனால் நீ இங்கு கூறியவற்றை வேறு எவருக்கும் கூறிவிடாதே!...சட்டத்தின்படி பார்த்தால் உன்னைச் சிறையிலேயடைக்க வேண்டும்... ஏனெனில் அரசாங்கத்திற்குச் சிக்கல் தரும் வழக்கின் இரகசியத்தை அறிந்ததற்காக... நாம் பறக்குந் தட்டு பற்றிய விஷயமொன்றிலே துப்பறிகிறோம் என்ற விஷயமே வெளியிலே தெரியக் கூடாது... பறக்கும் தட்டு பற்றிய விவரம் மக்களிடத்திலே கிலியை யூட்டிவிடும்... இப்படியான விஷயங்களை நீ அறிந்ததற்காக உன்னைச் சிறையிலடைத்தால்... உன்னை தெரிந்தவர்களும் உண்மையை எமக்குச் சொல்லமாட்டார்கள்... சட்டம் ஒரு கழுதை; அதுமுன்னால் போனால் கடிக்கும்! பின்னால் போனால் உதைக்கும்... உன்னைப் பார்த்தால் புத்திசாலியாகத் தெரிகிறது... வெளியிலே விட்டுவிடாதே... விஷயம் வெளியிலேபோனால் உனது உயிருக்கும் ஆபத்து உண்டாகலாம்... உன்மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது... நாம் ஏன் இந்தப் பறக்கும் தட்டு விவகாரத்திலே வழக்கிலே ஈடுபடவேண்டுமென்று உனக்கு ஆவலாக இருக்கிறதல்லவா!... அது மிகப் பெரிய இராணுவ இரகசியம்... உனக்கு அதைச் சொல்லிவிடுகிறேன்...' என்று கூறிய அந்த அதிகாரி ஸ்டெலினை அருகிலழைத்து ஜோர்ஜிற்குக் கேட்காதவாறு சிலவிஷயங்களைக் கூறினார். ஸ்டெலினின் கண்கள் பிதுங்கின. 'உண்மையாகவா? அவ்வளவு பெரிய விஷயமா இது?' என்று வியந்தான், ஸ்டெலின்; பின்னர் அவ்வதிகாரி ஜோர்ஜிடம், 'தம்பி! இங்கு பேசியவை அரசாங்க விஷயம்... ஸ்டெலின் அதிற் சம்பந்தப்பட்டவனாதலாலே அவனுக்கு சில விஷயங்களை அந்தரங்கமாகக் கூறினேன்... நீ எதையும் வெளியே சொல்லிவிடாதே. விஷயம் வெளியிலே தெரிந்தால், நான் மட்டுமல்ல, பறக்கும் தட்டும் உங்களை வேட்டை ஆடிவிடும்! நீங்கள் இங்கு வந்ததே எவருக்கும் தெரியக்கூடாது.. புறப்படுங்கள்'' என்றார். மறு நிமிடம் ஒரு ஜீப் மாறுவேடமணிந்த அவ்வதிகாரியுடன் ஸ்டெலின், ஜோர்ஜ் இருவரையும் சுமந்து சென்றது இன்ஸ்பெக்டர் கொட்டக், கொட்ட விழித்துக்கொண்டு இருந்தார்.




---

குட்டிக் கதை:

### தலைவிதி

ஒரு மாட்டினுடைய தலையில் இருந்த கொம்பு அந்த மாடு இறந்த பின்பு எப்படியோ சீப்புச் செய்யும் ஒருவனின் கையில் சிக்கி அழகான ஒரு சீப்பாக மாறியது. பின்பு கடைக்குப் போனது. யாரோ ஒரு மனிதன் அந்த அழகான சீப்பை விலைக்கு வாங்கி வீட்டுக்கு எடுத்துச் சென்றான்.

ஒரு நாள் அவன் கண்ணாடியின் முன் நின்று தலை வாரிக் கொண்டிருந்த போது கண்ணாடியானது சீப்பைப் பார்த்து 'சீப்பே! சீப்பே! மாட்டினுடைய தலையில் வளர்ந்த நீ மனிதனுடைய தலைக்குத்தானே பயன்படுகிறாய்.... உன்னைச் சுமந்த மாட்டினுடைய தலையை நீ ஒரு நாளாவது வாரிவிட்டதுண்டா? இது என்ன கொடுமையாக இருக்கிறது!' என்று அனுதாபப்பட்டுக்கொண்டது.

அதற்கு அந்தக் கொம்புச் சீப்பிடம் இருந்து வந்த பதில் இதுதான்:- 'நான் என்ன செய்ய முடியும்...' அவரவர் தலைவிதி அப்படி!'

—காசி. ஆனந்தன்

---

## திங்களும் தாரகையும்

—ஈழபாரதி—

திங்கள், திங்கள் எனும் தங்கம்—எழில்
சிந்தும் பொழுதினில் இன்பம்
கங்குல் இருளதைத்
தங்கத்தொளி யதால்
பொங்கித் தொலைத்திடும் எங்கும் ஒளி
சிந்தி இறைத்திடும் இன்பம்

வண்ணம் வண்ணம் எனும் விண்மீன்—அது
வட்ட நிலவுதன் நண்பன்
கண்கள் சிமிட்டி வெண
கதிரைச் சுடர்ந்து எம்
எண்ணம் நிறைத்திடும் இன்பம்—அது
எழிலிற் சிறந்திடும் வெண் பொன்

மின்னல் மின்னல் என மின்னி—உளம்
மிதில் இழைத்திடும இன்பம்
சொன் நல் கவிதைகள்
என்னுள் சுரந்திட
பொன்னாய் ஒளிசெயும் திங்கள்—எழிற்
பூவாய் ஒளிர்ந்திடும் விண்மீன்

---

## எந்த ஆண்டில்

இந்த நாடுகள் எப்பொழுது டொமினியன் அந்தஸ்துப் பெற்றன?

(1) கனடா
(2) அவுஸ்திரேலியா
(3) நியூசிலாந்து
(4) பாக்கிஸ்தான்
(5) இந்தியா
(6) இலங்கை
(7) மலாயா
(8) நைஜீரியா
(9) சைப்பிரஸ்
(10) ஜமெக்கா

## இந்த ஆண்டில்

| | |
|---|---|
| 1. | 1867 |
| 2. | 1901 |
| 3. | 1907 |
| 4. | 1947 |
| 5. | 1947 |
| 6. | 1948 |
| 7. | 1957 |
| 8. | 1960 |
| 9 | 1960 |
| 10. | 1962 |

தொகுத்தவர்
இரா. கைலநாதன்,
மட்டுநகர்.

# 3வது வெற்றிகரமான வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) சபையர் (வெள்ளவத்தை) நவா (குட்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு)

ராஜ் (நீர்கொழும்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) பராசக்தி (கிளிநொச்சி) கௌரி (மதுரங்குளி)

ஆகிய திரைகளில்



எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, கே. பி. சுந்தராம்பாள், டி. வி. நாராயணசாமி, நாகேஷ், மனோரமா, ராஜ்ஸ்ரீ

நடித்த

மேகலா பிக்சர்சாரின்

## பூம்புகார்

★ கற்புக்கரசியின் வீரமிக்க வரலாறு இது!

★ "ஒரு முறை கண்டேன் மறுமுறை காண்பேன்" என பேரறிஞர் அண்ணா போற்றிய திரையோவியம்!

## எமது அடுத்த மாபெரும் வெளியீடு!

● தத்தை நெஞ்சம் முத்தத்திலே தித்தித்ததா இல்லையா?

நாகேஷ்-முத்துராமன்-கே. ஆர். விஜயா-காஞ்சனா

ஆகியோர் நடித்த



## சர்வர் சுந்தரம்

# 5வது வெற்றி வாரம்!

எல்பின்ஸ்டன் (மருதானை) ரொக்ஸி (வெள்ளவத்தை) நெல்சன் (திருகோணமலை)

வின்ட்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டக்களப்பு) கிங்ஸ் (பதுளை) பிறின்ஸ் (அட்டன்)

ஆகிய திரைகளில்!

எம். ஜி. ராமச்சந்திரன்—ஜெயலலிதா – நாகேஷ்

மற்றும் ஆயிரக்கணக்கான நடிகர்கள் தோன்றும்

## ஆயிரத்தில் ஒருவன்

(ஈஸ்ட்மென் கலர்)



செல்லமகால் [கொட்டாஞ்சேனை]

8வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

ஜெமினி கணேசன்—தேவிகா—முத்துராமன்—நாகேஷ்—ரங்கராவ்—ராஜம்மா

நடிக்கும்

ஜெமினியின்

## வாழ்க்கைப் படகு

# வெற்றி முரசு கொட்டும் 2வது மகத்தான மாதம்!

சென்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) லிபேர்டி (ஹட்டன்) ஜோதி (திருமலை) ஈஸ்வரன் (கிளிநொச்சி)

★ கல்லூரியில் தொடங்கும் காதல்—போர்க் களத்தில் முடிவுறுகிறது!

★ போர்க் களம் அவ்விளங் காதலரின் தியாக பீடமாக மாறுகிறது!

★ இப் பின்னணியில் கட்டியெழுப்பப்பட்ட படம்—இலட்சியப் படைப்பாக மிளிர்கிறது!



நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

நடிகையர் திலகம் சாவித்திரி

மற்றும்

நாகேஷ்-மனோரமா-புஷ்பலதா-கண்ணப்பா

ஆகியோர் நடித்த

நஷனெல் மூவீஸ்

## இரத்தத் திலகம்

பாடல்கள்: கண்ணதாசன் இசை: 'இசைத் திலகம்' கே. வி. மகாதேவன் டைரக்ஷன்: தாதா மிராஸி

"பசுமை நிறைந்த நினைவுகளே! பாடித் திரிந்த பறவைகளே...!"


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 196 ஏ, இலக்கத்தில் 1966-ம் வருடம் சனவரி மாதம் 4-ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.